# நட்சத்திரப் பொருத்தமும் பலனும்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

T. 24759

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 586

# நட்சத்திரப் பொருத்தமும் பலனும்

(விரும கண்டிகை)

*சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர்,*

**மூ. நேரு,** எம்.ஏ.,பி.எல்.ஐ.எஸ்.,

பதிவுரு எழுத்தர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்
மற்றும்
ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

2017] [விலை: ரூ. 100-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | நட்சத்திரப் பொருத்தமும் பலனும் (விரும கண்டிகை) |
| பதிப்பாசிரியர் | : | திரு. மூ. நேரு, சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர், |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 586 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2017 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 21 X 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 152 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | ஜோதிடம் |
| ISBN | : | 978-93-85343-24-7 |
| விலை | : | ரூ. 100/- |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சைக்கு பெருமை சேர்க்கும் பெரியகோயிலும், மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் சிறப்புற்றுத் திகழும் பல்லவ, சோழ, பாண்டிய, நாயக்க, மராட்டிய மரபு மன்னர்களின் எச்சங்களாகத் திகழும் கோயில்களும், வரலாற்றுச் சின்னங்களும், கலைக்கருவூலமாகத் திகழும் தஞ்சைக் கலைக்கூடமும் மேலும் எண்ணற்ற வரலாற்று நினைவுச் சின்னங்களையும் கொண்ட இம்மாநகரில் நூற்றாண்டுகால பெருமைமிகு அறிவுக் கருவூலமாய்த் திகழ்வது தஞ்சை சரசுவதி மகால் நூலகமாகும்.

சிறப்புமிக்க சரசுவதி மகால் நூலகத்தில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி மொழிகளில் பனை ஓலைச்சுவடிகளும், காகிதச்சுவடிகளும் பாதுகாக்கப்பட்டு மக்களுக்கு பயனளித்து வருகின்றன. அந்த வகையில் நூலகத்தின் தமிழ் ஓலைச்சுவடிகளில் இலக்கணம், இலக்கியம், மருத்துவம், சோதிடம், கணிதம், வானியல் போன்ற பொருண்மைகளில் பனை ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருவதோடு அவை மொழிப் பண்டிதர்களாலும், துறை சார்ந்த அறிஞர்களாலும் பதிப்பிக்கப்பெற்று நூலக வெளியீடாக வெளியிடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. நட்சத்திரப் பொருத்தமும், பலனும் என்ற நூல் தற்பொழுது முதல் பதிப்பாக வெளிவருகின்றது. பொதுவாக சோதிடம் குறித்த செய்திகள் தமிழ் இலக்கியத்தில் பன்னெடுங்காலமாக பேசப்பட்டு வருகின்றது. அசுவதி முதல் ரேவதி வரை உள்ள 27 நட்சத்திரங்களையும், 12 இராசிகளையும் குறித்த செய்திகளை சங்க நூல்களில் பரக்கக் காணலாம். சிறப்பு வாய்ந்த சோதிட வித்தகர்களை காலக்கணியர் என்று இலக்கியம் சுட்டுகின்றது.

இந்நூலில் பிறந்த நேரத்தில் ஒரே தசை ஆரம்பமாகும் மூன்று நட்சத்திரங்கள் கூறப்பட்டு, அம்மூன்று நட்சத்திரத் திற்கும் பிறந்த நேரம் முதல் 120 ஆண்டுகள் வரையிலான தசைகள் வரிசைப்படி கூறப்பட்டுள்ளன. அதன்பின் அந்தந்த

தசை, புத்திகளில் என்னென்ன பலன்கள் உண்டாகும் என்பது விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் மேலும் அந்தந்த நட்சத்திரங்கள் அமைந்துள்ள அந்தந்த நாளுக்குரிய தெய்வம், கணம், விருட்சம், பறவை போன்றவற்றின் வடிவம் அந்நாளில் மேற்கொள்ள வேண்டிய செயல்கள் நட்சத்திரப் பொருத்தங்கள், திருமணப்பொருத்தங்கள், திசாப்புத்திகள் பற்றியும் கோள் நிலைகளின் சஞ்சாரம் எவ்வாறு அமைகிறதோ அவ்வாறே மானிட வாழ்க்கையிலும் ஏற்படும் பல மாறுதல்கள் பற்றியும் ஒரு சாதகர் பிறந்த நேரத்தில் ராசி மண்டலத்தில் இருக்கும் கோள்நிலைகளைக் கொண்டு, அச்சாதகரின் வாழ்வில் நடக்க இருப்பவற்றை கணித்துச் சொல்லும் விதமாகவும் பதிப்பிக்கப் பட்டுள்ள இந்நூலினை இந்நூலகப் பணியாளர், பதிவுரு எழுத்தர் திரு. **மூ. நேரு,** M.A., B.L.I.S., அவர்கள் சிறப்பாக பதிப்பித்துள்ளார். அவருக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதி உதவி வழங்கிய அரசுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நூலக வெளியீடாக நட்சத்திரப் பொருத்தமும் பலனும் என்ற நூல் வெளிவர துணை நின்ற நூலக நிருவாக அலுவலர் திருமதி **வீ. கிருஷ்ணவேணி, B. A.,** அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ்.சுதர்ஷன்,** M.A.,B.Lit..M.L.I.S.Ph.D அவர்களுக்கும், நூலகத் தமிழ்ப்பண்டிதர் திரு. **மணி.மாறன்,** M.A.,(T),M.A.,(H),B.L.I.S., Dip.,in Sanskrit. அவர்களுக்கும், கணினியில் அச்சிட்டளித்த நூலகப் பணியாளர்களுக்கும், அச்சகப் பிரிவு பணியாளர்களுக்கும், ஏனையோருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆ. அண்ணாதுரை,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்.

தஞ்சாவூர்,
10-07-2017

# பதிப்புரை

பிரமன் தன் படைப்புத் தொழிலுக்கு உறுதுணை யாக இருக்கும் பொருட்டு சிற்சில ரிஷிகணங் களைத் தோற்றுவித்தார். அத்தகைய ரிஷி கணங்களின் மூலமாக ஜீவராசிகளின் பெருக்கத்தை வெகுவாக ஏற்படுத்த அனுக்கிரகமும் அளித்தார்.

ஏது எப்படி இருந்தபோதிலும், ஆக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் பிரமனுடைய சக்திக்கு உட்பட்டதுதான் என்பது நியதி. அதற்கு சிவன் தமது அருளை அவ்வப்பொழுது அருளி, ஜீவராசிக்கு உண்டான ஏழு வகையான பண்பாட்டினை "பிரமலிபி" என்ற பெயரில் ஒரு தேவரகசியமாக அருள்பாலித்து வந்தான். இதுவே "தலை எழுத்து" என்றும், "ஊழ்வினை" என்றும், "விதி" என்றும் பெயர் பெறுகிறது.

ஒவ்வொரு ஜீவராசியை படைக்கும்போது, நான் முகனான பிரமன், 1. ஆயுள், 2. தொழில், 3. பொன், 4.வித்தை, 5. செல்வம், 6. எழில், 7. மரணம் ஆகிய ஏழும், அந்த ஜீவராசிக்கு எப்படி எப்படி அமையவேண்டும் என்பதை நிர்ணயம் செய்ய சிவபெருமானுடைய அனுக்கிரகத்தைப் பெறுகிறார் என்பது ஒரு தேவரகசிய மாகும். அது எவ்வளவு தூரம் உண்மை என்பதைப் பற்றி கீழ் உள்ள பாடலில் இருந்து கண்டறியலாம்.

**அவரவர் தமக்கு உள்ள**
**ஆயுசும் தொழிலும் பொன்னும்**
**இவர்களின் வித்தை செல்வம்**
**எழில்மர ணங்கள் ஏழும்**

நட்சத்திரத்தைக் கொடுத்து, அந்த நட்சத்திரத்திற்குப் பத்தாவது நட்சத்திரமும் பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளன.

சோதிடக் கலையில் வல்லவர்கள் ஒரு மனிதனுக் குரிய நீண்ட ஆயுள் என்பது 120 ஆண்டுகள் என்று கணித்துள்ளார்கள். அந்நாட்களில் ஒவ்வொரு கிரகமும் ஆட்சி செய்யும் கால அளவு தசை எனப்படும். அந்தந்த கிரகங்களுக்கு ஏற்ப இந்த தசாபுத்தி மாறுபடும்.

அதன் விவரம்:- 1. கேது-ஏழு ஆண்டுகள், 2. சுக்கிரன்-இருபது ஆண்டுகள், 3. சூரியன்-ஆறு ஆண்டுகள், 4. சந்திரன்-பத்து ஆண்டுகள், 5. செவ்வாய்-ஏழு ஆண்டுகள், 6. ராகு-பதினெட்டு ஆண்டுகள், 7.குரு-பதினாறு ஆண்டுகள், 8. சனி-பத்தொன்பது ஆண்டுகள், 9. புதன்-பதினேழு ஆண்டுகள். ஆக மொத்தம் 120 ஆண்டுகள்.

ஒவ்வொரு தசையும் 9 புத்திகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு கிரகத்தின் தசையிலும் ஒன்பது கிரகங்களும் வந்து ஆட்சி செய்யும் காலப்பகுதி ‘புத்தி’ எனப்படுகிறது. ஒரு சாதகருக்கு சுக்கிரதசை ஆரம்ப மாகிறது என்றால், சுக்கிர புத்தி முதல் புத்தியாக வரும். அதனைத் தொடர்ந்து வரிசையாக சூரியன், சந்திரன், செவ்வாய், ராகு, குரு, சனி, புதன், கேது முதலான புத்திகள் அமையும். புத்திகளுக்கு உரியவர்களின் நிலை நல்லதா? தீயதா? என்பதை கொண்டு அக்காலங்களில் நல்ல பலன் அல்லது தீய பலன்கள் உண்டாகும். இதனால் ஒரு குறிப்பிட்ட தசையில் முழுவதும் அவனுக்கு யோக பலன்களோ அல்லது தீய பலன்களோ கிட்டாது என்பதை அறிதல் வேண்டும். ‘புத்தி’ என்பதே சரியானது என்றாலும் ‘புக்தி’ என்றே வழங்கப்பட்டு வருகிறது.

**நட்சத்திரங்களும் முதல் தசைகளும்:-**

| | |
|---|---|
| 1. அசுவதி, மகம், மூலம் | கேது தசை |
| 2. பரணி, பூரம், பூராடம் | சுக்கிர தசை |
| 3. கிருத்திகை, உத்திரம், உத்திராடம் | சூரிய தசை |
| 4. ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் | சந்திர தசை |
| 5. மிருகசீரிடம்,சித்திரை,அவிட்டம் | செவ்வாய் தசை |
| 6. திருவாதிரை, சுவாதி, சதயம் | ராகு தசை |
| 7. புனர்பூசம், விசாகம், பூரட்டாதி | குரு தசை |
| 8. பூசம், அனுஷம், உத்திரட்டாதி | சனி தசை |
| 9. ஆயில்யம், கேட்டை, ரேவதி | புதன் தசை |

அசுவதி, மகம், மூலம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு கேது தசையும், பரணி, பூரம், பூராடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு சுக்கிர தசையும் ஆரம்பமாகும். இது போன்றே மேலே குறிப்பிட்டுள்ளபடி முதல் தசை ஆரம்பமாகும். இவ்வாறு அவரவர்கள் பிறந்த நேரத்தில் எந்த தசை ஆரம்பமாகும் என்பது தெரிகிறது.

பதிப்பிக்கப்பட்டுள்ள நூலில், பிறந்த நேரத்தில் ஒரே தசை ஆரம்பமாகும் மூன்று நட்சத்திரங்கள் கூறப்பட்டு அம்மூன்று நட்சத்திரத்திற்கும் பிறந்த நேர முதல் நூற்று இருபது ஆண்டுகள் வரையிலான தசைகள் வரிசைப்படி கூறப்பட்டுள்ளன. அதன்பின், அந்தந்த தசை, புத்திகளில் என்னென்ன பலன்கள் உண்டாகும் என்பது வரிசையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**நட்சத்திரங்கள்:-**

நட்சத்திரங்கள் யாவும் ஒரே ராசியில் அடங்குவது இல்லை. ஒரு சில நட்சத்திரங்கள் தான் முழுமையாக ஒரே ராசியில் பொருந்தும். அப்படியின்றி இரண்டு ராசிகளில் அடங்கும் (பொருந்தும்) நட்சத்திரங்களின் தன்மைக்கேற்ப காலற்ற, உடலற்ற, தலையற்ற நட்சத்திரங் களாகப் பிரித்து கூறுவதுண்டு.

**காலற்ற நட்சத்திரங்கள்:-**

கிருத்திகை, உத்திரம், உத்திராடம் இம்மூன்று நட்சத்திரங்களின் ஒரு பாதம் ஒரு ராசியிலும், மற்ற மூன்று பாதங்கள் வேறு ராசியிலுமாக உள்ளன. ஆதலால் இதை காலற்ற நட்சத்திரங்கள் என்பர்.

**உடலற்ற நட்சத்திரங்கள்:-**

மிருக சீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகிய மூன்று நட்சத்திரங்களின் இரண்டு பாதங்கள் ஒரு ராசியிலும் ஏனைய இரண்டு பாதங்கள் அடுத்த ராசியிலுமாக அடங்குவதால் இதை உடலற்ற நட்சத்திரங்கள் என்பர்.

**தலையற்ற நட்சத்திரங்கள்:-**

புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய மூன்று நட்சத்திரங்களின் முதல் மூன்று பாதங்கள் ஒரு ராசியிலும், நான்காம் பாதம் மறு இராசியிலும் அடங்குவதால் இதனை தலையற்ற நட்சத்திரங்கள் என்பர்.

**ஊர்த்துவ முக நட்சத்திரம்:-**

***மேல்நோக்கு நாள்***

| | | |
|---|---|---|
| ரோகிணி | திருவாதிரை | பூசம் |
| உத்திரம் | உத்திராடம் | திருவோணம் |
| அவிட்டம் | சதயம் | உத்திரட்டாதி |

ஆகிய ஒன்பதும் ஊர்த்துவ முக நட்சத்திரம் என்பர். இது மேல்நோக்கு நாள் ஆகும். இந்த நட்சத்திரங்கள் சுபகாரியங்கள் செய்வதற்கு உகந்தது. அரசு சார்பிலான புதிதாக பதவியேற்றல், உப்பரிகை, கொடிமரம், மதில் வாசற்படி கட்டுதல், சாலை அமைத்தல், பந்தல் போடுதல் இவைகளுக்கு ஏற்றதாகும்.

**அதோ முக நட்சத்திரம்:-**

***கீழ்நோக்கு நாள்***

| | | |
|---|---|---|
| பரணி | கிருத்திகை | ஆயில்யம் |
| மகம் | பூரம் | விசாகம் |
| மூலம் | பூராடம் | பூரட்டாதி |

ஆகிய ஒன்பதும் அதோ முக நட்சத்திரம் என்பார்கள். அதாவது கீழ்நோக்கு நாள் என்பர். இந்த நட்சத்திரங்கள் குளம், கிணறு, புதையல் தோண்ட, களஞ்சியம் அமைக்க, வேலிகட்ட, கணிதம் கற்க, கிரகப் பிரவேசம் செய்ய ஏற்றதாகும்.

**திரியக்முக நட்சத்திரம்:-**

***சமநோக்கு நாள்***

| | | |
|---|---|---|
| அசுவனி | மிருகசீரிடம் | புனர்பூசம் |
| அஸ்தம் | சித்திரை | சுவாதி |
| அனுஷம் | கேட்டை | ரேவதி |

இந்த ஒன்பதும் திரியக் முக நட்சத்திரம் அதாவது சம நோக்குநாள் என்பதும், புறமுக நட்சத்திரம் என்பதும் இதுவே ஆகும். இந்த நட்சத்திரம் கால்நடைகள் வாங்கவும். ஏற்றம் இறைக்கவும், உழவுத் தொழிலுக்கு கால்வாய் வெட்டுவதற்கும், வாசற்கால் வைக்கவும், தூண் வைக்கவும், வேளாண் தொழில் செய்யவும் ஏற்றதாகும்.

ஜோதிடம்-முக்காலமுணர்ந்த முனிவர்களாலும், சித்தர்களாலும் தோற்றுவிக்கப்பட்டு, காலம் காலமாக வாய்மொழியாக வழங்கி வந்து, பிற்காலத்தில் ஓலைச் சுவடிகளில் எழுதிவைக்கப்பட்டன. வானத்தில் எவ்வாறு கிரகங்கள் சஞ்சாரம் செய்கின்றனவோ அவ்வாறே மானிட வாழ்க்கையிலும் கிரகங்கள் மூலமாகப் பல மாறுதல்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கும் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். அவர்கள் ஒரு சாதகன் பிறந்த நேரத்தில் இராசி மண்டலத்திலிருக்கும் கிரகங்களின் நிலைகளைக் கொண்டு, அவர்கள் வாழ்வில் நிகழ இருப்பவற்றை கணித்துக் கூறியுள்ளார்கள்.

இத்தகைய பலன்களைக் கணிப்பதற்கு உதவும் பஞ்ச அங்கங்களுள் ஒன்றாக விளங்குவது நட்சத்திரங்கள். நட்சத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு, சாதகனின் குணங்களையும் ஆயுளையும் உரைப்பதாக இந்நூல் அமைந்துள்ளது. நட்சத்திரங்களைக் கொண்டு திருமணப்பொருத்தத்தைக் காணும் முறைகளையும், நட்சத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு காணும் உடுதசா பலன்களைக் காணும் முறைகளையும் எடுத்துரைக்கும் வகையில் நட்சத்திரப் பலனும் பொருத்தமும் அமைந்துள்ளது. இவ்விரு நூல்களையும் பதிப்பிற்கு எடுத்துக்கொண்டுள்ளதால், இந்நூலுக்கு நட்சத்திரப் பொருத்தமும் பலனும் (விருமண்டிகை) என்ற தலைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

**பதிப்பு நூல்:-**

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள நட்சத்திரப் பொருத்தம்(808a) என்ற

சுவடியும், விரும கண்டிகை (808c) என்ற சுவடியும் பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்விரு சுவடிகளில் விரும கண்டிகை என்னும் நூல் பன்னிரு இராசிகளின் பலன்களையும் அசுபதி முதல் ரேவதி ஈறாக அமைந்துள்ள 27 நட்சத்திரங்களில் பிறந்தவர்களின் பெயர்களில் அமைய வேண்டிய முதல் எழுத்துக் களையும், குணங்களையும் எடுத்துரைக்கின்றது.

மேலும் அந்தந்த நட்சத்திரங்கள் அமைந்துள்ள நாளுக்குரிய தெய்வம், யோகினி, சாதி, பூதம், யோனி, கணம், விருட்சம், பறவை, கயிறு முதலானவற்றையும் அவற்றின் வடிவம், அந்நாட்களில் மேற்கொள்ள வேண்டிய செயல்கள் முதலானவற்றையும் எடுத்துரைக் கிறது. இவையன்றி ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் உரிய நான்கு கால்களில் பிறந்தவர்களுக்குரிய ஆயுள் நிர்ணயமும் இந்நூலில் விரிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது. நட்சத்திரப் பொருத்தம் நூலில் திருமணப் பொருத்தங்கள் குறித்த செய்திகள் முதன்மையாகக் கூறப்பட்டுள்ளன. மேலும், திசாபுத்திகள் குறித்த செய்தி களும் அமைந்துள்ளன. அவை நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளன. திருமணப்பொருத்தங்களுக்கு இடையே தறிக்கால்(சோதிடத்தில் பலன் சொல்ல உதவும் உறுப்பு) அறியும்படி என்ற பகுதி அமைந்துள்ளது. இது அந்நூலின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ளது. அது எந்தெந்த இராசிகளில் எந்தெந்த நட்சத்திரக் கால்கள் அமைந்துள்ளன என்பதை தெளிவாக எடுத்துரைக்கிறது. இதனையடுத்து தசாபுத்திகள் குறித்த செய்திகள் கூறப்பட்டுள்ளன.

**திருமணப்பொருத்தம் :-**

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்று கூறுவர். ஆனால் விதியை மதியால் வெல்லலாம். இன்று

திருமணங்கள் சாதகங்களால் நிச்சயிக்கப்படுகின்றன எனலாம். திருமண பந்தம் என்கிற உறவிற்குத் திருமணப் பொருத்தம் பார்ப்பது மரபு. பலரும் ஆண், பெண்ணின் நட்சத்திரங்களின் அடிப்படையில் பொருத்தத்தைப் பார்த்துவிட்டு, பொருத்தம் இருக்கிறது ஏன் இதை அமைக்கக்கூடாது என்று கேட்கிறார்கள். திருமணப் பொருத்தம் பார்ப்பதற்கு முன்பு ஆயுள், குடும்பம், சுகஸ்தானம், புத்திரஸ்தானம், களத்திர ஸ்தானம், திசாபுத்தி ஆகியவற்றை ஆண், பெண் ஆகிய இருவருக்கும் பார்த்த பின்புதான் மணப்பொருத்தங்களைப் பார்க்க வேண்டும்.

திருமணப் பொருத்தங்களைப் பார்க்கும் சோதிடர்கள், தினப்பொருத்தம், கணப்பொருத்தம், மாகேந்திரப் பொருத்தம், ஸ்திரீ தீர்க்கப்பொருத்தம், யோனிப் பொருத்தம், இராசிப் பொருத்தம், இராசி அதிபதிப் பொருத்தம், வசியப்பொருத்தம், கயிறு பொருத்தம் எனப்படும் ரச்சுப் பொருத்தம், நாடிப் பொருத்தம் ஆகிய பத்துப் பொருத்தங்களைப் பார்ப்பது வழக்கம். இந்த பொருத்தங்களில் நட்சத்திரப் பொருத்தம் எனப்படும் தினப்பொருத்தம், கணப்பொருத்தம், யோனிப் பொருத்தம், ராசிப் பொருத்தம், ரச்சுப் பொருத்தம் ஆகியவை மிகவும் முக்கியமானவை என்று கூறுவர். இந்த ஐந்து பொருத்தங்களும் ஆண், பெண் ஆகிய இருவரின் சாதகத்தில் பொருந்திருப்பின், இவர்கள் இருவருக்கும் திருமணம் செய்யலாம் என்பது சோதிடர் கருத்து.

இந்நூலில் ஏக நாள் பொருத்தம், கணப்பொருத்தம், யோனிப் பொருத்தம், இராசிப் பொர்ருத்தம், பட்சிப் பொருத்தம், கயிற்றுப் பொருத்தம், விருட்சப் பொருத்தம், சாதிப்பொருத்தம் ஆகிய எட்டுப் பொருத்தங்கள் பற்றி

கூறப்பட்டுள்ளன. பிற பொருத்தங்கள் குறித்த செய்திகள் இச்சுவடியில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இந்நூலின் உரையில் ஏதேனும் தவறுகள் இருந்து தெரிவித்தால் அதனை மறுபதிப்பில் சரி செய்து அச்சிட உதவியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சுவடிப் பதிப்பில் திருமணப்பொருத்தங்களை அடுத்து, தசாப்புத்தி பற்றிய செய்திகள் கூறப் பட்டுள்ளன.

நட்சத்திரப் பொருத்தமும் பலனும் (விரும கண்டிகை) என்னும் இந்நூலினை பதிப்பிப்பதற்கு ஆணை வழங்கிய முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் திரு. **டாக்டர் என்.சுப்பையன்,** இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூல் வெளிவருவதற்கு உதவிய முன்னாள் நிருவாக அலுவலர் திருமதி **அ. பூங்கோதை,** எம்.ஏ.,அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் சரசுவதி மகால் முன்னாள் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. **இரா.ஜெய்னுலாப்தீன்,** M. Sc., அவர்களுக்கும், என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

நூல்கள் மறைந்து வரும் இக்காலக்கட்டத்தில் அதன் முக்கியத்துவத்தினை அறிந்து நூல்களை வெளிக்கொண்டு வந்து மக்களுக்கு பயனைடையச் செய்யும் விதமாக வெளியிடும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் **ஆ. அண்ணாதுரை,** இ. ஆ. ப., அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்நூல் வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் திருமதி **வீ. கிருஷ்ணவேணி,** **B.A.,** அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M.A., B.Lit. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், இந்நூல் எழுத எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த நூலகத் தமிழ்ப்பண்டிதர் திரு. **மணி. மாறன்,** M.A.,(T),M.A.,(H),B.L.I.S., Dip.,in Sanskrit. அவர்களுக்கும், இந்நூலை பதிப்பிப்பதற்கு நுண்ணாய்வு வழங்கிய திருமதி முனைவர் **சத்தியபாமா காமேஸ்வரன்** அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூலை நன்கு அச்சிட்டுத் தந்த நூலக ஒளி அச்சுக்கோப்புப் பிரிவினருக்கும், நல்லமுறையில் பிரிண்டிங், பைண்டிங் செய்த பணியாளர்களுக்கும் மற்றும் நூலகப் பணியாளர் களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மூ. நேரு,** எம்.ஏ.,பி.எல்.ஐ.எஸ்.,
**சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்**

# நட்சத்திரப் பலன்

## (விரும கண்டிகை)

### 1. அசுவினி நட்சத்திரத்தின் பலன்கள்

செய்யவினை தெரிந்து செய்வன் செய்யவே யார்க்கு நல்லன்
பையறு மணியும் பொன்று மகிழ்ச்சியா யணிய வல்லன்
பொய்யுரை யென்றுஞ் சொல்லான் புகழ்பெற வாழ வல்லன்
ஐயமிட் டுண்ண னல்லன் னசுவினி நாளி னானே.

*அசுவினி நட்சத்திரத்தில் பிறந்த குழந்தைகளுக்கு சூ - சே - சோ - லா என்று முதல் எழுத்தில் தொடங்கும்படி பெயர் வைக்கலாம்.*

### மேஷ ராசியின் பலன்

வடவரை யாய வல்லன் வஞ்சக மனத்த னாகும்
மடமொடு கெடுதி சொல்வன் நெளவிய மிகவு முண்டாம்
வடமொடு மணியும் பூவு மகிழ்ச்சியா யணிய வல்ல
னிடரது புரிய வல்ல னினியதோர் மேடத் தானே.

*இப்பலன்: அசுவினி-பரணி-கார்த்திகை நாலுங் கொண்டது. மேஷமாதலால் அவ்வொன்பது பாதத்திற்குங் கொள்க.*

### அதிதேவதை முதலியவைகள்

இந்நாளினுக்குத் தெய்வம் விக்கினேஸ்வரன். யோகினி-மஹேஸ்வரி, ஜாதி-பிராமணன், பூதம்-பிரிதிவு, யோனி-ஆண்குதிரை, கணம்-தெய்வம், விருட்சம்-எட்டி, பட்சி-இராஜாளி, பாதத்தில்-கயிறு, இந்த நட்சத்திரம்

குதிரைத்தலை போன்றிருக்கும். இந்நாளினுக்கு 15 நாளிகைக்குமேல் 4 நாழிகை விடயம், சித்திரை மாதம் சூனியம்.

இந்நாளில் விதையெடுக்க தெளிக்க, மனைகோல, விவாகஞ்செய்ய, பொன் பூஷண தானம் பண்ண, வாழை வைக்க, தெய்வ பூசை செய்ய, கோடியுடுக்க இவை முதலான சகல காரியத்துக்கும் நன்று.

இந்நாளில் பிரதேசம் போகலாகாது, போக நேரிட்டால் பாலுஞ் சோறும் புசித்துப் போகவும். இந்நாளில் வருஷம் பிறக்கும். அகந்தாழும், வியாதி தோன்றில் பத்து நாளில் விடும். விடாதபோது பரிகாரம்; நெய்யாலே ஓமஞ்செய்து அரசங்கொழுந்தும், கருப்பஞ் சாறும் கலந்து நீர்க்கரையில் விட்டு விருட்சத்தடியில் வியாதிகட்குரிய உச்சாடனம் செபித்துச் சமுத்தால் ஓமம் பண்ணவும்.

இந்நாளிற் பிறந்தவன் இலட்சணமுடையவன், முன்கோபி, வித்தையுடையவன், பெருமையுடையவன், மூக்கு உயர்ந்திருக்கும், சீமானாயிருப்பான், தாம்பூலப் பிரியன், பாட்டு•கூத்து பூசை விருப்பமுடையவன், அலங்காரமுடையவன், பிரியபக்தியுடையவன், புளிக்கறி சுகாதிகளில் விருப்பமுடையவன், ஸ்திரீகட்கன்பன், பசி பொறான், மனிதர் பிரியமுடையவன், மார்பு, நெற்றி உயர்ந்திருக்கும். உத்தம குணத்தான், முன்புறங்களிலும் பாதத்திலும் முகத்திலும் மருவுண்டு.

### அசுவினி முதற்கால் மேஷச் செவ்வாயின் பலன்

**குருகிய புருவ மெய்யன் குறளைசேர் குதலை வாயன்**
**மருகிய மனத்தன் பெண்மேல் வன்பொருள் சார னில்லான்**
**மருகிய கொடுமை செய்வான் முதுகிலே சுழியு முண்டாம்**
**சிரிதரு கூந்தல் பேணுக் சேயினங் கிசத்தி னானே.**

இதற்குக் காலச்சக்கரம்: *மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-10, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-10 ஆக வயது 100.*

**இரண்டாங்கால் ரிஷப வெள்ளியின் பலன்**

தெள்ளிய தியாகி நல்லன் சேயிழை யாரைப் பேணு
மொள்ளிய கண்ணில் வேளா னுட்பொருள் சார நில்லான்
பள்ளியிற் பலவுங் கற்கும் பாக்கிய முடைய னாகும்
வெள்ளியங் கிசத்தில் வந்த விருப்புடைக் கருத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *மகரசனி-4, கும்பசனி-4, மீன வியாழன்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-8, சிங்காதித்தன்-9, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9 ஆக வயது 85.*

**மூன்றாங்கால் மிதுன புதன் பலன்**

மேதைய னழகன் சால வேந்தரால் விருப்ப முண்டோன்
மாதுமா லுருவ மாகு மனம்பொறுக் கரிய வொண்ணான்
றாதுபோர் குழலா டன்மேற் றன்பொருட் சார நில்லான்
மீதுறை வலக்கை வேலான் மிதுனவங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷ செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5 கடக சந்திரன்-21 ஆக வயது 83.*

**நான்காம் கால் கடக சந்திரன் பலன்**

தலையது தடிய னாகுந் தன்மனம் பெரியோ னாகும்
மலைதரும் வல்ல பத்தன் வடிவுடன் சிறந்த மேனி

கலைபல நன்றாய்க் கற்குங் கடிமதி காளை யாகும்
மலையென வளர்த்த தோளான் மதியினங் கிசத்தி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *கடக சந்திரன்-21, சிங்கா தித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகர சனி-கும்பசனி-4, மீன வியாழம்-10 ஆக வயது-86.*

**இனி மகாதிசை :** *கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-9, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-18, இராஜா-16, சனி-19, புதன்-17 ஆக வயது 126, கேதுவின் திசையால் கண்டம் அன்றியும்-5ல் வெதுப்பால், 8ல் சிலந்தியால் வயிற்று நோயால், 13ல் கண்ணோய், 16ல் வயிற்று நீரால், 21ல் விஷத்தால், 37ல் ஸ்திரீகளால், 40ல் நாற்கால் மிருகத்தால், மருந்திடு கருவியால், 42ல் இராஜாவால், 70ல் சத்துருக் களால், 83ல் வெதுப்பால், வயிற்றுக்கடுப்பால், 86ல் மூல வியாதியால் கண்டம். 95ல் வயது புகுந்து சித்திரை மாதம் பூர்வபட்சம் திரையோதசி செவ்வாய்க்கிழமை உரோகணி நாளுதித்து 7 நாழிகையில் நாற்கால் மிருகத்தால் மரணம்.*

**இவனுக்கு :** *ஆதித்தன் உதயமாகில் சீமானாவான், சந்திரனுதயமாகில் அமுதவாக்குடையவன், தனவா னாவான். செவ்வாய் உதயமாகில் அழகும், செம்மையும வெகு வித்தையும் பண்டிதனும் பிரபுமாவான்.*

*புதன் உதயமாகில் கல்வியுடையவன். வியாழமுதய மாகில் மந்திரியாவான். வெள்ளி உதயமாகில் தரித்திரன்.*

*இந்த நட்சத்திரம் கடக சந்திரனில் 4 நாழிகை செல்லும்.*

**அசுவினி நட்சத்திரத்தின் பலன் முற்றும்.**

## 2. பரணி நட்சத்திரத்தின் பலன்கள்

**தானங்கள் விரும்பி செய்யுந் தந்தைதாய் மிகவும் பேணும்**
**மானமது ஞானமும் விரும்பி கற்குநற்றமிழ் விரும்பிக் கேட்கு**
**மானமது டையோ னாகும் வருநிதி பொருந்தி வாழும்**
**போசனச் செல்வ முண்டாம் புகழ்பெரு பரணி யானே.**

பரணி நட்சத்திரத்தில் பிறந்த குழந்தைகளுக்கு லி-லூ-லே-லோ என்ற முதல் எழுத்தாகக் கொண்டு பெயர் வைக்கலாம்.

இந்நாளினுக்குத் தெய்வம் ஆதித்தன், பூதம்-பிருதிவி, ஜாதி-க்ஷத்திரியன், கோத்திரம்-விஸ்வாமித்திரன், யோனி-யானை. பட்சி-காகம், விருட்சம்-நெல்லி, கணம்-மனுஷன் முழங்காலில் கயிறு.

இந்நாளிற் பிறந்தவன் போகனாயிருப்பான். முன்கோபி, வித்தைக்கு நல்லவன், வழிபாடுடையவன், அழகன். மூக்கு உயர்ந்திருக்கும். இந்நாளில் பெண்திரளில் பெறுவான். வருஷம் பிறக்கில் அகந்தாழும்.

இந்நாளினுக்கு 20 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விடம், வெதுப்பு தோன்றில் 5 நாளில் தத்து, இதற்குப் பிழைத்தால் 45 நாளில் மரணம். கர்க்கடகம் தனுசுக்குப் புதுநெல் கொண்டு அகம்புகுவது நன்று.

### முதற்கால் சிங்காதித்தன் பலன்

**நாளுமே செல்வ மாவா னயபய மெண்ணிச் செய்வன்**
**மாளிகை மனையில் வாழ்வன் மன்னரான் மகிழ்ச்சி யுண்டாம்**
**வாளிசேர் கன்னி யன்பன் வலக்கையின் மருவு முண்டாம்**
**காளிசேர் வமிச னாகுங் கதிரவன் காலி னானே.**

இதற்குக் காலச்சக்கரம்: *விருச்சிகம் செவ்வாய்-10, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷசெவ்வாய்-7, மிதுன வியாழன்-10 ஆக வயது 100.*

**இரண்டாங்கால் கன்னி புதன் பலன்**

மந்திர மறைகள் கற்கு மரகதாற் பலனு முண்டாஞ்
சுந்தரப் பலன்க டோன்றுந் தோளிலே மறுவு முண்டா
மந்தரப் பொய்கள் சொல்லு மரும்பொரு ணெருங்கி வாழும்
புந்தியிற் பெரிய னாகும் புதனினாங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *கும்பசனி-4, மகரசனி-4, தனுசு வியாழம்-10, மேவு செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, க்ன்னி புதன்-6 ஆக வயது 83.*

**நாலாங்கால் விருச்சிகச் செவ்வாயின் பலன்**

பட்டய மணிந்த தோளான் படைக்கெலாந் தலைவ னாகும்
வெட்டெனப் பேச வல்லன் வெகுளிமுன் னுடைய னாகுஞ்
சிட்டரைச் சேர்ந்து வாழ்வான் சிறுகுழி யாள னாகுந்
திட்டெனக் கருமஞ் செய்வான் சேயினங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *கடகசந்திரன்-21, சிங்காதித்தன்-5, மிதுனபுதன்-9, ரிஷபவெள்ளி-16, மேஷச்செவ்வாய்-4, மீன வியாழம்-10, கும்பசனி-4, மகரசனி-4, தனுசு வியாழம்-10 ஆக வயது 86.*

இனி மகாதிசை: *சுக்கிரன்-20, சூரியன்-9, சந்திரன்-10, இராகு-18, குரு-16, சனி-19, புதன்-17, கேது-7 ஆக வயது 120.*

இந்நாளில் பிறந்தவன் எத்தனாயிருப்பான், சௌந்தர்யன், உடலுத்திருக்கும், பலபுத்தியுடையவன். கடுநடையுடையான், மேல் வாய் சிவந்திருக்கும், சந்திர பலமுடையவன், பொய் சொல்லான். ஆகாரமுடையவன், இடது புறத்திலே மறுவுண்டு. நித்திரை பிடியான், பாக்கு வெற்றிலைப்பிரியன், அற்பன், கபடுடையவன், ஸ்திரீ களுக்கு நல்லவன், முன்னாசையுடையான், சுகந்தன்.

இவன் பிறந்தாண்டில் கண்டம். 7ல் சுரத்தால், 15ல் உதிர வியாதியால், 22ல் மருந்திடுதலால், 25ல் யானையால், அல்லது மிருகத்தால், 27ல் வயிற்று நோயால், 30ல் ஸ்திரீ களால், 34ல் சத்துருவால், 44ல் விஷத்தால், 50ல் மகோத ரத்தால், 53ல் வயிற்றுக்கடுப்பால், 59ல் மூல வியாதியால், 64ல் விலக்காவெக்கையால்.

இவை கடந்தால் 86ஆவது வயது சென்ற சித்திரை மாதம், அமரபட்சம் திரிதிகை திங்கட்கிழமை பரணி நட்சத்திரம் அஸ்தமித்து 3 நாழிகையில் வெதுப்பு தோன்றில் மரணம். இவை கடந்தால் 86 வயது சென்று பூர்வபட்சம் சனிக்கிழமை ஏகாதசி கேட்டை நட்சத்திரம் உதித்து 2 நாழிகைக்குள் மரணம்.

இவனுக்கு சூரியனுதயமாகில் அழகுடையவன் களாவான். சந்திரனுதயமாகில் இராஜபுருஷன் தனவான். செவ்வாயுதயமாகில் கோளன், புதனுதயமாகில் சேனாபதி, குரு உதயமாகில் இராஜா, வெள்ளியுதய மாகில் மந்திரி. சனி உதயமாகில் மந்தன், குருடனு மாவான். இராகு உதயமாகில் தடவன் விஷகாரியு மாவான். இந்நாளில் படர்பயிரிடலாம்.

பரணி நட்சத்திரத்தின் பலன் முற்றும்.

## 3. கார்த்திகை நட்சத்திரத்தின் பலன்கள்

வார்த்தைக ளுடைய னாகும் வழக்கறிந் துரைக்க வல்லன்
கூத்தக மனத்த னாகுங் குணமுடைக் கிளைய னாகும்
போர்த்தது சூரிய னாகும் புகழ்பெறப் பொருளுந் தேடுங்
கார்த்திகை நாளிற் றோன்றுங் கருத்துள காளை தானே.

இந்நாளில் பிறந்தவர்களுக்கு ஆ-ஈ-ஊ-ஏ என்ற முதல் ஏழுத்தாகக் கொண்டு பெயர் வைக்கலாம.

இந்நாலினுக்கு யோனி-வெள்ளாடு, விருட்சம்-அத்தி, பட்சி-மயில், கணம்-இராட்சதன், தெய்வம்-அக்கினி பகவான், பூதம்-தேயு, 30 நாழிகைக்கு மேல் 4நாழிகை விஷம், வைகாசி சூனியம்.

இந்நாளில் ஆடு கொள்ளலாம், பெண் திரளில் மலடியாவாள், வருஷம் பிறக்கில் அகந்தாழும். இந்நாளில் சுரம் தோன்றினால் பத்து நாளில் விடும். விடாதிருந்தால் பரிகாரம், அரச மரத்தடியில் நெய்யினால் ஓமம் பண்ணி தயிருஞ்சோறும் பலி இடவும்.

### முதற்கால் மேஷராசி தனுசு வியாழ பலன்

சிறிதே யொன்றும் பொய்சொல்லான்
சிவந்த கண்ணன் சிறுகுழா
னறிவு மிகவே பெறுங்குணத்தா
அடைந்தோர்க் கன்ப னழகியனாம்
பொருள்சேர் மைந்தர் மனையாளப்
பொருளென் றெண்ணன் புகழ்விளங்
வெறிசேர் குழலாய் மடமாதே
வியாழக் காலிற் பிறந்தானே.

இதற்கு காலச்சக்கரம்: *மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுனபுதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-6, கன்னி புதன்-9, துலா வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10 ஆக வயது 100.*

**இரண்டாங்கால் மகரச் சனியின் பலன்**

ஆறிய மறைகள் கற்கு மரும்பொரு ளுயரு மீதில்
சீறிய செய்ய வேண்டான் சிவனைவ தைப்ப னல்லால்
மாருடன் பொய்கள் சொல்லான் மனம்பொறுக் கரிய வொண்ணன்
காரியங் குசல்ல னாகங் காரியங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *மகர சனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10, மிதுன புதன்-9, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5 ஆக வயது 85.*

**மூன்றாங்கால் கும்பச் சனியின் பலன்**

ஊனம துடைய னாகு முறவுடன் பகையு மெண்ணான்
மானம துடைய னாகு மனம்பொறுக் கரிய வெண்ணான்
மேனியு முருவு நல்லன் மிக்கதோ ரறிவு மில்லை
கானகந் திரிந்து வாழுங் காரியங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *ரிஷப வெள்ளி-16, மேஷ செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்ப சனி-4, மகர சனி-4, தனுசு வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, மிதுன புதன்-9 ஆக வயது 83.*

**நாலாங்கால் மீனவியாழத்தின் பலன்**

மாந்தளிர் போலு மேனி மனதொத்து கல்வி கற்கு
மேந்திய குலத்துக் கெல்லா மிசைந்ததோர் குருவு மாகுங்

**காய்ந்தபின் நடக்க மாட்டான் கண்டவர் களுக்கு நல்லவன்
சேர்ந்தவர்க் கன்ப னாகுஞ் செய்யபொற் காலி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *கடக சந்திரன்-21, சிங்கா தித்தன்-5, கன்னி புதன்-9, துலா வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகர சனி-4, மீன வியாழம்-10 ஆக வயது 86.*

**இனி மகாதிசை:** *ஆதித்தன்-9, சந்திரன்-10, செவ்வாய்-7, இராகு-18, இராஜா-16, சனி-19, புதன்-17, கேது-7, சுக்கிரன்-20 ஆக வயது 120.*

*இந்நாளிற் பிறந்தவன் வார்த்தையில் வல்லவன். பசி பொறான். பல காரிய பிராசிபண்ண வல்லவன். இராச பிரதாபமுடையவன். குணவான், நன்றி மறவான். தெய்வ பக்தியுடையவன், சுகந்தன், ஸ்திரீ கண்ணன. இடது புறத்திலே மறுவுண்டு: ஆங்காரி, பூமிபலிதமுடையவன், மார்புக்கு மேல் மருவுண்டு, மாதா வார்த்தை தவறான், பொய்பேசான், கோபித்த போதே தணிவான்.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம் 3ல் வெதுப்பால், 5ல் ஜலத்தால், 7ல் நெருப்பால், 10ல் உயரத்திலிருந்து விழுவதால், 11ல் நாற்கால் மிருகத்தால், 15ல் விஷத்தால், 22ல் ஸ்திரீகளால், 27ல் அரையாப்பால், 40ல் கள்ளரால், 45ல் குலைவாதத்தால், 50ல் வயிற்றுக் கடுப்பால், 55ல் குடல் வாதத்தால், 60ல் மூல வியாதியால், 78ல் பித்த சுரத்தால்.*

*இவை கடந்தால் 80 வயது சென்று கார்த்திகை மாதம் 32 பூர்வ பட்சம் திரயோதசி சனிக்கிழமை பிறந்த நாளும் தீது 7 நாழிகைக்கு மேல் மரணம். இவையும் கடந்தால் 91 வயது சென்று வைகாசி மாதம் அமரபட்சம் திரிதிகை 7 நாழிகை சென்று பித்தங்கதித்து மரணம்.*

இவனுக்குச் சூரியனுதயமாகில் குணவான். மிடியன். சந்திரன் உதயமாகில், இராஜபுருஷன் பலபேரும் (ஸ்த்ரீ) இச்சிக்கப்பட்டவன். சிறப்புடையவன். புதனுதயமாகில், வித்துவான், வியாபாரி. குரு உதயமாகில், இராஜபுருஷன். வெள்ளி உதயமாகில் கிருஷி பலனும் கல்வியுமுடையவனாவான். சனியுதயமாகில், கள்ளனாவான். இராகு உதயமாகில், ஒரு கண்ணன். மூடன். தெய்வபக்தி உடையவனாவான். கேது உதயமாகில், ஒரு கண்ணன் பராக்கியவான். நோயுடையனுமாவான். புதனுதயமாகில் அமுர்தயோகம். வெள்ளி கூடில் சித்தயோகம். ஞாயிறும் பஞ்சமியும் கூடில் விஷயோகம். நவமியும் குருவும் கூடில் பிராணயோகம். பிரதமை கூடில் வரயோகம். இந்நாள் தென்னம்பிள்ளை வைக்க தானங்கொடுக்க நன்று தயிருக்ஞ்சோறும் உண்டு வழிபோவது நன்று.

**கார்த்திகை நட்சத்திரத்தின் பலன் முற்றும்.**

## 4. உரோகிணி நட்சத்திரத்தின் பலன்கள்

மைவிழி மாத ரோடு மனமிக வுடைய னாகும்
பொய்யுரை யொன்றுஞ் சொல்லான் புகழ்பெற வாழ வல்லன்
நெய்யொடு பாலுங் கூட்டி நிரம்பவே கல்வி கற்கும்
உய்யவே பகிர்ந்திட் டுண்ணு முரோகணி நாளி னானே.

உரோக்ணி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஓ-வா-வி-வூ ஆகியவை முதல் எழுத்துகளாகக் கொண்டு பெயர் வைக்கலாம்.

### ரிஷப ராசியின் பலன்

பலக்குநல் பசுமை செய்யும் பாவமும் பழியும் பார்க்கும்
தலைக்குமேல் பொன்ன தாகத் தந்தைதாய் தம்மைப் பேணும்

**கலைந்திடுங் கருதார் தம்மைக் கைப்பொருள் கொடுக்க வல்லன்**
**இலக்கிய முடைய னாகும் இனியநல் லிடபத் தானே.**

*இந்நாளினுக்கு நட்சத்திரம்-12, மீன் ஊற்றாற் போலிருக்கும் இது உச்சமானால் சிங்கத்தில்-3¼ நாழிகை செல்லும்.*

*இந்நாளினுக்கு தெய்வம்-பிர்மா, யோனி-பாம்பு, பட்சி-ஆந்தை, விருட்சம்-நாவல், கணம்-மனுஷன், பூதம்-பிரிதிவீ, கோத்திரம்-அகஸ்தியன், ஜாதி-வைணவங்கள், இந்நாளினுக்கு -0 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம், சித்திரை மாதம் சூனியம்.*

*இந்நாளில் பிறந்தவன் குணமுள்ளவன், சொன்னது கேட்பான். கடுநடையுடையவன், நெற்றியும், புருவமும் நெருங்கியிருக்கும், கண்விழி பரந்திருக்கும், உள்ளங்கால் உயர்ந்திருக்கும், அழகன், குருபுத்திரன், சரீரம் பெருமை யுடையோன், சௌபாக்கியமுகமுள்ளவன், பண்டிதன், சுகந்தன், எல்லாக் காரியமுமறிந்து சொல்லுவான். இடது புறத்தில் மறுவுண்டு, மேல் அழகன்.*

### முதற்கால் விருச்சிச் செவ்வாயின் பலன்

**வெட்டெனப் பேச வல்லன் வெகுட்சி முன்னுடையோ னாகு**
**மிட்டரை தெரிந்த பேணு மிருகுறி யாள னாகும்**
**பட்டையா மணிந்த தோளான் படைக்கெலாந் தலைவ னாகு**
**மெட்டென வெண்ணு டான மெரியினங் கிசத்தி னானே.**

*தனுசு வியாழம்-10, மகரச் சனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10, மேஷ செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21 ஆக வயது 83.*

### இரண்டாங்கால் துலாம் வெள்ளியின் பலன்

மார்பகன் னுயர்ந்த மெய்யன் மதிமுக மறுவுண் டென்றுஞ்
சீர்தரு முந்தி பேணுந் தேய்தருங் கொடுங்கண் ணாளன்
ஆதர வுடையோ னாகு மறிவுட னன்றி யாகுஞ்
சார்வது மாதர் தம்மால் தரும்புகர் கார னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பசனி-4, மகரசனி-4, தனுசு வியாழம்-10, விருச்சிக செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-1 ஆக வயது 83.*

### மூன்றாங்கால் கன்னி புதன் பலன்

மேதையா லலங்க சாலன் வேந்தரால் விருப்ப முண்டாம்
மாதுமா லுருத மாகு மனம்பொருக் கரிய வொண்ணான்
தாதுசேர் விழியார் தம்மேற் றன்பொருள் கார நில்லான்
மாதுரை வலக்கை வல்லன் மாலினங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *கன்னிபுதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷ செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகர சனி-4 ஆக வயது 95.*

### நான்காங்கால் கடக சந்திரன் பலன்

தலையது தடிய னாகுந் தன்மனப் பெரியோ னாகும்
மலைதரு வல்ல பத்தின் வடிவுடன் சிறந்த மேனி
கலைபல நன்றி கற்குங் கடுமதி காளை யாகும்
மலையென வளர்ந்த தோளான் மதியினங் கிசத்தி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *மீன வியாழம்-10, கும்பசனி-4, மகர சனி-4, தனுசு வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21 ஆக வயது 86.*

**இனி மகாதிசை :** *சந்திரன்-10, செவ்வாய்-2, இராகு-18, குரு-16, சனி-19, புதன்-17, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-6 ஆக வயது 86.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம் 3ல் வெதுப்பால், 5ல் ஜலத்தால், 7ல் எதிரியால், 9ல் உயரத்திலிருந்து விழுவதால், 5ல் நாற்கால் மிருகத்தால், 16ல் விஷத்தால், 18ல் நெருப்பால், 23ல் மருந்தீட்டால், 32ல் சுழல வாதத்தால், 55ல் கள்ளரால், 57ல் நீரால், 60ல் வயிற்றுக் கடுப்பால், 65ல் நீர்பட்டால், 69ல் நோயால்.*

*இவை கடந்தால் 86 வயது சென்று மாசி மாதம் பூர்வ பட்சம் நவமியும் ஞாயிற்றுக் கிழமையும் பிறந்த உரோகணி நாள் உதித்து 7 நாழிகையில் சுரத்தால் மரணம்.*

*இவை கடந்தால் 90 வயது சென்று வைகாசி மாதம் அமரபட்சம் திங்கட்கிழமை பிறந்து அஸ்த நட்சத்திரம் உதித்து 7 நாழிகை சென்று ஜன்னி வாத வயிற்று நோயால் மரணம்.*

*இவனுக்கு ஆதித்தனுதயமாகில், இராஜ புருஷன், சந்திரனுதயமாகில், சீவாந்திரமாளுவன், செவ்வாயுதய மாகில், கள்ளனாவான், கோபமுடையோன், புதனுதய மாகில், பண்டிதனாவான், வியாழமுதயமாகில், மந்திரியும் வித்துவானுமாவன், வெள்ளியுதயமாகில், அறிவுடை யோன், சிரசு வலிக்கும், சனியுதயமாகில், கள்ளனாவன். இராகு உதயமாகில், முடவனும், மடியனுமாவன். கேது*

உதயமாகில், விஷ காரியம், துஷ்டனுமாவன் இந்நாளில் வியாழங் கூடில் விஷயோகம். இந்நாளில் பூஞ்சோலை வைக்க, தொட்டிகட்ட, நமஸ்காரம் பண்ண, அன்னப் பிரசானஞ்செய்ய, கிணறு வெட்ட, புதியதுடுக்க, கோடி யுடுக்க நன்று. இந்நாள் முதற்காலில் நெல் விதைக்க நன்று. இந்நாளில் மாதம் பிறக்கில் அகந்தாழும், சுரந்தோன்றில் ஆறுநாளில் விடும், விடாதிருந்தால் இந்நாளில் அடுத்த விருட்சத்தடியில் அல்லது நீர்க்கரையில் தேவதையை நோக்கி நெய்யால் ஓமஞ்செய்து இரத்தம் கந்தம் புஷ்பம் பலியிடவும். இந்நாளில் பிறந்தவன் பிரயாணம் போவதாயிருந்தால் பாலுஞ்சோறும் புசித்துப்போகவும்.

**உரோகணியின் பலன் முற்றும்.**

## 5. மிருகசீரிட நட்சத்திரத்தின் பலன்

**திருந்திய நடைய னாகுந் தேசம்போய்த் திரிய வல்ல**
**னருந்தவத் தோர்க்கு நல்ல னாயுதம் பிடிக்க வல்ல**
**னிருந்தது பூசை செய்து நிருகந் தாட வல்லன்**
**வருந்தியே கருமஞ் செய்வன் மான்றலை நாளி னானே.**

மிருகசீரிட நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு வே-வோ-கா-கி- முதல் எழுத்தாக வரும் வகையில் பெயர் சூட்டலாம்.

இந்த நட்சத்திரம் மூன்றும் தேங்காய்க்கண் போல் இருக்கும். இது உச்சமானால் கன்னியில் 4 நாழிகை செல்லும்.

இந்நாளினுக்கு யோனி-சாரைப்பாம்பு, பட்சி- கானாங்கோழி, விருஷம்-கருங்காலி, கணம் - தெய்வம், பெண் தெய்வம் சந்திரன்.

இந்நாளினுக்கு நெற்றி பரந்திருக்கும், மூக்கு உயர்ந்திருக்கும், உடம்பு பூரித்திருக்கும், கல்வியுடையவன் அழகன். இவனது மனதை ஒருவரால் அளவிடப்போகாது. தெய்வபக்தியுடையவன், வெற்றிலைப்பாக்கு பிரியன், பாட்டு கூத்தில் விருப்பமுடையவன், பூசை முடிக்க வல்லவன். பலருடன் வாழ இச்சையுடையவன், ஸ்திரீ கள்ளன், கோபமுடையவன், கோபித்தபொழுதே ஆறுவான், இராஜாபிமானன், இவனுக்கு ராசி ரிஷபம்.

**முதற்கால் சிங்காதித்த பலன்**

**நீளிய செய்யுஞ் சால நிபுணனாய் நஞ்சை செய்யும்**
**மாளிகை மலையில் வாமு மன்னரான் மகிழ்ச்சி யுண்டாம்**
**வாளிசேர் கண்ணிய வன்பன் வலக்கையின் மறுவு வேலன்**
**காளிசேர் வடிவு பேணுக் கதிரவன் காலி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மீன வியாழம்-10, மேஷ செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, சிங்கா தித்தன்-5, கடக சந்திரன்-21, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7 ஆக வயது 100.*

**இரண்டாங்கால் மிதுன புதன் பலன்**

**மேதையா லங்க சாலன் வேந்தரால் விருப்ப முண்டாம்**
**மாதமா னுருவ மாகு வனப்பொறுக் கரிய வொண்ணான்**
**றாதுசேர் விழியார் தம்மேற் றன்பொருன் சார நில்லான்**
**மாதுசேர் வலக்கை வேலன் மாலினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மிதுனபுதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷ செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரச்சனி-4, கும்பச்சனி-4, மீன வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16 ஆக வயது 103.*

**மூன்றாங்கால் ரிஷப வெள்ளியின் பலன்**

**தெள்ளிய தியாகி நல்லன் சேயிழை யாரைப் பேணும்**
**ஒள்ளிய கண்ணில் வல்லோ னொணடபொருள் சார நில்லான்**
**பள்ளியும் பலனும் கற்கும் பாக்கிய முடையே னாகும்**
**வெள்ளியங் கிசத்தில் வந்த விருப்புள காளை தானே.**

இதற்குக் காலச்சக்கரம்: *மிதுன புதன்-3, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, கன்னி புதன்-9, துலாம் வெளளி-16, விருச்சிக செவ்வாய்-7, மீனம் வியாழம்-10, கும்பசனி-4 ஆக வயது 85.*

**நான்காங்கால் மேஷச் செவ்வாயின் பலன்**

**குறுகிய சருவ மெய்யன் குரளைசேர் குதலை வாயன்**
**மறுகிய மனத்தன் பெண்மேல் வன்பொருள் சார நில்லான்**
**முறுகிய கொடுமை செய்வன் முதுகிலே மறுவுண் டென்றும்**
**தெறிதருங் காதல் பேணுஞ் சேயினங் கிசத்தி னானே.**

இதற்குக் காலச்சக்கரம்: *தனுசு வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7 ஆக வயது 100.*

இனி மகாதிசை : *செவ்வாய்-7, இராகு-18, குரு-16, சனி-19, புதன்-7, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-6, சந்திரன்-7 ஆக வயது 100.*

*இவன் பிறந்த ஆண்டில் செவ்வாயின் திசையால் கண்டம் 3ல் தண்ணீரால், 8ல் சிலந்தியால், நாற்கால் மிருகத்தால். 11ல் வெதுப்பால், 19-கருவியால், 21வயிற்று நோவால், 24ல் மரத்தால், 33ல் வயிற்று நஞ்சால், 37ல் உறன் முறையாரால், அம்மையால் கண்டம்.*

இவை கடந்தால் ஆனி மாதம் பூர்வ பட்சம் ஏகாதசி ஞாயிற்றுக்கிழமை, சித்திரை நட்சத்திரம் அஸ்தமித்து 5நாழிகையில் மரணம். இவை கடந்தால் 85 வயது சென்று அமரபட்சம் ஞாயிறறுக்கிழமை ஏகாதசி சித்திரை நட்சத்திரம் பிறந்த நாள் மரணம். இவை கடந்தால் 86 வயது சென்று வெள்ளிக்கிழமையும் உத்திர நட்சத்திரமும் அஸ்தமித்து 15 நாழிகையில் பித்தங்கதித்து மரணம்.

இவனுக்கு, சூரியனுதயமாகில் உடல் வெளுத் திருக்கும், சந்திரனுதயமாகில் சீமானாவான், செவ்வாயுதய மாகில் மிடியன், புதனுதயமாகில் புத்திமான், குருவுதய மாகில் குணவான், வெள்ளியுதயமாகில் வேளாண்மை செய்வான். சனியுதயமாகில் தானியங்கட்டும், இராகு உதயமாகில் வியாபாரம், கேது உதயமாகில் கள்ளன். இந்நாள் விவாகம் பண்ண, பெண் திரள, நன்று. திங்கள் கூடில் அமுர்தயோகம். குரு கூடில் மரணயோகம்.

இந்நாளில் சுரந்தோன்றில் 10 நாளில் விடும், விடாதிருந்தால் கருங்காலி மரத்தடியில் நீர்க்கரையில் தேவதையை நோக்கி வேத மந்திரததால் பெலியிடவும்.

**மிருகசீரிடத்தின் பலன் முற்றும்.**

## 6. திருவாதிரை நட்சத்திரத்தின் பலன்கள்

**புறமிசை யுடைய னாகும் புகழ்பெற வாழ நல்லன்**
**திறமொடு காரி யங்கள் சிறப்பொடு பூசை செய்யும்**
**வறுமையே உடைய தாகும் அறிவுநூல் பலவுங் கற்கும்**
**அரசுநெறி பலவும் பேசும் ஆதிரை நாளி னானே.**

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் கூ-கா-ங-சா இந்த எழுத்துக்களை முதல் எழுத்துக்களாகக் கொண்டு பெயர் சூட்டலாம். இதற்கு இராசி மிதுனம்.

## இதுவுமது

**பண்டித பலவும் வல்லன் பாலுடன் பரிந்து வாழும்**
**கண்டிலற் கினிய னாகும் கடுஞ்சொல்லு முடைய னாகும்**
**வண்டவிழ் நெறியாள் கூடும் வழக்கறிந் துரைக்க வல்லன்**
**கொண்டலென் குழலி னதென் குணந்தரு மிதுனன் தானே.**

*இந்நாளினுக்கு தெய்வம்-உருத்திரன், யோனி-நாய், பட்சி அன்றில், விருஷம்-கருங்காலி, கணம்-மனிதன், நட்சத்திரம்-மீன்கண் போலிருக்கும் இது உச்சமானால் கன்னியில் ஒன்றரை நாழிகை செல்லும் 21 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம், தை மாதம் சூனியம்.*

*இந்நாளின் குணம் கிரந்தாந்தரங்களிலே சொல்லப் பட்டன. இன்னானுக்குக் கண் செவ்வரி படந்திருக்கும், கடுநடையுடையவன், மூக்கு உயர்ந்திருக்கும். உறவுடையோன், மார்பு அகன்றிருக்கும், கோபமுடையோன், உருவினன், நித்திரைக்கடியன், ஸ்திரீ கண்ணன், அழிக்கவல்லன், மறுத்துரைப்பான் இவனுக்கு நாற்கால் சீவவதை உண்டாம்.*

## முதற்கால் மீனகுரு பலன்

**மாந்தளிர் போலு மேனி மனதொத்து கலைகள் கற்கு**
**மேந்திய குலத்திற் கெல்லா மிசைந்ததோர் குருவு மாவன்**
**காய்ந்தபின் னடங்க மாட்டான் கனங்குழ லார்க்கு நல்லன்**
**சேர்ந்தவர்க் கன்ப னாகுஞ் செய்யபொற் காலி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மீனகுரு-10, கும்பசனி-4, மகர சனி-4, தனுர்குரு-10, விருச்சிககுஜன்-7, துலா சுக்கிரன்-16, கன்னியாபுதன்-9, சிம்மாதித்தன்-5, கடக சந்திரன்-21 ஆக வயது 86.*

## இரண்டாங்கால் கும்ப சனி பலன்

ஊனம துடைய னாகு முறவொடு பழியு நேரான்
மேனியு முருவ நல்லன் மிக்கதோ ரறிவு மில்லான்
மானம துடையோ னாகு மனம்பொறுக் கரியான் மேலுங்
கானகந் திரிந்து வாழுங் கரியங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *மிதுன புதன்-9, ரிஷபசுக்கிரன்-16, மேஷகுஜன்-7, ரிஷபசுக்கிரன்-16 ஆக வயது 83.*

## மூன்றாங்கால் மகர சனி பலன்

ஆரையு மறிந்து பேசு மரும்பொரு ளறிவ னாகுஞ்
சீரிய செய்ய வேண்டான் சிதைவதைச் செய்வ தல்லான்
மாரியிற் பொய்யே பேசு மனம்பொறுக் கரியான் மேலும்
காரியக் கிலேச னாகுங் கரியனங் கிசத்தி னானே.

இதற்குக்காலச்சக்கரம்: *மிதுன புதன்-9, சிங்காதித்தன்-5, கடகசந்திரன்-21, கன்னிபுதன்-9, துலா சுக்கிரன்-16, விருச்சிககுஜன்-7, மீனகுரு-10, கும்பசனி-4, மகரசனி-4 ஆக வயது 85.*

## நலாங்கால் தனுர்குரு பலன்

சிறிதே யுண்ணும் பொய்சொல்லான்
சிவந்த கண்ணன் சிறுகுழவ
னறிவு மிகவாம் பெருங்குணத்தா
னடைந்ததோர்க் கன்ப னழகியனாம்
பொறிசேர் மஞ்சை யனையாளைப்
பொருளென் றெண்ணான் புகழ்விள
வெறிசேர் கூந்தன் மடமானே
வியாழக் காலிற் பிறந்தானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** தனுர்குரு-10, விருச்சிக குஜன்-7, துலா சுக்கிரன்-16, கன்னியா புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுனபுதன்-9, ரிஷப சுக்கிரன்-16, மேஷகுஜன்-7 ஆக வயது 100.

**இனி மகாதிசை :** இராகு-10, குரு-16, புதன்-17, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-9, சந்திரன்-10, குஜன்-7 ஆக வயது120.

இவன் பிறந்த ஆண்டில் கண்டம். இராகு திசையிற் கண்டம், அன்றியும் 3ல் வெதுப்பால், 7ல் வைசூரியால், 12ல் நாற்கால் மிருகத்தால், 16ல் விஷத்தால், 18ல் உயரமேறி வீழ்தலால், 20ல் பெண்ணால், 20ல் மருந்தீட்டால், 30ல் கள்ளரால், 35ல் இராஜபடையால், 40ல் சுழல் வாதத்தால், 47ல் வயிற்று வியாதியால், 50ல் மூல வியாதியால், 55ல் வயிற்றுக் கடுப்பால், 60ல் வயிற்று பேதியால் கண்டம்.

இவை கடந்தால் 80 வயது சென்று ஆனி மாதம் பூர்வபட்சம் அஷ்டமியும், ஞாயிற்றுக்கிழமையும் கூடிய அன்று சுவாதி உதித்து 3 நாழிகையில் இளைப்புத் தோன்றி மரணமாம். இவனுக்கு இது கிடந்தால் 88 வயது சென்று தை மாதம் பூர்வ பட்சம் நவமியில் குரு வாரமுங்கூடிய அன்று திருவாதிரை உதித்து 1 நாழிகையில் இளைப்பு தோன்றி மரணமாம். இவனுக்கு சூரியன் உதயமாகில் மிடியன் திருடன், சந்திரன் உதயமாகில் பயிர் பலிதம், குஜன் உதயமாகில் கோபியாவான், புதன் உதயமாகில் பண்டிதன், பிதாவுக்கு நல்லவன். குரு உதயமாகில் வியாபாரி, கல்வியுடையவன். சுக்கிரன் உதயமாகில் கள்ளன், வியாபாரி, இராகு உதயமாகில் கலகப்பிரியன். கேது உதயமாகில் விரோதி. விஷப்புத்தி உடையவன். இந்நாளில் குஜன் கூடில் மிருத்தியோகம், குரு கூடில் சுபயோகம்.

மேற்படி யோகங்களில் பூஜாரம்பம் வித்தியாரம்பம் இவை செய்ய நன்று. பெண் திரளில் நோய். மாதம் பிறக்கில் அகந்தாழும். சுரந்தோன்றில் ஐந்து நாழிகையில் விடும். விடாதிருந்தால் தேனும் நெய்யும் கலந்து அரச மரத்தடியில் தேவதையை நோக்கிப் பலியிட்டு ஓமம் பண்ணவும். இந்நாளில் வானத்தில் வில்லிடினும் வெள்ளை மேகம் பரவினும் மழைபெய்யும் கண்டரஜ்ஜு.

திருவாதிரையின் பலன் முற்றும்.

## 7. புனர்பூச நட்சத்திரத்தின் பலன்கள்

**நெய்யொடு பாலுங் கூடு நிரம்பிய குணத்த னாகும்**
**வெய்யசொல் லுடைய னாகும் வேதியர் தம்மை பேணுங்**
**கையது நெடிய னாகுங் கடுநடை யுடைய னாகும்**
**பொய்யுரை யொன்றுஞ் சொல்லான் புனர்பூச நாளி னானே.**

இந்த நட்சத்திரத்தில் பிறந்த ஜாதகர்களுக்கு கே-கோ-ஹா-ஹீ என்று முதல் எழுத்து வரும் வகையில் பெயரிடலாம். இந்த நட்சத்திரம் 9-மீன் ஓடம் போலிருக்கும்.

இந்நாளினுக்கு தெய்வம்-அக்கினி, யோனி-பெண் பூனை, பட்சி-அன்னம, விருட்சம்-புன்னை மரம், கணம்-தெய்வம். புதன்கிழமை ஜென்ம வாரம். பொருத்தம்-7, கிழக்குவாசல்-விடுவது, நாள்-ஆண், பூதம்-அப்பு, ஜாதி - பிராமணன், யோகினி-மகேஸ்பரி.

இந்நாளினுக்கு 30 நாழிகைக்கு மேல் 4 நாழிகை . இந்நாள் ஜெபதபஞ்செய்ய, திருவெழுத்திட, நமஸ்காரஞ் செய்ய, அபிஷேகம் பண்ண, யானை குதிரையேற, பொன், கோடியுடுக்க. உபநயனஞ்செய்ய, பூஞ்சோலை வைக்க, மருந்து உன்ன, வியாபாரஞ் செய்ய, குடிபோக நன்று.

*இந்நாளில் பிறந்தவன் புத்தியுடையவன், காலுங் கையும் உறத்திருக்கும், கல்வியுடையவன். நெற்றி உயர்ந்திருக்கும், அடக்கமுடையவன். ஸ்திரீகட்குப் பிரியன், அழகுடையவன், வார்த்தையில் வல்லவன், மெதுவான நடையுடையவன், புத்தி விசாரணையுடையவன், பொய்பொறான், பொருளுரைப்பான், கைகள் கமலம் (தாமரை) போலிருக்கும்.*

**முதற்கால் மேஷச் செவ்வாய் பலன்**

**குறுகிய வுருவ மெய்யன் குறளைசேர் குதலை வாயன்**
**மருவிய மனத்தன் பெண்மேல் வன்பொருள் சார நில்லான்**
**முருகிய கொடுமை செய்வன் முதுகிலே சுழியு முண்டாஞ்**
**செரிதரு கூந்தல் பேணுஞ் சேயினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னியாபுதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-10 ஆக வயது 100.*

**இரண்டாங்கால் ரிஷப வெள்ளியின் பலன்**

**தெள்ளிய தியாகி நல்லன் சேயிழை யாரைப் பேணு**
**மெள்ளிய கண்ணில் வெள்ளா ஒண்பொருள் கள்வ னாகும்**
**பள்ளியும் பலவுங் கற்கும் பாக்கிய முடைய னாகும்**
**வெள்ளியங் கிசத்தில் வந்த விருப்புள காளை தானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மகரசனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10, விருச்சிக செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-6, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, மிதுன புதன்-6 ஆக வயது 85.*

### மூன்றாங்கால் மிதுனபுதன் பலன்

**மேதையா லங்க சாலன் வேந்தரால் விருப்ப முண்டா**
**மாதுமா னுருவ மாடி வனம்பொறுக் கரிய வொண்ணான்**
**றாதுசேர் குழலி னார்பாற் றன்பொருள் சார நில்லான்**
**மீதுரை யுரைக்க வல்லன் மிதுனவங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *ரிஷப வெள்ளி-16, மேஷ செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பச்சனி-4, மகர சனி-4, தனுசு வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9 ஆக வயது 83.*

### நாலாங்கால் கடக சந்திரன் பலன்

**தலையது தடிய னாகுந் தன்மனம் பெரிய னாகும்**
**மலைதரும் வல்ல பத்தன் வடிவுடன் சிறந்த மேனி**
**கலபல நன்றி கறகும் கடிமதக் காலை யாகும்**
**மலையென வளர்ந்த தோளான் மதியினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *கடக சந்திரன்-4, சிங்கா தித்தன்-5, கன்னிபுதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரசனி-4, கும்பமுனி-9, மீன வியாழம்-10 ஆக வயது 89.*

**இனி மகாதிசை :** *சனி-19, குரு-16, புதன்-17, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, இராகு-18 ஆக வயது 120.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 3ல் வலிப்பால், 5ல் வயிற்று வியாதியால், 6ல் ஆயுதத்தால், 11ல் விஷத்தால், 15ல் சத்துருவால், 25ல் வைசூரியால், 30ல் அரையாப்பால், 39ல் வாதத்தால், 40ல் இராஜாவால், 55ல் அக்கினி மகோதரத்தால், 68ல் சிலேத்துமத்தால் கண்டம்.*

இவை கடந்தால் 80 வயது சென்று வைகாசி மாதம் அமரபட்சம் பஞ்சமி வெள்ளிக்கிழமை புனர்பூசம்-5 உதித்து 5 நாழிகையில் வீக்கங்கண்டு மரணம்.

இவனுக்கு ஆதித்தன் உதயமானால், கோளனும் மிடியனுமாவான். சந்திரன் உதயமாகில், குணவானும் தனவானுமாவான். செவ்வாய் உதயமாகில், கோபியும் பண்டிதனுமாவான். புதன் உதயமாகில், வித்தை யுடையவன். குரு உதயமாகில், புத்திரருள்ளவன். வெள்ளி உதயமாகில், ஒற்றைக்கண்ணன். சனி உதயமாகில், கள்ளன். இராகு உதயமாகில் கோள்கேளாதவன். கேது உதயமாகில், குருடன், பாடவல்லவன். இந்நாளில் மாதம் பிறக்கில் அகந்தாழும். பெண் திரளில் நன்மை. இந்நாளில் சுரம் தோன்றினால் 20 நாளில் விடும். விடாதிருந்தால் நெய்யும் பாலும் கலந்து தேவதையை நோக்கி ஓமம் பண்ணவும்.

இந்நாளில் வழிபோக வேண்டில் பச்சரிசியும், பாலும் தின்று போவது நன்று. நாபி ரஜ்ஜீ. கணம்-தேவகணம்

புனர்பூச நட்சத்திரத்தின் பலன் முற்றும்.

## பூச நட்சத்திரத்தின் பலன்கள்.

**தேசமே புகழ வாழுஞ் சிட்டரே யறிந்து கூடும்**
**வாசமா மலையு முண்டாம் மதியுடன் கல்வி சேரும்**
**வாசமார் குழலி மாரை மனதுடன் சேர்ந்து வாழும்**
**போசன மினிமை யாவான் பூசநாட் டோன்றி னானே.**

பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் ஹீ-ஹே-டா என்று முதல் எழுத்தாக வரும்படி பெயரிட்டுக்கொள்ளலாம்.

## முதற்கால் கடக சந்திரன் பலன்

**சொல்லுநற் சொல்லுஞ் சொல்லுந் துக்கமு மெளுகும்**
**பார்க்கும்**
**வெல்லுவன் பகைவர் தம்மை விரும்பியே கருமஞ் செய்வ**
**நல்லனாய் மெல்ல வாழு நண்ணுத லாளைப் பேணு**
**மல்லியல் கோதை மாதே யலவனாம் ராசி யாமே.**

இந்த நட்சத்திரம் புடம்பூப் போலிருக்கும். இந்நாளினுக்கு யோனி-ஆட்டுகிடா, பட்சி-நீர்க்காக்கை, விருட்சம்-அரசு, கணம்-தெய்வம், திங்கள்-சென்மவாரம், பொருத்தம்-கிழக்குவாசல்-விடுவது, நாள்-ஆண், தெய்வம்-ஆதித்தன், பூதம்-பிருதிவி, ஜாதி-அகஸ்தியன், யோகினி-மந்தாகி.

இந்நாளிற்கு 20 நாழிகைக்கு மேல் 4நாழிகை விஷம். இந்நாளிற் பிறந்தவன் சவுந்தரியம் பேராளன் மாதாவுக்கு. நல்லவன், ஒழுக்கமுடையவன், வழக்கறிந்துரைப்பான். கோபி காலும், கையும் மெல்லியதாயிருக்கும். கருத்துடையவன். அறையிலும், முகத்திலும் மறுவுண்டு, தனமுடையவன், நெடியன்.

இந்நாள் வித்யாரம்பஞ் செய்ய, குடிபோக, காது குத்த, விதை தெளிக்க அகம்புதுக்க கோடியுடுக்க, ஆபரணம் பூண, பெண் கொள்ள நன்று. பெண் திரளில் பிள்ளையுண்டாம்.

மாதம் பிறக்கில் அகந்தாழும். இந்நாளில் சுரம் தோன்றில் 4 நாழிகையில் விடும். விடாதிருந்தால் தெய்வ மந்திரத்தால் ஓமஞ்செய்து விருட்சத்தடியில் அல்லது நீர்க்கரையில் சோறு கந்தபுஷ்பம் பலியிடவும். இந்நாளில் பிற தேசம் போக நேரிட்டால் நெய்குடித்துப் போகவும்.

## முதற்கால் சிங்காதித்தன் பலன்

நீளிய செய்ய சாவ னிபுணணா யழியச் செய்ய
மாளிகை மனையில் வாழ்வன் மன்னரான் மகிழ்ச்சி யுண்டாம்
வாளிசேர் கண்ணி யன்பன் வலன்கையின் மருவு வேலான்
காளிபேர் வடிவு பேணுங் கதிரவன் காலி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *விருச்சிகச் செவவாய்- 7, துலாம் வெள்ளி-16, கன்னிபுதன்-9, கடகசந்திரன்-21, சிங்காதித்தன்-5, மிதுனபுதன்-9, ரிஷபவெள்ளி-16, மேஷ செவ்வாய்-7, மீனம்வியாழம்-13 ஆக வயது 100.*

## இரண்டாங்கால் கன்னிபுதன் பலன்

மந்திர மறைகள் கற்கு மாதரா லருளு முண்டாம்
சுந்தரப் பலன்கள் சொல்லுந் தோளிலே திசையுந் தோற்று
மந்திரம் பொய்யுஞ் சொல்லு மறைப்பொரு ணெருங்கி வாழும்
புந்தியிர் பெரியோ னாகும் புதனினங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *கும்பசனி-4, மகரசனி-4, தனுசு வியாழம்-10, மேஷசெவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9 ஆக வயது 85.*

## மூன்றாங்கால் துலாம் வெள்ளி பலன்

மார்பகன் றுயர்ந்த மெய்யன் மதிமுக மருவுண் டென்றுஞ்
சீர்தரு முத்தி பேணுஞ் சேய்தருங் கொடுங்கண் ணாள
னாதர வுடைய னாகு மறிவுட னன்றி கற்குஞ்
சார்வது மாதர் தம்மால் தருபுகர் காலி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-11, மகரசனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9 ஆக வயது 83.*

## நாலாங்கால் விருச்சிக செவ்வாயின் பலன்

வெட்டெனப் பேச வல்லன் வெகுளிமுன் னுடைய னாகும்
பட்டைய மணிந்த தோளான் படைக்கெலாந் தலைவ னாகுஞ்
சிட்டரைச் சேர்ந்து வாழுஞ் சிறுகுறி யாள னாகும்
வெட்டென வொன்று மஞ்சா னெரியினங் கிசத்தி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீனம்வியாழம்-10, கும்பசனி-4, மகரசனி-4, தனுசு வியாழம்-10 ஆக வயது 86.*

**இனி மகாதிசை :** *சனி-19, புதன்-17, கேது-10, சுக்கிரன்-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, குரு-16 ஆக வயது 86.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 3ல் கருவியால், 5ல் விஷத்தால், 7ல் வைசூரியால், 12ல் கிரந்தியால், 16ல் சுரத்தால், 25ல் சத்துருவால், 36ல் கள்ளரால், 46ல் வாதத்தால், 59ல் நெருப்பால், 65ல் அசுரர் படையால்.*

*இவை கடந்தால் 8ல் வயது சென்று ஐப்பசி மாதம் பூர்வ பட்சம் திங்கட்கிழமை ஏகாதசி சதய நட்சத்திரம் உதித்து நாலு நாழிகையில் வயிற்றுநோயால் மரணம். இவை கடந்தால் கார்த்திகை மாதம் வியாழக்கிழமை பூர்வபட்சம் சதுர்த்தி அனுஷநாள் உதித்து 20 நாழிகைக்கு மேல் பெருவயிற்றால் மரணம்.*

*இவனுக்கு, ஆதித்தன் உதயமாகில் சிவந்த மேனியுடையவன். சந்திரன் உதயமாகில் தனவான். செவ்வாய்*

உதயமாகில் பண்டிதன், முட்டிக்காலன். புதன் உதய மாகில் வித்துவானாவான். வியாழம் உதயமாகில் மந்திரி யாவான். வெள்ளி உதயமாகில் வாகனமுடையவன். சனி உதயமாகில் கைவாகிக்காரன். கேது உதயமாகில் செத்தப்போம், விஷக்காரனாவான். சங்க ரஜ்ஜு.

பூசத்தின் பலன் முற்றும்.

## ௯. ஆயிலிய நட்சத்திரத்தின் பலன்கள்

**கடுகியே நடக்க வல்லன் காரிய மனத்த னாகுஞ்**
**சடுதியி லடுத்துப் பேசுந் தந்தைதாய் தமரைப் பேணும்**
**வடுகரை பேச வல்லன் வருந்தியே யிருந்து வாழ**
**மடுத்தவர்க் கன்ப னாக மாயில்ய நாளி னானே.**

டீ-டு-டே-டோ என்று முதல் எழுத்து வருமாறு பெயரிடலாம்.

இந்த நட்சத்திரம் 4 மீன் அம்மி போல இருக்கும். இது உச்சமாகில் துலாத்தில் 4 நாழிகை செல்லும். இந்நாளினுக்கு யோனி-கடுவன் பூனை, பட்சி-ஆந்தை, விருட்சம்-புன்னை மரம், கணம்-ராக்ஷதன், பொருத்தம்-6, வடக்கு கிழக்கு வாசல் விடுவது, தெய்வம்-வாயு, சாதி-வைணவன், கோத்திரம்-வைசியன், பூதம்-அப்பு.

இந்நாளிற்கு 32 நாழிகைக்குமேல் 4 நாழிகை விஷம் சித்திரை மாசம் சூனியம். இந்நாளில் கரும்பு வைக்க, வெற்றிலை நட, உத்தமம். பெண் திரளில் விதவை யாவாள். மாதம் பிறக்கில் அகந்தாழும். இந்நாளில் சுரந் தோன்றில் 8 நாழிகையில் விடும், விடாதிருந்தால் நெல் வரகு ஆலங்கொழுந்து நெய்யுங் கலந்து ஓமஞ் செய்து அடுத்த விருட்சத்தடியில் பெலியிடவும்.

### ஆயிலிய முதற்கால் தனுசு வியாத்தின் பலன்

சிறிதொன்றும் பொங்கல் சொல்வான்
சிவந்தகண் ணன்சிறு கழலா
னறிவுமிக வேபெருங் குணத்தா
னடைந்தோர்க் கன்ப னழகியனாம்
பொருள்சேர்மைந் தன்மனை யாளைப்
பொருளென்றெண் ணான்பு கழ்வி
விரிசேர்கூந் தன்வட மாலே
வில்லின்கா லிற்பிறந் தானே.

இதற்குக் காலச்சக்கரம்: *மேஷச் செவ்வாய்-8, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னியாபுதன்-8, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-10 ஆக வயது 100.*

### இரண்டாங்கால் மகர சனியின் பலன்

ஆரையு மறிந்து பேசு மரும்பொரு ளம்பன் செட்டு
சீரியே செய்ய வேண்டாஞ் சிந்தையில் செய்வ தெல்லா
மாரியே பொய்கள் சொல்வான் மனம்பொறுக் கரிய வொண்ணான்
காரிய கிலேச னாகுங் கரியினங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *மகர சனி-4, கும்ப சனி-4, மீன வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, மிதுன புதன்-9 ஆக வயது 85.*

### மூன்றாங்கால் கும்பசனியின் பலன்

ஊனம துடையன னாகு முறவொடு பழியு மேறான்
மேனிய முருவு நல்லன் மிக்கதோ ரறிவு மில்லை

**வீனமே யொன்றுஞ் சார னிடரது புரிய வல்லன்**
**கானகந் திரிந்து வாழுங் கரியினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீன வியாழம்-10, மேஷச்செவ்வாய்-4, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-6 ஆக வயது 83.*

### நாலாங்கால் மீன வியாழத்தின் பலன்

**மாந்துளிர் போலு மேனி மதிமுக மறுவுண் டென்று**
**மேந்திய குலத்துக் கெல்லா மிசைந்தொரு குருவு மாவான்**
**காய்ந்தபி னடக்க மாட்டான் கனங்குழ லார்க்கு நல்லன்**
**சேர்ந்தவர்க் கன்ப னாகுஞ் செய்யபொற் காலி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *கடக சந்திரன்-21, சிங்கா தித்தன்-5, கன்னியாபுதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரசனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10 ஆக வயது 86*

**இனி மகாதிசை :** *புதன்-17, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-18, குரு-16, சனி-19 ஆக வயது 120.*

*இந்நாளில் பிறந்தவனுக்கு புருவம் நெருங்கி உயர்ந் திருக்கும். சுகந்தன், தெய்வ பக்தியுடையவன், கோபி, வீண் சொல் பொறான், பொறுமையில்லான், உருக்க முடையவன், வலிமையாய்ப் பேசுவான், அடவியடைந்து (காடு) வாழ்வான், பகையாளியுடனே எதிரான், எல்லாருக்குங் கொடுக்க வேண்டியிருப்பான்.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 3ல் சுரத்தால், 5ல் வியாதியால், 8ல் மிருகத்தால், 14ல் வைசூரியால், 16ல்*

*நீரால், 25ல் விஷத்தால், 41ல் ஆயுதத்தால், 45ல் மிருகத் தால், 55ல் சுழம் வாதத்தால், 57ல் உதர வியாதியால், 64ல் நீர்பட்டால், 68ல் வாதத்தால், 76ல் அக்கினியால்.*

*இவை கடந்தால் 81 வயது சென்று ஐப்பசி மாதம் ஞாயிற்றுக்கிழமை பூர்வ பட்சம் ஏகாதசி 7 நாழிகையில் பித்தங்கதித்து அஸ்தமித்து 3 நாழிகைக்கு மேல் மரணம்.*

*இவனுக்கு, சூரியன் உதயமாகில், குணக்கேடன், மிடியன். சந்திரன் உதயமாகில், தனவான். செவ்வாய் உதயமாகில், கோபி. புதன் உதயமாகில், விசார முடையவன், வித்துவான். வியாழம் உதயமாகில், ராஜ புருஷன். வெள்ளி உதயமாகில், துஷ்டன். சனி உதய மாகில் கலகன். இராகு உதயமாகில், கெடுதியுள்ளவன். கேது உதயமாகில், முடவன், குருடன். பாதரஜ்ஜு.*

ஆயிலிய நட்த்திர்தின் பலன் முற்றும்.

## 10. மக நட்சத்திரத்தின் பலன்கள்

தந்தைதாய் மிகவும் பேணுஞ் சார்பொடு புவியுஞ் சேருஞ்
சிந்தைநூண் மிகவுங் கற்குந் தேசம்போய்த் திரிய வல்லன்
வந்தனை யுகந்து வாழு மணமது முடிக்க வல்லான்
மந்திரப் பொய்கள் சொல்வான் மகத்தினா டோன்றி னானே.

### இந்நாள் கொண்ட பலன்

நிலைபெறத் திரிந்து வாழும் நிரம்பிடுங் கல்வி கற்கும்
வலியுள மனத்த னாகும் வஞ்சக மொன்றுஞ் சொல்லான்
பலதனி யுடைய னாகும் பழிதனக் கஞ்சி வாழுஞ்
சிலையது வல்ல னாகுஞ் சிறப்புள சிங்கந் தானே.

மக நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு மா-மீ-மு-மே என்று முதல் எழுத்து வருமாறு பெயர் சூட்டலாம்.

இந்த நட்சத்திரம் 4-மீன் முடங்கள் போலிருக்கும். இது உச்சமாகில் 1¼ நாழிகை செல்லும்.

இந்நாளினுக்கு யோனி-ஆணெலி, பட்சி-கழுகு, விருட்சம்-ஆலம், கணம்-ராக்ஷதன், ஞாயிற்றுக்கிழமை சென்ம வாரம், பொருத்தம்-11, கிழக்கு தெற்கு வாசல் விடுவது, நாள்-ஆண், தெய்வம்-காளி, பூதம்- அப்பு, ஜாதி-சூரியன், யோகினி-கௌமாரி.

இந்நாளில் சுரந்தோன்றில் 10 அல்லது 15 நாழிகையில் விடும். விடாதிருந்தால் 20 நாழிகையில் மரணம்.

இந்நாளினுக்கு 30 நாழிகைக்குமேல் 4நாழிகை விஷம், ஆவணி மாதம் சூனியம்.

இந்நாளிற் பிறந்தவன் அழகுடையவன், தன முடையவன், நீதி உடையவன், ஸ்திரீ கள்ளன், புளித்த பதார்த்தப்பிரியன், வலது பக்கம் மறுவுண்டு, பூசை முடிக்கவல்லன், பெண்பிள்ளை மிகவுண்டு, பிறர் காரியத்தைப் பார்க்க அறிவுடையவன், இவனுக்கு கீழ்வாய் வயிறு பொருந்தியிருக்கும், சத்தியவாக்கியன்.

**முதற்கால் மேஷச் செவ்வாயின் பலன்**

வெட்டெனப் பேச வல்லன் வெகுளிமுன னுடைய னாகுஞ்
சிட்டரைத் தெரிந்து வாழுஞ் சிறுகுறி யாள னாகும்
பட்டய மணிந்த தோளான் படைக்கெலாந் தலைவ னாகு
மெட்டென வெடுத்துப் பேசு மெரியினங் கிசத்தி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *தனுசு வியாழம்-10, மகர சனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷபவெள்ளி-16, மிதுனபுதன்-9, சிங்காதித்தன்-5, கடகசந்திரன்-21 ஆக வயது 86.*

**இரண்டாங்கால் துலாம் வெள்ளியின் பலன்**

**மார்பகன் றுயர்ந்த மெய்யன் மதிமுக மறுவுண் டென்றுஞ்**
**சீர்தரு முத்தி பேணுஞ் சிறுகுறி யாள னாகு**
**மாரையு மறிந்து கூறு மறிவொடு நன்றி கற்குஞ்**
**சார்வது மாதர் தம்பாற் றரும்புகர்க் காலி னாவன்.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்ப சனி-4, மகரசனி-4, தனுசு வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16 ஆக வயது 83.*

**மூன்றாங்கால் கன்னி புதன் பலன்**

**மந்திர மறைகள் கற்கு மாதர்க ளருளு முண்டாஞ்**
**சுந்தரப் பலன்கள் சொல்லுந் தோளிலே திசையுந் தோற்று**
**மந்திரப் பொய்கள் சொல்லான் மரும்பொரு னெருங்கி வாழும்**
**புந்தியிற் பெரியோ னாகும் புதனினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச்செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரசனி-4, கும்பசனி-4 ஆக வயது 85.*

**நாலாம்கால் கடக சந்திரன் பலன்**

**தலையது தடிய னாகுந் தன்மனம் பெரிய னாகும்**
**மலைதரு வல்ல பத்தன் வடிவுடன் சிறந்த மேனி**

**பலகலை நன்று கற்கும் பாக்கிய முடைய னாகும்**
**மலையென வளர்ந்த தோளான் மதியினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *தனுசு வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, சிங்கா தித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-5 ஆக வயது 100.*

**இனி மகாதிசை :** *கேது-7, வெள்ளி-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-18, குரு-16, சனி-19, புதன்-17 ஆக வயது 120.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 3ல் ஜலத்தால், 5ல் விஷத்தால், 7ல் வைசூரியால், 9ல் மிருகத்தால், 15ல் விஷத்தால், 20ல் அரையாப்பால், 24ல் வயிற்று வியாதியால், 40ல் மிருகத்தால், 47ல நல்ல பாம்பால், 50ல் கள்ளரால், 56ல் நெருப்பால், 80ல் வயிற்று நோயால் கண்டம்.*

*இவை கடந்தால் 90 வயது சென்று பங்குனி மாதம் ஞாயிற்றுக்கிழமை துவாதசியுதித்து வயிற்று வலியால் மரணம்.*

*இவனுக்கு, சூரியன் உதயமாகில் கள்ளன், சந்திரன் உதயமாகில் நன்மையுடையவன், செவ்வாய் உதயமாகில் தேசாந்திரியாவான். புதன் உதயமாகில் வித்தை யுடையவன். வியாழம் உதயமாகில் வேளாண்மை பலிக்கும். வெள்ளி உதயமாகில் வியாபாரி. சனி உதய மாகில் யோகியாவான். இராகு உதயமாகில் உளைச்ச லுடையவன். கேது உதயமாகில் விஷக்காரி துஷ்டன்.*

*இந்நாளில் போசனம் செய்ய மாடு கொள்ள விரை தெளிக்க நெற்போர் கட்ட, சாந்தி பண்ண, அகமெடுக்க, கடன் கொடுக்க ஆகாது.*

பெண் திரளில் மாதம் பிறக்குமுன்னே மரணம் மாதம் பிறக்கில் அகந்தாழும்.

இந்த நட்சத்திரத்தில் ஊர் பிரயாணம் போக வேண்டில் மானிறைச்சி தின்று போகவும். பாதரஜ்ஜீ.

மக நட்சத்திரத்தின் பலன் முற்றும்.

## 11. பூர நட்சத்திரத்தின் பலன்கள்

**வருந்தியே தேட வல்லன் வாணியம் பலவுஞ் செய்யும்**
**விரும்பியே பலவுஞ் செய்யும் வெட்டெனப் பேச வல்லன்**
**சுரும்புசூழ் குழலி னாரைச் சூட்சியாய் வெல்ல வல்லன்**
**பொருந்தியே யுரைக்க வல்லன் பூரநாட் டோன்றி னானே.**

மோ-டா-டீ-டூ இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு பூர நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

இந்த நட்சத்திரம் கட்டிகாற் போலிருக்கும். இது உச்சமானால் விருச்சிகத்தில் 4 நாழிகை செல்லும். இந்நாழிகைக்கு யோனி-பெண்ணெலி, பட்சி-பெண் கழுகு, விருட்சம்-பலாசு, கணம்-மனிதன், ஞாயிற்றுக் கிழமை-சென்ம வாரம், பொருத்தம்-10, கிழக்கு தெற்கு வாசலில் விடுவது, நாள்-பெண், தெய்வம்-விஷ்ணு, பூதம்-அப்பு, சாதி-அனுலோமன், கோத்திரம்-அகஸ்தியன், யோகினி-வராகி.

இந்நாளினுக்கு 33 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம் ஆவணி மாதம் சூனியம்.

இந்நாளிற் பிறந்தவன் அழகியன், கண் செவ்வரி யோடிருக்கும், கல்வியுடையவன், விசனமுடையவன், நெடியன் கோபித்தவுடனே ஆறுவன், பலபேர் சொன்ன காரியத்தைச் செய்பவன்.

## பூரம் முதற்கால் சிங்காதித்தன் பலன்

நீளியசெய்ய சால நிபுணனாய் கல்வி கற்கு
மாளிகைமனையில்வாழு மன்னரால் மகிழ்ச்சியுண்டாம்
வாளிசேர் கண்ணி னன்பான் வலதுகை மருவின் வேளாண்
காளிசேர் வடிவு பேணுங் கதிரவன் காலி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-6, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7 ஆக வயது 100.*

## இரண்டாங்கால் மிதுன புதன் பலன்

மேதைய லங்க சாலன் வேந்தரால் விருப்ப முண்டாம்
மாதுமா லுருவ மாகு மனம் பொறுக் கரிய வொண்ணான்
றாதுசேர் குழலி தன்மேற் றன்பொருள் சார நில்லான்
மாதுரை வலக்கை வேலான் மாலினங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம் : *மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச்செவ்வாய்-7, தனுசு வியாழம்-11, மகரச்சனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-11, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16 ஆக வயது 83.*

## மூன்றாங்கால் வெள்ளி பலன்

தெள்ளிய தியாகி நல்லன் சேயிழை யாரைப் பேணும்
மொள்ளிய கண்ணி யன்ப னொன்பொருள் சார நில்லான்
பள்ளியும் பலவுங் கற்கும் பாக்கியமு டைய னாகும்
வெள்ளியங் கிசத்தில் வந்த விருப்புள காளை தானே.

**இதற்குக் காலச்சக்கரம் :** *மிதுன புதன்-9, சிங்காதித்தன்-5, கடகசந்திரன்-21, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பசனி-4, மகரசனி-4 ஆக வயது 85.*

### நாலாங்கால் விருச்சிக செவ்வாயின் பலன்

**குறுகிய குறளன் மெய்யன் குறலைசேர் குதலை வாயன்**
**மருவிய மனத்தன் பெண்மேல் மனமது சார நில்லான்**
**முருகிய கொடுமை செய்யு முதுகினிற் சூழியு முண்டாஞ்**
**செறிதரு கூந்தல் பேணுஞ் சேயினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம் :** *தனுசு வியாழம்-10, விருச்சிக செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னிபுதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7 ஆக வயது 100.*

*வெள்ளி-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-18, குரு-16,சனி-19, புதன்-17, கேது-7 ஆக வயது 120.*

*இந்த நட்சத்திரம் உச்சமாகில் விருச்சிகத்தின் மூணரை நாழிகை செல்லும் சங்கரஜ்ஜீ.*

பூர நட்சத்திரத்தின் பலன் முற்றும்.

## 12. உத்திர நட்சத்திரத்தின் பலன்கள்

**அழகிய நடைய னாகு மாயிழை தன்னைப் பேணும்**
**பழியது பார்த்து வாழும் பாவங்கள் செய்ய மாட்டான்**
**னுழவரை சேர்த்து வாழு முத்தமர் தம்மைக் காக்கு**
**மொழிபெறு மேனி யாகு முத்திர நாளி னானே.**

*ட-டோ-பா-பீ இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.*

### உத்திர முதற்கால் கன்னியின் பலன்

**சாலவே நல்ல னாகுந் தந்தைதாய் தம்மைப் பேணும்**
**பாலனாங் காலந் தன்னிற் பரிந்து போய் வந்துநிற்குஞ்**
**சீலமு மறிந்து வாழுஞ் சிறப்புட னினிது பேசுங்**
**காலிலே மறுவுண் டென்றுங் கன்னியின் ராசி தானே.**

*இந்த நட்சத்திரம் கட்டிற்கால் போலிருக்கும். இந்நாளினுக்கு யோனி-எருது, பட்சி-மரங்கொத்தி, விருட்சம்-அத்தி, கணம்-மனுஷன், தெய்வம்-ஆதித்தன், பூதம்-அக்கினி, ஜாதி-பிரதிலோமன், கோத்திரம்-அகஸ் தியன், யோகினி-கௌமாரி, ஜாதி-வைணவன், ஞாயிற்றுக் கிழமை-சென்ம வாரம், பொருத்தம்-12, கிழக்கு, தெற்கு வாசல் விடுவது. ஆனி மாசம் சூனியம். இந்நாளினுக்கு 18 நாழிகைக்கு விஷம்.*

### முதற்கால் தனுசு வியாழன் பலன்

**மாந்தளிர் போல மேனி மனமொத்துக் கல்வி கற்கு**
**மேந்திய குலத்துக் கெல்லா மிசைந்ததோ ராச னாகுங்**
**காந்தபி னடக்க மாட்டான் கணங்குழ லார்க்கு நல்லன்**
**சேர்ந்தயர்க் கன்ப னாயிற் செய்யபொற் காலி னானே.**

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 2ல் ஆயுதத்தால், 5ல் விஷத்தால், 7ல் வைசூரியால், 8ல் பேதியால், 14ல் உதர வியாதியால், 15ல் புலியால், 18ல் நெருப்பால், 25ல் அரையாப்பால், 35ல் கண்ணோயால், 37ல் ராசாவால், 47ல் வஞ்சனையால், 57ல் முழங்கால் வாதத்தால், 65ல் சுரத்தால் கண்டம்.*

*இவனுக்கு, ஆதித்தன் உதயமாகில், ராசபுருஷன், வேளாண்மை செய்வன். சந்திரன் உதயமாகில், தேசாந்திரி,*

புதன் உதயமாகில், புத்தியுடையவன். வியாழம் உதயமாகில், வியாபாரி வெள்ளி உதயமாகில், யாவர்க்கும் நல்லவன். சனி உதயமாகில், விசவாசன். மிடியன். ராகு உதயமாகில், கலகன், கேது உதயமாகில், கன்னக்காரன், இந்நாளில் புதன் கூடில் அமிர்தயோகம். பெண் திரளில் மலடி. மாதம் பிறக்கில் அகந்தாழும்.

இந்நாளில் சுரந்தோன்றில் 20 நாழிகையில் விடும். விடாதிருந்தால் நெய், பால், பொரி இவைகளை பெலியிட்டு வேத மந்திரத்தால் ஓமஞ்செய்து அடுத்த விருட்சத்தடியில் அல்லது நீர்க்கரையில் தேவதையை நோக்கிப் பெலியிடவும். அந்நாளில் வானத்தில் வில்லிட்டால் 8 நாழிகையில் மழை பெய்யும். இந்நாளில் பிறந்தவன் செந்நெல் தின்று ஊர்வழி போகவும்.

**இதற்குக் காலச்சக்கரம்:** *மீன வியாழம்-10, கும்பசனி-4, மகரசனி-4, தனுசு வியாழம்-10, விருச்சிக செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21 ஆக வயது 86.*

### இரண்டாங் கால் மகர சனியின் பலன்

**ஊனம துடைய னாகு முறவொடு பகையு மெண்ணான்**
**மானமு முடைய னாகு மனம்பொறுக் கரிய மாட்டான்**
**மேனியு முருவு நல்லன் மிக்கதோ ரறிவு மில்லை**
**கானகந் திரிந்து வாழுங் கடைசனி காலி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மீன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரசனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16 ஆக வயது 83.*

## மூன்றாங்கால் கும்பசனியின் பலன்

**ஆரையுந் தடுத்துப் பேசு மறுவது ஒன்று மில்லான்**
**சீறிய செய்ய வேண்டாஞ் சிதைவதை செய்வ தல்லான்**
**மாரியும் பொய்கள் சொல்லு மனம்பொறுக் கரிய வொண்ணான்**
**காரியங் கிசத்தில் வந்த காளையின் வடிவு தானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மிதுன புதன்-6, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, கன்னி புதன்-6, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்7, மீன வியாழம்-10, கும்பசனி-4 ஆக வயது 85.*

## நாலாங்கால் மீன வியாழன் பலன்

**சிறிதே யொன்றும் பொய்சொல்லான்**
**சிவந்த கண்ணன் சிறுகுழலா**
**னறிவு மிகவே பெருங்குணத்தா**
**னடைந்தோர்க் கன்ப னழகியனாம்**
**பொருள்சேர் மைந்தன் மனையாளைப்**
**பொருளென் றும்புகழ்**
**வரிசேர் கூந்தன் மடமாதே**
**வியாழக் காலிற் பிறந்தானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *தனுசு வியாழம்-10, விருச்சிக செவ்வாய்-7, துலாம் வெள்ளி- , கன்னி புதன்-6, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7 ஆக வயது 100.*

**இனி மகாதிசை :** *சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-18, குரு-16, சனி-19 , புதன்-17, கேது-7 சுக்கிரன்-20 ஆக வயது 120.*

*இந்நாளிற் பிறந்தவனுக்கு மறுவாவது தலையில் வருவதுண்டு. இவன் நல்ல விருப்பமுள்ளவன். கண்ணும்*

கையும் அழகன், குருவுக்கும் தெய்வத்துக்கும் விசுவாசன், அடக்கம் உடையவன். சிடுசிடுப்பன், பாவஞ்செய்யான், இசைகேட்க ஆசையுடையவன். உறவுடையவன், பலனுடையவன், எப்போதும் நல்ல வசனத்தையே பேசுபவன், ஊதாரியாயிருப்பவன், பகையில்லாதவன்.

இவன் பிறந்த ஆண்டில் கண்டம். *3ல் அக்கினியால், 5ல் வைசூரியால், 7ல் ஜலத்தால், 14ல் மிருகத்தால், 19ல் மருந்திடுவதால், 24ல் விஷத்தால், 32ல் ஆயுதத்தால், 45ல் உயரத்திலிருந்து விழுதலால், 55ல் வலிப்பால், 65ல் வெப்பால், 79ல் விஷத்தால்* கண்டம்.

இவை கடந்தால் *86* வயது சென்று பித்தங்கதித்து மரணம். இவை கடந்தால் *96* வயது சென்று வைகாசி மாதம் வெள்ளிக்கிழமை பூர்வ பட்சம் தசமி உத்திரமுதித்து ஏழு நாழிகையில் பித்தங்கதித்து மரணம் அல்லது விஷத்தால் மரணம்.

இவனுக்கு, சூரியன் உதயமாகில் சீமான் புத்திமான். சந்திரன் உதயமாகில் ராஜபுருஷன் கனவான். செவ்வாய் உதயமாகில் வீரன் வித்துவான். புதன் உதயமாகில் பண்டிதன். வியாழன் உதயமாகில் புலவன் மந்திரி. வெள்ளி உதயமாகில் முடவன், சத்துருவை ஜெயிப்பவன். சனி உதயமாகில் கள்ளன், கடையன். ராகு உதயமாகில் கோளன், மூர்க்கன். கேது உதயமாகில் சோம்பன், தேசாந்திரி. இந்நாளில் ஞாயிறு கூடில் மழையுண்டு. மாதம் பிறக்கில் அகந்தாழும்.

சுரந்தோன்றில் *16* நாழிகையில் விடும், விடாதிருந் தால் நெய்யினால் ஓமஞ்செய்து தயிறுஞ்சோறும் பெலியிடவும். ஊர் வழிப்போகில் பால் குடித்துப் போகவும். இந்த நட்சத்திரம் உச்சமாகில் தனுசில் அரைநாழிகை செல்லும். நாபிரஜ்ஜீ.

**உத்திர நட்சத்திரத்தின் பலன் முற்றும்.**

## 13. அஸ்த நட்சத்திரத்தின் பலன்கள்

மெத்தன நடைய னாகும் வெகுளிய துடைய னாகுஞ்
சித்தம துடைய னாகுஞ் சிறுகுறி யாள னாகு
முத்தம குணத்த னாகு முறுதியை யினிதா யுன்னு
மத்தமே தேட வல்ல னத்தநா டோன்றி னானே.

பூ-ஷ-ணா-டா இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு அஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

இந்த நட்சத்திரம் கைத்தலம் போலிருக்கும். இது உச்சமானால் தனுசில் மூணரை நாழிகை செல்லும்.

இந்நாளினுக்கு யோகினி-எருமை, பட்சி-பருந்து, விருட்சம்-அத்தி, கணம்-தெய்வாதித்தன், சாதி-பிராமணன், பூதம்-தேயு, கோத்திரம்-அகஸ்தியன், வெள்ளிக்கிழமை-ஜென்ம வாரம், பொருத்தம்-10, கிழக்கு தெற்கு வாசல் விடுவது.

இந்நாளினுக்கு 22 நாழிகைக்குமேல் 4 நாழிகை விஷம், புரட்டாசி மாதம் சூனியம்.

இவன் வார்த்தையில் வல்லவன். ஆயுதம் பிடிக்க தீரன், இவனுக்கு மார்பு அகன்றிருக்கும். புறவடி உயர்ந் திருக்கும். அழகன், புத்திமான், மேதினியில் விளங்குவான். விருப்பமுடையவன், வித்தையுடையவன், குருவுக்கு நல்லவன், நீராட உவந்தவன். சிறுபசியாளன், பலரையும் ரட்சிப்பவன், கோபித்தவுடனே ஆறுவன், ராஜபிரதாப முடையவன்.

### முதற்கால் மேஷச் செவ்வாயின் பலன்

குருகிய வுருவு மெய்யன் குறளைசேர் குதலை வாயன்
மருவிய மனத்தன் பெண்மேல் மனமது சார நில்லான்

முருதிய கொடுமை செய்ய முதுகினில் மறுவு முண்டாஞ்
செறிதரு கூந்தல் பேணுஞ் சேயினங் கிசத்தி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-6, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-10 ஆக வயது 100.*

### இரண்டாங்கால் மேஷ வெள்ளியின் பலன்

தெள்ளிய தியாகி நல்லன் சேயிழை யாரைப் பேணும்
மொள்ளிய கண்ணில் வேளா னொன் பொருட் கிழவ னாகும்
பள்ளியும் பலவும் கற்கும் பாக்கிய முடைய னாகும்
வெள்ளியங் கிசத்தில் வந்த விருப்புள காளை தானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *மகரச்கனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10, விருச்சிக செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, கடக சந்திரன்-3, சிங்காதித்தன்-4, மிதுன புதன்-9 ஆக வயது 85.*

### மூன்றாங்கால் மிதுன புதன் பலன்

மேதையா லக்க சாலன் வேந்தரால் விருப்ப முண்டாம்
மாது மாலுரு வமாகு மனம்பொருக் கரிய வொண்ணான்
றாதுசேர் குழலா டன்மேற் றன்பொருட் சார நில்லான்
மாதுரு வலகை வேலான் மாலினங் கிசத்தி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பசனி-4, மகரசனி-4, தனுசு வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9 ஆக வயது 83.*

## நாலாங்கால் கடக சந்திரன் பலன்

**தலையது தடிய னாகுந் தன்மனம் பெரிய னாகு**
**மலைதரு வல்ல பத்தன் வடிவுடன் சிறந்த மேனி**
**பலகலை நன்கு கற்கும் பாக்கிய முடைய னாகு**
**மலையென வளர்ந்த தோளான் மதியினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *கடக சந்திரன்-21, சிங்கா தித்தன்-5, கன்னியா புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகர சனி4, கும்பசனி-4, மீன வியாழம்-10 ஆக வயது 86.*

**இனி மகாதிசை :***குரு-16, சனி-19, புதன்-17, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7 ஆக 120.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 3ல் தண்ணீரால், 5ல் விருட்சத்தால், சுரத்தால், 25ல் கள்ளரால், 33ல் மிருகத்தால், 49ல் ராஜாவால், 50ல் வாதத்தால், 57ல் வஞ்சனையால், 68ல் வியாதியால் கண்டம்.*

*இவை கடந்தால் 86 வயது சென்று புரட்டாசி மாதம் செவ்வாய்க்கிழமை பூர்வ பட்சம் திரயோதசி அஸ்த நாளுதித்து ஒரு நாளிகையில் மரணம்.*

*இவை கடந்தால் புரட்டாசி மாதம் வெள்ளிக் கிழமை பூர்வ பட்சம் பிரதமை அஸ்தநாளுதித்து மூன்று நாழிகையில் மரணம்.*

*இவனுக்கு, சூரியன் உதயமாகில் சீமானாம். சந்திரன் உதயமாகில் பட்டத்துக்குடையவன். செவ்வாய் உதய மாகில் சேவகன். புதன் உதயமாகில் வித்துவான். வியாழம் உதயமாகில் ராஜபுருட புருஷன், வெள்ளி உதயமாகில் ஸ்திரீயுடையவன், குருடன். சனி உதயமாகில் பூமி பலிதமுடையவன். இராகு உதயமாகில் பித்தனாவான்.*

கேது உதயமாகில் புத்தியுடையவன். இந்நாள் நமஸ்காரம் பண்ண, மனைகோல நன்று. வானத்தில் வில்லிடில் 23 நாழிகையில் மழை பெய்யும். மாதம் பிறக்கில் அகந்தாழும்.

இந்நாளில் சுரந்தோன்றில் 9 நாழிகையில் விடும். விடாதிருந்தால் நெய்யினால் வேதமந்திர ஓமஞ் செய்து விருட்சத்தடியில் அல்லது நீர்க்கரையில் தேவதையை நோக்கி தயிறுஞ்சோறும் பலியிடவும். இந்நாளில் பிறந்தவன் நெல்லுதின்று (அரிசிச்சோறு) ஊர்வழி போகவும்.

அஸ்த நட்சத்திரம் பலன் முற்றும்.

## 14. சித்திரை நட்சத்திரத்தின் பலன்கள்

**கடுகியே நடக்க வல்லன் கன்றிய மனத்த னாகு**
**மிடுக்கமாங் காலந் தன்னி லீன்றதாய் தந்தை பேணுந்**
**துடியிடை மைந்தர் மாதர் சுகங்களுஞ் சுகிக்க வல்லன்**
**திடமது பேச வல்லன் சித்திரை நாளி னானே.**

பே-போ-ர-ரீ இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

இந்த நட்சத்திரம் உச்சமாகில் தனுசில் 5 நாழிகை செல்லும். இந்நாளினுக்கு யோனி-ஆண்புலி, பட்சி-வான்கோழி, விருட்சம்-வில்வம், கணம்-ராக்ஷதன், தெய்வம்-இந்திரன், பூதம்-தேயு, கோத்திரம்-அக்கினி, யோகினி-சாமுண்டி, வெள்ளிக்கிழமை சென்ம வாரம், ராசி முன்னரை புதன், பின்னரை துலாம், பொருத்தம்-7, கிழக்கு வாசல் விடுவது.

*இந்நாளினுக்கு 20 நாழிகைக்குமேல் 4 நாழிகை விஷம். இந்நாளிற் பிறந்தவன் அழகுடையவன், புத்திமான், ஸ்திரீ கண்ணன், வீண்சொல் பொறான், கோப முடையவன், மார்பு அகன்றிருக்கும், வார்த்தை சொல்ல வல்லவன், தன் வார்த்தை மேலாயிருப்பான், பொருள் தேடி அழிக்க வல்லவன், அரையிலாவது முகத்திலாவது மரு உண்டு.*

**முதற்கால் சிங்காதித்தன் பலன்**

**நீளிய செய்ய சால னிபுணனாய் கல்வி கற்கும்**
**மாளிகை மனையில் வாழு மன்னரால் மகிழ்ச்சி யுண்டாம்**
**வேளிசேர் கண்ணி னன்பன் வேல்திசை மருங்கு வேலால்**
**காளிசேர் வதன னாகுங் கதிரவன் காலி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னியா புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீன வியாழம்-10 ஆக வயது 100.*

**இரண்டாங்கால் கன்னி பலன்**

**மந்திர மறைகள் கற்கு மன்னரா லருளு முண்டாஞ்**
**சுந்தரப் பலன்கள் சொல்லுந் தோன்றிய திசையுந் தோற்று**
**மந்திரப் பொய்கள் சொல்லா னரும்பொரு ளெருங்கி வாழும்**
**புந்தியிற் பெரிய னாகும் புனிதனங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *கும்பசனி-4, மகரசனி-4, தனுசு வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-9 ஆக வயது 85.*

**மூன்றாங்கால் துலாம் வெள்ளியின் பலன்**

**மார்பகன் றுயர்ந்த மெய்யன் மதிமுக மறுவு முண்டாஞ்**
**சீர்திரு முத்தி பேணுஞ் சிறுகுா யாள னாகு**
**மாதர வுடைய னாகு மறிவுட துன்றி கற்குஞ்**
**சார்வது மாதரீ தம்பாற் றரும்புகர் காலினானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகர சனி-4, கும்ப சனி-4, மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9 ஆக வயது 83.*

**இனி மாகதிசை :** *செவ்வாய்-7, ராகு-18, குரு-16, சனி-19, புதன்-17, கேது-7, வெள்ளி-20, சூரியன்-6, சந்திரன்-10 ஆக வயது 120.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 5ல் வயிற்றுக் கட்டி, வெதுப்பால், 7ல் வைசூரியால், 12ல் நாலுகால் மிருகத்தால், 14ல் உயரத்திலிருந்து விழுவதால், 18ல் தண்ணீரால், 22ல் மருந்திடால், 27ல் அரையாப்பால், 25ல் கழல் வாதத்தால், 48ல் நெருப்பால், 64ல் வாதத்தால் கண்டம்.*

*இவை கடந்தால் 99 வயது சென்று பூர்வபட்சம் அஸ்டமி சித்திரை நாளுதித்து 3 நாழிகைக்கு மேல் காலெரிப்பால் மரணம்.*

*இவனுக்கு, ஆதித்தன் உதயமாகில் மிடியன், சந்திரன் உதயமாகில் ராஜபுருஷன், செவ்வாய் உதயமாகில் குட்டையன், கோளன், பாதகன். புதன் உதயமாகில் பண்டிதன், பாடவல்லவன். வியாழம் உதயமாகில் மந்திரியாவன். வெள்ளி உதயமாகில் மிடியன் வாகன முடையவன். சனி உதயமாகில் மிடியன். இராகு உதயமாகில் கலகன். கேது உதயமாகில் கோளன்; மாதம்*

பிறக்கில் அகந்தாழும். சுரந்தோனறில் 7 நாழிகையில் விடும். விடாதிருந்தால் பஞ்சவர்ணச்சோறு பலியிட்டு வேத மந்திரத்தால் ஓமஞ்செய்து அடுத்த விருட்சத்தடியில் தேவதையை நோக்கி பலியிடவும். இந்நாளில் ஊர் வழி போக நேரிட்டால் நல்லெண்ணெய் சாப்பிட்டுப் போகவும்.

சித்திரை நட்சத்திரத்தின் பலன் முற்றும்.

## 15. சுவாதி நட்சத்திரத்தின் பலன்கள்

சொல்லவும் வல்ல னாகுஞ் சொறிபடுங் கைய னாகு
மில்லையென் றுரைக்க மாட்டா னினியசொற் புகழுந் தேடு
மல்லதே பலவுஞ் செய்வ னாயுதம் பிடிக்க வல்லன்
தொல்லுரை பலவுங் கற்குஞ் சோதினா டோன்றி னானே.

ரூ-ரே-ரோ-தா இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

### துலா ராசியின் பலன்

கற்றறிந் தோர்க்கு நல்லன் கடக்கவே கொடுமை செய்யான்
வெற்றியு முடைய னாவன் வெகுளிசொல்லுடைய னாகும்
வித்தைகள் பலவுங் கற்று வீணையும் பாட வல்லன்
சுற்றமுங் கிளையும் வாழுந் துய்யதோர் துலாத்தி னானே.

இந்த நட்சத்திரம் துலாம் போலிருக்கும். இது உச்சமாகில் மகரத்தில் ஒண்ணரை நாழிகை செல்லும். இந்நாளினுக்கு யோனி-கிடா, பட்சி-தேன் ஈ, விருட்சம்- மருதமரம், கணம்-தெய்வம், ஜாதி-வைசியன், தெய்வம்- வாக்கு, பூதம்-அக்கினி, கோத்திரம்-இந்திரன், யோகினி- மகேஸ்வரி, வெள்ளிக்கிழமை-ஜென்மவாரம், பொருத்தம்-7, தெற்கு வாசல் விடுவன.

இந்நாளினுக்கு 14, நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம். ஐப்பசி மாதம் சூனியம். இந்நாளிற் பிறந்தவன், தெய்வ பக்தியுடையவன். புறங்கடி உள்ளங்கால் உயர்ந் திருக்கும். குணவான். விசுவாசி. ஜாதிப் பிறப்புகளுக்கு நல்லவன். போசனப்பிரியன். ஸ்திரீ கண்ணன், துடையில் மறுவுண்டு. உடம்பு பருத்திருக்கும். குள்ளனாயிருப்பான், புத்திரனுண்டு.

**முதற்கால் தனுசு வியாழத்தின் பலன்**

**பொருள்சேர் மைந்தன் மனையாளைப்**
**பொருளென் றெண்ணான் புகழ்விளங்குஞ்**
**சிறிதே யொன்றும் பொய்சொல்லான்**
**சிவந்த கண்ணன் செறிகுழலா**
**னறிவு மிகபெருங் குணத்தா**
**னடைந் தோர்க் கன்ப னழகியனாம்**
**வெறிசேர் கூந்தன் மடமாதே**
**வியாழக் காலிற் பிறந்தானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** மேஷச்செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்கா தித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-10 ஆக வயது 100.

**இரண்டாங்கால் மகர சனியின் பலன்**

**ஆரையு மறிந்து பேணு மரும்பொரு ணெடுங்கி வாழுஞ்**
**சீரிய செய்வ தல்லாம் சிதையவே செய்ய வேண்டான்**
**வாரியாம் பொய்கைகள் சொல்லான் மனம்பொறுக் கரியான் மேலுங்**
**காரியங் குசல னாகுங் காரியங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** மகரசனி-4 கும்பசனி-4, மீன வியாழம்-10, விருச்சிக செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, மிதுன புதன்-9 ஆக வயது 85.

## மூன்றாங்கால் கும்ப சனியின் பலன்

ஊனம துடைய னாகு முறவொடு பகையு மெண்ணான்
மானம துடையோ னாகும் வழக்கறிந் துரைக்க வல்லன்
மேனியு முருவூ நல்லன் மிக்கதோ ரறிவு மில்லன்
கானகந் திரிந்து வாழுங் காரியங் கிசத்தி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *ரிஷபவெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பசனி-4, மகரசனி-4, தனுசு வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9 ஆக வயது 83.*

## நாலாங்கால் மீன வியாழத்தின் பலன்

மாந்தளிர் போல மேனி மதிமுக மறுவுண் டென்று
மேந்திய குலத்தில் கெல்லா மிசைந்ததோர் குருவு மாவன்
காயிந்தபி னடக்க மாட்டான் கணங்குழ லார்க்கு நல்லன்
சேர்ந்தவர்க் கன்ப னாகுஞ் செய்யபொற் காலி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *கடக சந்திரன்-21, சிங்கா தித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகர சனி-4, கும்ப சனி-4, மீன வியாழம்-10 ஆக வயது 86.*

**இனி மகாதிசை :** *ராகு-18, குரு-16, சனி-19, புதன்-17, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, ஆக வயது 120.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 3ல் வெதுப்பால், 4ல் வைசூரியால், 7ல் நாற்கால் மிருகத்தால், 12ல் விஷத்தால், 15ல் உதிர வியாதியால், 25ல் ஸ்திரீகளால், 29ல் மருந்திடலால், 35ல் ராஜபடையால், 40ல் மிருகத் தால், 47ல் முள்ளால், முழங்கால் வாதத்தால், 54ல் நீரிழிவால், 65ல் வயிற்றுக் கடுப்பால் கண்டம்.*

இவை கடந்தால் 73 வயது சென்று ஐப்பசி மாதம் சனிக்கிழமை பூர்வ பட்சம் ஏகாதசி திருவாதிரை உதித்து 20 நாழிகைக்கு மேல் தலைக்குத்தால் மரணம்.

இவனுக்கு, சூரியன் உதயமாகில், வியாபாரி. சந்திரன் உதயமாகில் ,பலர்க்கும நல்லவன். செவ்வாய் உதயமாகில், கோபமுடையவன். புதன் உதயமாகில், பண்டிதன். வியாழம் உதயமாகில், ராசனாவான். வெள்ளி உதயமாகில், வேளாண்மை செய்வான். சனி உதயமாகில், கள்ளன், வல்லவன். ராகு உதயமாகில், தேசாந்திரி. கேது உதயமாகில், குருடன், விகாரி.

இந்நாளில் வானத்தில் வில்லிடில் மழையுண்டு. இந்நாளில் மாடு கொள்ள பொன் கோடியுடுக்க தானம் பண்ண வித்தை சொல்ல நன்று. பெண் திரளில் பிள்ளையுண்டாம். மாதம் பிறக்கில் அகந்தாழும்.

இந்நாளில் சுரம் தோன்றில் 16 நாழிகையில் விடும். விடாதிருநதால் கோதுமையரிசி வேதமந்திரத்தால் ஓமஞ் செய்து விருட்சத்தடியில் அல்லது நீர்க்கரையில் தேவதையை நோக்கி பெலியிடவும். இந்நாளில் பிரதேசம் போக நேரிடில் நெல்லரிசிச் சோறு தின்று போகவும்.

சுவாதி நட்சத்திரத்தின் பலன் முற்றும்.

## 16. விசாக நட்சத்திரத்தின் பலன்கள்

**ஈன்றதாய் தந்தை பேணு மின்பமே தேட வல்ல**
**னீண்டதத் துவத்தைப் பேணு நீதியு முடைய னாகு**
**மீன்றிரை யொன்றுஞ் சொல்லான் வெட்டெனப் பேச வல்லன்**
**வேண்டிய பேர்க்கு நல்லன் விசாகநாட் டோன்றி னானே.**

தீ-தூ-தே-தோ இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

இந்த நட்சத்திரம் சுளகு போலிருக்கும். இது உச்சமாகில் 4 நாழிகை செல்லும்.

இந்நாளினுக்கு யோனி-பெண் புலி, தெய்வம்-சுப்ரமணியர், பூதம், அக்கினி, பட்சி-வல்லக் குருவி, விருட்சம்-விளா, கணம்-அசுரன், வெள்ளிக்கிழமை சென்ம வாரம்.

இந்நாளில் பெண் திரளில் விதவையாவாள். வருஷம் பிறக்கில் அகந்தாழும். இந்நாளினுக்கு 14 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம். இந்நாளில் வெதுப்பு தோன்றில் 20 நாழிகையில் விடும். விடாதிருந்தால் நெய்யால் ஓமஞ்செய்து கந்தபுஷ்பஞ் செய்து உடுத்தின புடவையை கம்பளி ஆடு இவைகள் தானங் கொடுக்கவும். ஆயுசு விருத்தியாகும். இந்நாளிற் பிறந்தவன் நீதியும் தெய்வ பக்தியுமுடையவன். முகம் வட்டமாயிருக்கும் அழகன்.

## முதற்கால் விருச்சிகச் செவ்வாய் பலன்

**வெட்டெனப் பேச வல்லன் வெகுளிமுன் னுடைய னாகுஞ்**
**சிட்டரைஞ் சேர்ந்து வாழுஞ் சிறுகுறி யாள னாகும்**
**பட்டைய மணிந்த தோளன் படைக்கெலாந் தலைவ னாகும்**
**வெட்டென வொன்று மஞ்சா னெரியினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** தனுசு வியாழம்-10, மகரசனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21 ஆக வயது 86.

### இரண்டாங்கால் ரிஷப வெள்ளியின் பலன்

மார்பகன் றுயர்ந்த மெய்யன் மதிமுக மறுவுண் டென்றுஞ்
சீர்தரு முத்தி பேணுஞ் சேய்தருங் கொடுங்கண் ணாளன்
னாதர வுடைய னாகு மறிவுட னறிவு கற்கும்
சார்வது மாதர் தன்பாற் றரும்புகர்க் காலி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பசனி-4, மகரச்சனி-4, தனுசு வியாழம்-10, விருச்சிக செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16 ஆக வயது 83.*

### மூன்றாங்கால் மிதுன புதன் பலன்

மந்திர மறைகள் கற்கு மாதாரா லருளு முண்டாஞ்
சுந்தரப் பலன்கள சொல்லுந் தோளிலே திசையு முண்டா
மந்தரப் பொய்கை சொல்லா னரும்பொரு ணெருங்கி வாழும்
புதியிற் பெரிய னாகும் புதனினங் கிசத்தி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகர சனி-4 ஆக வயது 85.*

### நாலாங்கால் கடக சந்திரன் பலன்

தலையது தடிய னாகுந் தன்மனம் பெரிய னாகு
மலைதரும் வல்ல பத்தன் வடிவுடன் சிறந்த மேனி
கலைபல நன்றி கற்குஞ் கடிமதிக் காளை யாகு
மலையென வளர்ந்த தோளான் மதியினங் கிசத்தி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *மீன வியாழம்-10, கும்ப சனி-4, மகர சனி-4, தனுசு வியாழம்-10, விருச்சிக செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21 ஆக வயது 86.*

**இனி மகாதிசை :** *ராஜா-16, சனி-19, புதன்-17, கேது-7, வெள்ளி-20, சூரியன்-4, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-18 ஆக வயது 120.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 5ல் சிலந்தியால், 7ல் நெருப்பால், 33ல் நீர்ப்பட்டால், 40ல் மிருகத்தால், 55ல் ஆயுதத்தால், சூலை நோயால், 66ல் பித்தவாதத்தால், 68ல் பித்த வாத்தால், வெதுப்பால் கண்டம்.*

*இவை கடந்தால் 89 வயது சென்று ஆவணி மாதம் பூர்வ பட்சம் திரயோதசி செவ்வாய்க்கிழமை விசாக முதித்து 4 நாழிகையில் வெதுப்பு, சிலேத்துமன இளைப்பு தோன்றி மரணம்.*

*இவனுக்கு, ஆதித்தன் உதயமாகில் சீமானாவான். சந்திரன் உதயமாகில் தனவான். செவ்வாய் உதயமாகில் கைவிலங்கு பூணுவன், புதன் உதயமாகில் வேளாண்மை செய்வன். வியாழம் உதயமாகில் ராஜ புருஷன். சனி உதயமாகில் கள்ளன். ராகு உதயமாகில் தபசியாவான். கேது உதயமாகில் துஷ்டன். நாபிரஜ்ஜீ.*

**விசாக நட்சத்திரத்தின் பலன் முற்றும்.**

## 17. அனுஷ நட்சத்திரத்தின் பலன்கள்

**கார்பரி களினும் போலே கடுஞ்சொற்கள் பேச வல்லான்**
**சீரிய செய்ய வேண்டான் செந்தமிழ்க் கொன்று மீயான்**
**நாரனா யிருக்குஞ் சால துக்கமுஞ் சொல்ல வல்ல**
**னாரவே செய்வ தல்லா யனுஷநாட் டோன்ற னானே.**

*இந்நாளினுக்கு தெய்வம் -சூரியன், பூதம்-வாயு, ஜாதி-அனுலோமன், யோனி, பட்சி-சக்கிரவாகப்புள்,*

விருட்சம் மகிழ், கணம்-தேவகணம், தெய்வம்-மோகினி, பிராமணன், செவ்வாய்க்கிழமை ஜென்ம வாரம்.

இந்நாளில் வருஷம் பிறக்கில் அகமேறும். கார்த்திகை மாசம் சூனியம். இந்நாளிற்கு *14* நாழிகைக்கு மேல் *4* நாழிகை விஷம். இந்நாளில் வெதுப்பு தோன்றில் *9* நாழிகையில் விடும். விடாதிருந்தால் நெய்யால் ஓமம் பண்ணவும்.

இவன் கண்ணழகன் பெண்சாதி விருத்தியுள்ளவன். தெய்வம் பிராமணாள் ஆசாரிமார் மாதா பிதா வித்துவான். இவர்கட்கு நல்லவன் தன்னையடைந்த பேருக் கிரக்கமுடையவன். மூக்கு நுனி உயர்ந்திருக்கும், புத்தியுடையவன்.

**முதற்கால் கடக சந்திரன் பலன்**

**தலையது தடிய னாகுந் தன்மனம் பெரிய னாகும்**
**மலையென வளர்ந்த தோளான் வடிவுடன் சிறந்த மேனி**
**கலைபல நன்று கற்குங் கடியதக் காளை யாகும்**
**மலைதரும் வல்ல பத்தன் மதியினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7 ஆக வயது 101.*

**இரண்டாங்கால் கன்னி புதன் பலன்**

**மேதையா லங்க சாளன் வேந்தரால் விருப்ப முண்டாம்**
**மாதுமா லுருவ மாகு மனம்பொறுக் கரிய வொண்ணான்**
**றாதுசேர் குழலி னார்க்குத் தன்மனஞ் சார நில்லான்**
**காதலு முடைய னாகுங் கன்னியங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, கும்பசனி-4, மகரசனி-4, மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16 ஆக வயது 83.*

### மூன்றாங்கால் துலாம் வெள்ளியின் பலன்

**தெள்ளிய செய்ய நல்லன் சேயிழை யாரைப் பேணு**
**மொள்ளிய கண்ணில் வெள்ளா னொன்பொருட் கள்வ னாகும்**
**பள்ளியும் பலவுங் கற்கும் பாக்கிய முடைய னாகும்**
**வெள்ளியங் கிசத்தில் வந்த விருப்புள காளை தானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மிதுன புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்ப சனி-4, மகரசனி-4 ஆக வயது 85.*

### நாலாங்கால் விருச்சிக செவ்வாயின் பலன்

**குறுகிய புருவ மெய்யன் குறளைசேர் குதலை வாயன்**
**மருவிய மனத்தன் பெண்மேன மனமது சார நில்லான்**
**முருகிய கொடுமை செய்யு முனகிலே சுழியு முண்டாஞ்**
**செரிதருங் கூந்தல் பேணுஞ் சேயினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *தனுசு வியாழம்-10, விருச்சிக செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7 ஆக வயது 100.*

**இனி மகாதிசை :** *சனி-19, புதன்-17, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-8, குரு-16 ஆக வயது 120.*

இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 4ல் சிலந்தி வெதுப்பால், 7ல் வெதுப்பால், 13ல் நாய்கடி நீரால், 22ல் ஸ்திரீகளால் மருந்திடலாம், 28ல் நாற்கால் மிருகத்தால், 33ல் சத்ருவால், விஷத்தால், நீரால், 55ல் மண்டை வியாதியால், 65ல் வெதுப்பால், 83ல் வெதுப்பு வயிற்று நோயால் கண்டம்.

இவை கடந்தால் 100 வயது சென்று வைகாசி மாதம் அமரபட்சம் அஷ்டமி செவ்வாய்க்கிழமை அனுஷ முதித்து 7 நாழிகையில் மரணம்.

இவனுக்கு, ஆதித்தன் உதயமாகில் சேதுபதி. சந்திரன் உதயமாகில் தனவான். செவ்வாய் உதயமாகில் ராசனாவான். வெள்ளி உதயமாகில் வேளாண்மை செய்வான். சனி உதயமாகில் குள்ளன். ராகு உதயமாகில் முடவன். கேது உதயமாகில் சோரன்.

இந்த நட்சத்திரம் உதித்தால் கும்பத்தில் இரண்டு நாழிகை செல்லும் முதற்கால் பிதாவுக்கு அரிட்டம் சங்குரஜ்ஜீ.

அனுஷ நட்சத்திரத்தின் பலன் முற்றும்.

## 18. கேட்டை நட்சத்திரத்தின் பலன்கள்

**வலியபோ ரதுவி ருப்பான் வருவினை பொருந்தி வாழும்**
**வலின மிகவுண் டென்று மிகுந்ததோர் தானஞ் செய்வான்**
**கலையது வுடைய னாகுங் கனமிகு பெரிய னாகும்**
**சிலையொரு துடைய னாகுங் கேட்டைநா டோன்றி னானே.**

நோ-யா-ய்-யூ இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

இந்நாளினுக்கு தெய்வம்-சந்திரன், பூதம்-வாயு, ஜாதி-பிரதிலோமன், கோத்திரம்-வைசியன், யோகினி-

கௌமாரி, யோனி-கலைமான், பட்சி-சக்கரவாகப்புள், விருட்சம்-பலா, கணம்-ராக்ஷதன. கார்த்திகை மாதம் சூனியம. வருஷம் பிறக்கில் அகந்தாழும்.

இந்நாளினுக்கு 50 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம். இந்நாளில் வெதுப்பு தோன்றில் 20 நாழியில் விடும். விடாதிருந்தால் விழலரிசியும், எலுமிச்சம் வித்துங் கூட்டி நெய்யினால் ஓமஞ் செய்யவும்.

இந்நாளில் பிறந்தவன் அழகியன் செறிந்த குழலுடையவன். மூக்கு நுனி உயர்ந்திருக்கும். வித்துவான் களுக்கு நல்லவன். தின்னும் பண்டம் வேண்டி யிருப்பவன். வலது புறத்தில் மறுவுண்டு. கல்வியுடையவன் சிவந்த மேனியன். இந்நாளில் பெண் திரளில் விதவை யாவாள்.

### முதற்கால் தனுசு வியாழத்தின் பலன்

**மாந்தளிர் போலு மேனி மனதுடன் கல்வி கற்கு**
**மேந்திய குலத்துக் கெல்லா மிசைந்ததோ ராசனா வான்**
**காய்ந்துபி னடக்க மாட்டான் கனங்குழ லார்க்கு நல்லன்**
**சேர்ந்தவர்க் கன்ப னாகுஞ் செம்பொனங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, சிங்கா தித்தன்-5, கடக சந்திரன்-21, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7 ஆக வயது 100.

### இரண்டாங்கால் மகர சனியின் பலன்

**ஊனமதுடை யனாகு முகந்தவர்க் குரைக்க வல்லன்**
**மானம துடைய னாகு மனம் பிறர்க்கரிய வொண்ணான்**
**மேனியு முருவு நல்லன் மிக்கதோ ரறிவு மில்லை**
**கானகந் திரிந்து வாழுங் காரியினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மிதுன புதன்-9, வெள்ளி-16, மேஷச்செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகர சனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10 ரிஷப வெள்ளி-16 ஆக வயத-85.*

### மூன்றாங்கால் கும்ப சனியின் பலன்

**ஆரையு மறிந்து பேணு மரும்பொருட் கன்ப னாகுஞ்**
**சீரிய செய்ய வேண்டாஞ் சிலவது செய்வன் மிக்க**
**மாரியாய் பொய்கள் சொல்லான் வழக்கறிந் துரைக்க வல்லன்**
**காரியங் குசல னாகுங் காரியங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மிதுன புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பசனி-4, மகரசனி-4 ஆக வயது 85.*

### நாலாங்கால் மீன வியாழத்தின் பலன்

**சிறிதே யொன்றும் பொய்சொல்லான்**
**சிவந்த கண்ணன் சிறுகுழலா**
**னறிவு மிகவே பெருங்குணத்தா**
**னடைந்தோர்க் கன்ப னழகியனாம்**
**பொருள்சேர் மைந்தன் மனையாளைப்**
**பொருளென் றெண்ணான் புகழ்விளங்கும்**
**வெறிசேர் கூந்தன் மடமானே**
**வியாழக் காலிற் பிறந்தானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *தனுசு வியாழம்-10, விருச்சிக செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16 மேஷச் செவ்வாய்-7 ஆக வயது 100.*

**இனி மகாதிசை :** புதன்-17, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-8, குரு-16, சனி-19 ஆக வயது 120.

இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 4ல் உதிர வியாதியால், கண்ணோயால், 7ல் நாய்க்கடியால், 13ல் விஷத்தால், 16ல் எரிவால், 21ல் நீரால், 22ல் ஸ்திரீகளால், 30ல் சூலை நோயால், 50ல் சிரங்கால், கண்ணோயால், 13ல் வெதுப்பால், வயிற்று நோயால் கண்டம்.

இவை கடந்தால் 60 வயது சென்று கார்த்திகை மாதம் அமர பட்சம் திரயோதசி செவ்வாய்க்கிழமை கேட்டை நாளுதித்து 4 நாழிகையில் வெதுப்பு தோன்ற மரணம்.

இவனுக்கு, சூரியன் உதயமாகில், சேனாதிபதி. சந்திரன் உதயமாகில், மந்திரி, செவ்வாய் உதயமாகில், உத்தியோகஸ்தன். புதன் உதயமாகில், கல்விமான். வியாழம் உதயமாகில், பண்டிதன். வெள்ளி உதயமாகில், வியாபாரி. சனி உதயமாகில், கோளன். ராகு உதயமாகில், (பிச்சை) இரந்துன்போன். கேது உதயமாகில், யோகி.

இந்த நட்சத்திரம் உச்சமானால் கும்பத்தில் ஒண்ணரை நாழிகை செல்லும்

இந்நாளில் பிள்ளையாவது பெண்ணாவது பிறந்தால் தாய், தந்தை, மாமன் இவர்களுக்கு தோஷம்.

இதுக்குப் பரிகாரம் ஆவின்பால் சிவாலயங்களுக்கு அபிஷேகஞ் செய்து நெய் தாமரை நூலால் தீபம் வைத்து பிராமணர்களுக்கு போசனஞ் செய்வித்து திருவள்ளு வருக்கு அபிசேக தானஞ் செய்யவும். பாதரஜ்ஜீ.

**கேட்டை நட்சத்திரத்தின் பலன் முற்றும்.**

## 19. மூல நட்சத்திரத்தின் பலன்கள்

**அகலிய சொல்ல வல்ல னாயுதம் பிடிக்க வல்லன்**
**சுகமுறு சிறுவ னாகுஞ் சுற்றமுஞ் சூழ்ந்து வாழும்**
**மிகவியற் கல்வி கற்கும் வேட்கைமேல் விருப்ப மில்லான்**
**முகமது கலிய னாகு மூலநா டோன்றி னானே.**

யே-யோ-யா-யீ இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

### தனுசு இராசியின் பலன்

**சிந்தையில் வணிக னாகுந் திருவுரு மார்ப னாகு**
**மந்தமா மழக னாகு மரிவையர் வசத்த னாகுங்**
**கந்தமாம் பானு கந்த காதலாய்க் கல்வி கற்குந்**
**தந்தைதாய் தம்மைப் பேணுந் தக்கதோர் தனுவி னானே.**

இந்நாளினுக்கு தெய்வம்-ஈஸ்வரன், பூதம்-வாயு, யோகினி-வராகி, சாதி-பிராமணன், கோத்திரம்- புலஸ்தியன், யோனி-பெண் நாய், பட்சி-செம்போத்தை, கணம்-ராட்சதன், வியாழக்கிழமை-சென்ம வாரம்.

இந்நாளினுக்கு மார்கழி மாதம் சூனியம். 20 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம்.

இந்நாளில் சுரந் தோன்றில் 4 நாழிகையில் விடும். விடாதிருந்தால் வேதமந்திரரத்தினாலே ஓமஞ் செய்து கருப்பஞ்சாற்றால் சாதம் சமைத்து பெலியிடவும்.

உடுத்தின வஸ்திரம், கம்பளி, ஆடு தானங் கொடுக்கவும். உளுந்து சோறும், கடுகும் கலந்து நாலு திசைக்கும் பெலியிடவும்.

இந்நாளிற் பிறந்தவன் கோபமுடையவன், செய் நன்றி உடையவன், பண்டிதனாயிருப்பான், வீண் சொல் பொறான். புறவடி உயர்ந்திருக்கும், கண் செவ்வரி பரந்திருக்கும்.

### முதற்கால் மேஷச் செவ்வாயின் பலன்

**குருகிய புருவ மெய்யன் குரலைசேர் குதலை வாயன்**
**மருவிய மனத்தன் பெண்மேன் மனமது சார நில்லான்**
**முழுகிய கொடுமை செய்யு முதுகினிற் சுழியு முண்டாம்**
**செறிதரு கூந்தல் பேணுஞ் சேயினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10 ஆக வயது 100.*

### இரண்டாங்கால் ரிஷப வெள்ளியின் பலன்

**தெள்ளிய தியாகி நல்ல சேயிழை யாரைப் பேணு**
**மொள்ளிய கண்ணில் வெள்ளை னுருப்பொரு ணிருப னாகும்**
**பள்ளியும் பலவுங் கற்கும் பாக்கிய முடைய னாகும்**
**வெள்ளியங் கிசத்தில் வந்த விருப்புள காளை தானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மகரசனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, மிதுன புதன்-9 ஆக வயது 85.*

### மூன்றாங்கால் மிதுன புதன் பலன்

**மேதைய லங்க சாலன் வேந்தரால் விருப்ப முண்டாம்**
**மாதுமா லுருவ மாகி மனம்பொறுக் கரிய வொண்ணான்**
**றாதுசேர் குழலி னானே தன்பொருள் சார நில்லான்**
**மீதுரு வலக்கை வேளான் மிதுனவங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பச்சனி-4, மகரசனி-4, தனுசு வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9 ஆக வயது 83.*

**நாலாம் கால் கடக சந்திரன் பலன்**

**தலையது தடிய னாகுஞ் தன்மனம் பெரிய னாகும்**
**மலைதரு வல்ல பத்தன வடிவுடன சிறந்த மேனி**
**கலைபல நன்று கற்கும் கடியதக் காளை யாகும்**
**மலையென வளர்ந்த தோளான் மதியினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழன்-10, மகரச்சனி-4, மீன வியாழம்-10 ஆக வயது 86.*

**இனி மகாதிசை :** *கேது-7, வெள்ளி-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-18, குரு-16, சனி-19, புதன்-17 ஆக வயது 120.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 12ல் மிருகத்தால், 20ல் உயரமேறி விழுதலால், 44ல் சத்துருவால், 14ல் வெதுப்பால், சூலை நோயால், 75ல் தலை நோயால், 80ல் பேதியால் சிலேத்துமத்தால் கண்டம்.*

*இவை கடந்தால் 100 வயது சென்று ஆவணி மாதம் அமரபட்சம் பஞ்சமி வெள்ளிக்கிழமை மூல நட்சத்திர முதித்து 15 நாழிகையில் வெதுப்பு பித்தந்தோன்றி மரணம்.*

*இவனுக்கு, ஆதித்தன் உதயமாகில், தனபதி. சந்திரன் உதயமாகில், சீமானாவான். செவ்வாய் உதயமாகில்,*

கோளன். புதன் உதயமாகில், மணியக்காரன். வியாழம் உதயமாகில், ராஜ புருஷன். வெள்ளி உதயமாகில், வியாபாரி. சனி உதயமாகில், கலகன். கேது உதயமாகில், மிடியன்.

இந்த நட்சத்திரம் உச்சமானால் கும்பத்தில் 4நாழிகை செல்லும். பாதரஜ்ஜீ.

மூல நட்சததிரத்தின பலன் முற்றும்.

## 20. பூராட நட்சத்திரத்தின் பலன்கள்

**கையது கடின மாகும் கருமங்கள் பலவுஞ் சொல்லான்**
**தையலுக் கினிய னாகுந் தந்தைதாய் தமக்கு நல்லன்**
**மெய்யதுக் குடைய னாகும் விரும்பியே கல்வி கற்கும்**
**பொய்யுரை யொன்றுஞ் சொல்லான் பூரநா டோன்றி னானே.**

பூ-கா-பா-டா இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு பூராட நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

இந்நாளினுக்கு தெய்வம்-ஈஸ்வரன், பூதம்-வாயு, ஜாதி-வைசியன், கோத்திரம்-புலஸ்தியன், யோனி-ஆண் குரங்கு, பட்சி-வண்டாலங்குருவி, விருட்சம்-வன்னி மரம். கணம்-மனுசன், ஜென்ம வாரம் வியாழக்கிழமை.

இந்நாளில் வருஷம் பிறக்கில் அகமேறும். 24 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம்.

இதில் வெதுப்பு தோன்றில் 8 நாளில் விடும். விடாத போது மந்திரஞ்சொல்லி நெய்யாலே ஓமஞ்செய்து கடுகு மாமிசம் பெலியிட்டு திசை தானம் பண்ணவும்.

*இந்நாளில் பெண் திரளில் விதவையாவாள். இந்நாளிற் பிறந்தவன் திருவுடையவன். வித்தை மேலோசையுடையவன், வீரியன், திறமையுள்ளவன்.*

**முதற்கால் சிங்காதித்தன் பலன்**

**நீளிய செய்ய சால நிபுணனாய் நேசஞ் செய்வன்**
**மாளிகை மனையில் வாழ்வான் மன்னரால் மகிழ்ச்சி யுண்டாம்**
**வாளிசேர் கன்னி யாகி மனமது சார நில்லான்**
**காளிசேர் வடிவு தோன்றுங் கதிரவன் காலி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீன வியாழம்-10 ஆக வயது 100.*

**இரண்டாங்கால் கன்னி புதன் பலன்**

**மந்திர மறைகள் கற்கு மாதரா லருளு முண்டாஞ்**
**சுந்தரப் பலன்கள் சொல்லுந் தோளிலே திசையு முண்டா**
**மந்திரப் பொய்கள் சொல்ல மரும்பொரு ணெருங்கி வாழும்**
**புந்தியிற் பெரிய னாகும் புதனினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மகரசனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-9 ஆக வயது 85.*

**மூன்றாங்கால் துலாம் வெள்ளியின் பலன்**

**மார்பகன் றுயர்ந்த மெய்யன் மதிமுக மறுவுண் டென்றுஞ்**
**சீர்திரு முத்தி பேணுஞ் சேய்தருங் கொடுங்கண் ணாளன்**
**னாதர வுடைய னாகு மறிவுட னன்றி கற்குஞ்**
**சார்வது மாதர் தம்பாற் றரும்புகர்க் காலி னாவன்.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரச்சனி-4, கும்பச் சனி-4, மீன வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9 ஆக வயது 83.*

## நாலாங்கால் விருச்சிகச் செவ்வாயின் பலன்

**வெட்டெனப் பேச வல்லன் வெகுளிமுன் னுடைய னாகுஞ்**
**சிட்டரைச் சேர்ந்து வாழுஞ் சிறுகுறி யாள னாகும்**
**பட்டய மணிந்த தோளன் படைக்கெலாந் தலைவ னாகு**
**மிட்டருக் கினிய னாகி மெரியினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பச் சனி-4, மகரச் சனி-4, தனுசு வியாழம்-10 ஆக வயது 120.*

**இனி மகாதிசை :** *சுக்கிரன்-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-18, குரு-16, சனி-19, புதன்-17, கேது-7 ஆக வயது-120.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 4ல் வெதுப்பால், 9ல் மிருகத்தால், 11ல் நீர்ப்பட்டால், 19ல் விருட்சத்தால், 22ல் கண்ணோயால், அக்கினிக் கிரந்தியால், 28ல் தேசாந்திரம், 30ல் ராசாவால், 34ல் சத்துருவால், 40ல் வெதுப்பால், 45ல் பக்க வியாதி மூலத்தால், 57ல் வாதத்தால், வெதுப்பால், 59ல் சிலேட்டுமத்தால், 67ல் வெதுப்பால் கண்டம.*

*அவை கடந்தால் 86 வயது சென்று ஐப்பசி மாதம் அமரபட்சம் பிரதமை வெள்ளிக்கிழமை மூல நாளுதித்து 21 நாழிகையில் வெதுப்பித்த சிலேத்துமத்தால் மரணம்.*

இவனுக்கு, ஆதித்தன் உதயமாகில் வெகுமனத்தன். சந்திரன் உதயமாகில் பயிர்பலனுடையவன். செவ்வாய் உதயமாகில் நன்மைப்பட வாழ்வன். வியாழம் உதய மாகில் சூரன். சனி உதயமாகில் கல்வியுடையவன். சனி உதயமாகில் ஊனனாவன். ராகு உதயமாகில் கள்ளல் துஷ்டன். கேது உதயமாகில் தரித்திரமுடையவன்.

இந்த நட்சத்திரம் உச்சமாகில் மீனத்தில் ஒண்ணரை நாழிகை செல்லும்.

இந்நாளில் பிள்ளை பிறந்தால் மாதா, பிதா, மாமன் இவர்களுக்காகாது. இதற்குப் பரிகாரம் சிவலிங்கத்திற்கு அர்ச்சனை செய்து அன்னாபிஷேகஞ் செய்யவும். திருவள்ளுவருக்கு அறுசுவை அன்னமிட்டு கம்பளிதானங் கொடுக்கவும். சங்கரஜ்ஜீ.

பூராட நட்சத்திரத்தின் பலன் முற்றும்.

## 21. உத்திராட நட்சத்திரத்தின் பலன்கள்

**நித்தனைத் துதிக்க வல்ல னிசமுகந் தாட வல்லன்**
**கொத்தலர் குழலி னார்க்குக் குவிமுலை வசத்த னாகுஞ்**
**சித்தம துடைய னாகுஞ் செகந்தனிற் சலித்தோர்க் கீவா**
**னுத்தம குணத்த னாகு முத்திராட நாளி னானே.**

பே-போ-ஜ-ஜீ இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

### மகர ராசியின் பலன்

**நிலையின்றித் திரிந்து வாழு நிர்மன துடைய னாகுங்**
**கலைபல நன்றி கற்குங் கருமமே கருதிச் செய்வான்**
**வலைமன மருன முள்ளோன் வழக்கறிந் துரைக்க வல்லன்**
**மலையெழு கடலுங் கீர்த்தி வாய்த்திடு மகரத் தானே.**

இந்நாளினுக்கு தெய்வம்-ஈஸ்வரன், பூதம்-அக்கினி, யோகினி-மகேஸ்வரி, ஜாதி-வைசியன், கோத்திரம்-வசிட்டன், யோனி-மலட்டுப் பசு வலியன், விருட்சம்-பலாமரம், கணம்-மனிதன், வியாழக்கிழமை-ஜென்ம வாரம்.

இந்நாளில் பெண் திரளில் தனதான்ய சம்பத்தும், புத்திரரும் உண்டாம். இந்நாளில் வருஷம் பிறக்கில் அகந்தாழும். இந்நாளிற்கு 30 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம்.

இதில் வெதுப்பு தோன்றில் 9 நாளில் விடும். விடாதிருந்தால் வேதமந்திரஞ் சொல்லி நெய்யாலே ஓமஞ் செய்து பொரியும் எள்ளும் பாலுங்கலந்து பெலியிட்டு உடுத்திய வஸ்திரம் கம்பளி ஆடு இவை தானஞ் செய்யவும். இந்நாளில் ஊர்ப் பிரயாணம் போக நேரிட்டால் பாலுஞ் சோறும் புசித்துப்போகவும்.

இந்நாளிற் பிறந்தவன் தெய்வத்திற்கும் குருவுக்கும் பிராமணருக்கும் நல்லவன். பக்தியுடையவன், எருமை விருத்தி உடையவன். இவன் மனதை ஒருவராலும் அறியப்படாது. அவனுக்கு முகத்திலேயாவது அரையிலே யாவது மருவுண்டு சிவந்த கண்ணன்.

**முதற்கால் தனுசு வியாழத்தின் பலன்**

**சிறிதே யொன்றும் பொய்சொல்லான்**
**சிவந்த கண்ணன் சிறுகுழலா**
**னறிவு மிகவே பெருங்குணத்தா**
**னடைந்தோர்க் கன்ப னழகியனாம்**
**பொருள்சேர் மைந்தர் மனையாளைப்**
**பொருளென் றெண்ணான் புகழ்விளங்கும்**
**வெறிசேர் கூந்தன் மடமானே**
**வியாழக் காலிற் பிறந்தானே.**

**இதற்குக் காலச்சக்கரம் :** *மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிக செவ்வாய்-7, தனுசு வியாழம்-10 ஆக வயது 100.*

### இரண்டாங்கால் மகரச் சனியின் பலன்

**ஆரையு மறிந்து பேணு மரும்பொருட் கன்ப னாகுஞ்**
**சீரிய செய்ய வேண்டாஞ் சிலவது செய்வன் மிக்க**
**வாரியால் பொய்கள் சொல்லான் வழக்கறிந் துரைக்க வல்லன்**
**காரியங் கிசத்தில் வந்த கருத்து காளை தானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மகரச் சனி-4, கும்பச்சனி-4, மீன வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9 ஆக வயது 85.*

### மூன்றாங்கால் கும்பச் சனியின் பலன்

**ஊனமில் மனத்த னாகு முற்றவர் பழியு மேறான்**
**மானம துடையோ னாகும் வழக்கறிந் துரைக்க வல்லன்**
**மேனியு முருவ நல்லன் மிக்கதோ ரறிவு மில்லை**
**கானகந் திரிந்து வாழுங் காரியங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பச்சனி-4, மகரச்சனி-4, தனுசு வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9 ஆக வயது 83.*

### நாலாங்கால் மீன வியாழத்தின் பலன்

**மாந்தளிர் போலு மேனி மனமிகு கல்வி கற்கும்**
**மேந்திய குலத்திற் கெல்லா மிசைந்ததோர் குருவு மாவான்**
**காய்ந்தபி னடக்க மாட்டான் கனங்குழ லாக்கு நல்லன்**
**சேர்ந்தவர்க் கன்ப னாவன் செய்யபொற் காலி னானே.**

**இனி மகாதிசை :** *சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-18, குரு-16, சனி-19, புதன்-17, கேது-7, சுக்கிரன்-20 ஆக வயது 120.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 3ல் வெதுப்பால், 5ல் சிலந்தியால், 7ல் கண்ணேறால், 13ல் கிரந்தியால், 16ல் மிருகத்தால், 22ல் நீரால், 27ல் ஸ்திரீகளால், விருட்சத்தால், 28ல் கண்ணோயால், 55ல் நீர்ப்பட்டால், மூலத்தால், 85ல் வலிப்பால், 87ல் சிலேட்டுமத்தால் கண்டம்.*

*இவை கடந்தால் 100 வயது சென்று மாசி மாதம்* அமரபட்சம் பிரதமை அனுஷ நாளுதித்து 14 நாழிகையில் சிலேட்டுமத்தால் வலிப்புதோன்றி மரணம்.

இவனுக்கு, சூரியன் உதயமாகில் கல்வியுடையவன். சந்திரன் உதயமாகில் பிரதானியாவன். செவ்வாய் உதயமாகில் நோயாளியாவன். புதன் உதயமாகில் வித்துவானாவன். வியாழம் உதயமாகில் புத்திரருடையவன். வெள்ளி உதயமாகில் வாகனமுடையவன். சனி உதயமாகில் மிடியன். இராகு உதயமாகில் கள்ளன். கேது உதயமாகில் துஷ்டன்.

இந்த நட்சத்திரம் உச்சமாகில் மீனத்தில் நாலு நாழிகை செல்லும். நாபிரஜ்ஜீ.

உத்திராட நட்சத்திரத்தின் பலன் முற்றும்.

## 22. திருவோண நட்சத்திரத்தின் பலன்கள்

**ஓதிய பொருளும் வல்ல னுயர்ந்திடும் புகழும் பூண்பான்**
**காதலால் குழலினார்க்குக் கனத்தொடு முயல வல்லன்**
**சாதியு நெறியுமுள்ளோன் தத்துவமுணர வல்லன்**
**றீதொரு நாளுஞ்செய்யான் றிருவோண நாளி னானே.**

கீ-க-கே-கோ இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

இந்நாளினுக்கு தெய்வம்-விஷ்ணு, பூதம்-வாயு, யோகினி-மகேஸ்வரி, ஜாதி-வைசியன், கோத்திரம்-வசிஷ்டன், யோனி-பெண் குரங்கு, பட்சி-மாடப்புறா, விருட்சம்-எருக்கு, சனிக்கிழமை-ஜென்ம வாரம், கணம்-தெய்வம்.

இந்நாளில் வருஷம் பிறக்கில் அகமேறும். இந் நாளிற்கு *10* நாழிகைக்கு மேல் *4* நாழிகை விஷம். இந்நாளில் வெதுப்பு தோன்றில், *7* நாளில் விடும், விடாதிருநதால் வேதமந்திரம் சொல்லி நெய்யாலே ஓமம் பண்ணவும். பெண் திரளில் பிள்ளையுணடாம்.

இந்நாளிற் பிறந்தவன் தெய்வம், குரு, பிராமணாள், இவர்களுக்குப் பிரியமுடையவன், தன தான்யமுடையவன், முன்கோபி, நீராடப்பிரியன், அழகியன்.

**முதற்கால் மேஷச் செவ்வாயின் பலன்**

**வெட்டெனப் பேச வல்லன் வெகுளிமுன் னுடைய னாகுஞ்**
**சிட்டரைச் சேர்ந்து வாழுஞ் சிறுகுறி யாள னாகும்**
**பட்டைய மணிந்த தோளான் படைக்கெலாந் தலைவ னாகு**
**மிட்டருக் கினிய னாகி மெரியினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** தனுசு வியாழம்-*10*, மேஷச் செவ்வாய்-*7*, ரிஷப வெள்ளி-*16*, மிதுன புதன்-*9*, சிங்காதித்தன்-*5*, கடக சந்திரன்-*21*, கன்னிபுதன்-*9*, துலாம் வெள்ளி-*16*, விருச்சிகச் செவ்வாய்-*7* ஆக வயது *103*.

## இரண்டாங்கால் ரிஷப வெள்ளியின் பலன்

மார்பகன் றுயர்ந்த மெய்யன் மதிமுகம் மறுவுண் டென்றுஞ்
சீர்திரு முத்தி பேணுஞ் சேய்தருங் கொடுங்கண் ணாளன்
னாதர வுடைய னாகு மறிவுட னன்றி கற்கும்
சார்வது மாதர் தம்பாற் றரும்புகர்க் காலி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பச்சனி-4, மகரச்சனி-4, தனுசு வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16 ஆக வயது 83.*

## மூன்றாங்கால் மிதுன புதன் பலன்

மந்திர மறைகள் கற்கு மாதரா லருளு முண்டாஞ்
சுந்தரப் பலன்கள் சொல்லுந் தோளிலே திசையு முண்டோ
மந்தரப் பொய்கள் சொல்லா னரும்பொரு ணெருங்கி வாழும்
புந்தியிற் பெரிய னாகும் புதனினங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *கன்னிபுதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரச்சனி-4 கும்பச்சனி-4 ஆக வயது 85.*

## நாலாங்கால் சிங்காதித்தன் பலன்

நீளிய செய்ய சால நிபுணனாய் நேசஞ் செய்வன்
மாளிகை மனையில் வாழ்வன் மன்னரான் மகிழ்ச்சி யுண்டாம்
வாளிசேர் கன்னி யாகு மனமது சார நில்லான்
காளிசேர் வடிவு தோன்றுங் கதிரவன் காலி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *மீன வியாழம்-10, கும்பச்சனி-4, மகரச்சனி-4, தனுசு வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்-21 ஆக வயது 86.*

**இனி மகாதிசை** : *சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-18, குரு-16, சனி-19, புதன்-17, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-6 ஆக வயது 120.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 3ல் வெதுப்பால், 13ல் மிருகத்தால், 25ல் வயிற்று நோயால், 28ல் ஸ்திரீ களால், 30ல் எழுச்சியால், 39ல் கண்ணோயால், ஆயுத்தால், 47ல் வயிற்று நோயால், 55ல் தந்த வியாதியால், 65ல் சிலேத்துமத்தால் கண்டம்.*

*இவை கடந்தால் 85 வயது சென்று மார்கழி மாதம் அமரபட்சம் பிரதமை திங்கட்கிழமை யுதித்து 27 நாழிகைக்கு மேல் சிலேட்டுமத்தால் வெதுப்பு தோன்றி மரணம்.*

*இவனுக்கு, ஆதித்தன் உதயமாகில், ஆகம சாஸ்திரங் கற்று ஆச்சாரியனாவான்.. சந்திரன் உதயமாகில், அரசன். செவ்வாய் உதயமாகில், நோயாளி. புதன் உதயமாகில், கல்வியுடையவன். வியாழம் உதயமாகில், மந்திரி. வெள்ளி உதயமாகில், வாகனமுடையவன். சனி உதயமாகில், கள்ளன். ராகு உதயமாகில், கோளன். கேது உதயமாகில், தரித்திரன்.*

*இந்த நட்சத்திரம் உச்சமாகில் மேஷத்தில் 3நாழிகை செல்லும். கண்ட ரஜ்ஜீ.*

**திருவாண நட்சத்திரத்தின் பலன் முற்றும்.**

## 23. அவிட்ட நட்சத்திரத்தின் பலன்கள்

**முன்னுரை யுடைய னாகு முகமலர்ந் தினிது சொல்வன்**
**றன்னுடன் பிறந்த மாமன் றாயுடன் கலித்து பேசும்**
**பொன்னுடன் மணியு முத்துப் புகழ்பற வணிய வல்ல**
**னன்னமென் னடையி னாலே யவிட்டநா டோன்றி னானே.**

கா-கீ-கூ-கே இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குப் பெயர் சூட்டலாம்.

இந்நாளினுக்குத் தெய்வம்-பரமேஸ்வரன், யோகினி-சாமுண்டி, ஜாதி-பிராமணன், கோத்திரம்-புலஸ்தியன், யோனி-பெண் சிங்கம், பட்சி-வண்டு, விருட்சம்-வன்னி, கணம்-ராக்ஷதன், சனிக்கிழமை ஜென்ம வாரம் 10 நாழிகைக்கு மேல் 4 நாழிகை சூனியம்

இந்நாளிற் பெண் திரளில் தனதான்ய புத்திர சம்பத்துண்டாகும். வருஷம் பிறக்கில் அகந்தாழும்.

இந்நாளில் சுரந்தோன்றில் 4 நாழிகையில் விடும். விடாதிருந்தால் விருட்சத்தடியில் அல்லது நீர்க்கரையில் ஓமஞ் செய்து பாலுந்சோறும் பெலியிட்டு உடுத்திய வஸ்திரம், கம்பளி. ஆடு தானங்கொடுக்கவும்.

இந்நாளிற் பிறந்தவன் முன்கோபி, ஒன்றுக்கும் அஞ்சான், கை, கால் அழகியன், தெய்வபக்தி, குரு பக்தி யுடையவன், பசு, எருமை விருத்தியுள்ளவன், நீராடப் பிரியன், தருமங்கள் பலவுஞ் செய்வன், புறவடி உயர்ந்தவன், தன்சொல் மேன்மைப்பட வாழ்வன், கண்ணீர் மிகவுமுடையவன்.

### முதற்கால் கடக சந்திரன் பலன்

தலையது தடிய னாகுந் தன்மனம் பெரிய னாகும்
மலைதரும் வல்ல பத்தன் வடிவுடன் சிறந்த மேனி
கலைபல நன்றி கற்குந் கடிமதிக் காளை யாகும்
மலையென வளர்ந்த தோளான் மதியினங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *மீனவியாழம்-10, கும்பசனி-4, மகரச்சனி-4, தனுசு வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, சிங்காதித்தன்-5, கடக சந்திரன்21 ஆக வயது 86.*

### இரண்டாங்கால் மிதுன புதன் பலன்

மேதையா லங்க சாலன் வேந்தரால் விருப்பமுண்டா
மாதுமா லுருவ மாகு மனம்பொறுக் கரிய வொண்ணான்
றாதுசேர் குழலி னாளே தன்பொருள் சார நில்லான்
மீதுரு வலக்கை வேலான் மிதுனனங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரச்சனி-4, கும்பச் சனி-4, மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9 ஆக வயது 8.*

### மூன்றாங்கால் ரிஷப வெள்ளியின் பலன்

தெள்ளிய தியாகி நல்ல சேயிழை யாரைப் பேணு
மொள்ளிய கண்ணில் வெள்ளா னுருபொரு னிருப னாகும்
புள்ளியும் பலவுங் கற்கும் பாக்கிய முடைய னாகும்
வெள்ளியங் கிசத்தில் வந்த விருப்புள காளை தானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரச்சனி-4, கும்பச் சனி-4, மீன வியாழம்-10 ஆக வயது 86.*

**நாலாங்கால் விருச்சிகச் செவ்வாயின் பலன்**

**குருகிய புருவ வெய்யன் கிறலைசேர் குதலை வாயன்**
**மருவிய மனத்தன் பெண்மேன் மனமது சார நில்லான்**
**முழுகிய கொடுமை செய்யு முதுகினிற் சுழியு முண்பாஞ்**
**செறிதரு கூந்தல் பேணுஞ் சேயினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10 ஆக வயது 100.*

**இனி மகாதிசை :** *செவ்வாய்-7, ராகு-18, குரு-16, சனி-19, புதன்-17, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-6, சந்திரன்-10 ஆக வயது 100.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 5ல் சுரத்தால், 7ல் உதிர வியாதியால், 13ல் உயரத்திலிருந்து விழுவதால், 16ல் நாய்க்கடி விஷத்தால், 22ல் ஸ்திரீகள் மருந்தால், 26ல் அரையாப்பால், 32ல் ராஜாவால் ஆயுதத்தால், 36ல் கள்ளரால், சுரத்தால், 75ல் சிரங்கால் தெய்வத்தால் பித்தத்தால் கண்டம்.*

*இவை கடந்தால் 96 வயது சென்று மாசி மாதம் பூர்வபட்சம் அஸ்த நட்சத்திரம் ஞாயிற்றுக்கிழமை விக்கல் இளைப்பு தோன்றி மரணம்.*

இவனுக்கு, ஆதித்தன் உதயமாகில் சீமான். சந்திரன் உதயமாகில் மந்திரி. செவ்வாய் உதயமாகில் தனபதி. புதன் உதயமாகில் கல்வியுடையவன். வியாழம் உதயமாகில் தனவான். சனி உதயமாகில் மிடியன். இராகு உதயமாகில் கலகன். கேது உதயமாகில் மிடியன்.

இந்த நட்சத்திரம் உச்சமாகில் ரிஷபத்தில் அரை நாழிகை செல்லும்.

இந்நாளில் குழந்தை பிறந்தால் மாமனுக்கும், அண்ணனுக்கும் ஆகாது. இதற்குப் பரிகாரம் விஷ்ணு பூஜை செய்யவும். சிரோரஜ்ஜீ.

அவிட்ட நட்சத்திரத்தின் பலன் முற்றும்.

## 24. சதய நட்சத்திரத்தின் பலன்கள்

**வித்தையில் வலிமை யாவன் விவேக மறிந்து பேச**
**எத்திசை தனினுங் கீர்த்தி யிசையவே பெற்று வாழ்வன்**
**புத்திரர் மனைவி யோடு பொருந்தியே வாழ வல்லன்**
**சத்திய முடைய னாகுஞ் சதையநா டோன்றி னானே.**

கோ - ஸா - ஸீ - ஸூ இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

### கும்ப ராசியின் பலன்

**சீர்மையு முடைய னாகுஞ் சிறந்ததோர் கல்வி கற்ப**
**னீர்மையு முடைய னாகு நெறியறிந் துரைக்க வல்லன்**
**வார்முலை தோகை மாதர் மனங்கொளு மனத்த னாகுங்**
**சுவர்மையு முடைய னாகுங் குலாவிய கும்பந் தானே.**

இந்நாளினுக்குத் தெய்வம்- சந்திரன், பூதம்-ஆகாயம், ஜாதி-சூரியன், கோத்திரம்- அகஸ்தியன், யோகினி-துர்க்கை, யோனி-பெண் நாரை, பட்சி-அண்டங்காக்கை, விருட்சம்-கடம்ப மரம், கணம்- ராட்சதன், ஜென்ம வாரம்-சனிக்கிழமை.

இந்நாளில் பெண் திரளில் பெண் பெறுவாள் அல்லது மிடிபடுவள், வருஷம் பிறக்கில் அகந்தாழும். இந்நாளில் 18 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம்.

இந்நாளில் சுரந்தோன்றில் 9 நாழிகையில் விடும். விடாதிருநதால் எள்ளுசோறு மாவு இவைகளைக் கலந்து பெலியிட்டு வேதமந்திரஞ் செபித்து ஓமஞ்செய்து உடுத்திய வஸ்திரம் கம்பளி ஆடு இவை தானங் கொடுக்கவும்.

இந்நாளில் பிறந்தவன் அழகிய ஸ்திரீ கண்ணன். முன்கோபி, சகல காரியங்களையும் விரும்பிச் செய்வன், ராஜ புருஷன். தெய்வசகாயமுடையவன்.

### முதற்கால் மீன வியாழத்தின் பலன்

**மாந்தளிர் போலு மேனி மனமொத்தக் கல்வி கற்கு**
**மேந்திய குலத்துக் கெல்லா மிசைந்ததோர் குருவு மாவன்**
**காய்ந்தபி னடக்க மாட்டான் கனங்குழ லார்க்கு நல்லன்**
**சேர்ந்தவர்க் கன்ப னாகுஞ் செய்யபொற் காலி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** தனுசு வியாழம்-10, மகரச் சனி-4, கும்பச்சனி-4, மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5 ஆக வயது 86.

**இரண்டாங்கால் மகர சனியின் பலன்**

ஊனமில் மனத்த னாகு முற்றவர் பழியு மேறான்
மானம துடையனாகும் வழக்கறிந் துரைக்க வல்லன்
மேனியு முருவு நல்லன் மிக்கதோ ரறிவு மில்லை
கானகந் திரிந்து வாழுங் காரியினங் கிசத்தி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரச்சனி-4, கும்பச்சனி-4, மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16 ஆக வயது 83.*

**மூன்றாங்கால் கும்பச் சனியின் பலன்**

ஆசையு மறிந்து பேணு மரும்பொருட் கன்ப னாகுஞ்
சீரிய செய்ய வேண்டாஞ் சிலவது செய்வன் மிக்க
வாரியாய் பொய்கள் சொல்லான் வழக்கறிந் துரைக்க வல்லன்
காரியங் கிசத்தில் வந்த கருத்துள காளை தானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-5, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, கும்பச்சனி-4, மகரச்சனி-4 ஆக வயது 85.*

**நாலாங்கால் மீன வியாழத்தின் பலன்**

சிறிதே யொன்றும் பொய்சொல்லான் சிவந்த கண்ணன் சிறுகுழலா
னறிவு மிகவே பெருங்குணத்தா னடைந்தோர்க் கன்ப னழகியனாம்
பொருள்சேர் மைந்தர் மனையாளைப் பொருளெண் றெண்ணான் புகழ்விளங்கும்
வெறிசேர் கூந்தன் மடமானே வியாழக் காலிற் பிறந்தானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7 ஆக வயது 100.

**இனி மகாதிசை :** ராகு-18, குரு-16, சனி-19, புதன்-17, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7 ஆக வயது 130.

இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 3ல் சுரத்தால், 5ல் நாற்கால் மிருகத்தால், வைசூரியால், 9ல் நீரால், 15ல் உயரத்திலிருந்து விழுவதால், 19ல் பிடரி வலிப்பால், 21ல் அரையாப்பால், 23ல் மருந்திட்டால், 32ல் கள்ளரால், 35ல் மிருகத்தால், 41ல் விஷத்தால், 57ல் மூல வியாதியால், 61ல் வயிற்றுக் கடுப்பால் கண்டம்.

இவை கடந்தால் 83 வயது சென்று வைகாசி மாதம் செவ்வாய்க்கிழமை அமரபட்சம் நவமி கார்த்திகை நாளுதித்து அஸ்தமித்து 8 நாழிகையில் விக்கலால் மரணம்.

இவை கடநதால் 90 வயது சென்று மாசி மாதம் திங்கட்கிழமை பூர்வ பட்சம் பஞ்சமி பூராடமுதித்து 2நாழிகைக்கு மேல் சோறு விக்கலால் மரணம்.

இவனுக்கு, ஆதித்தன் உதயமாகில், வேளாண்மை பலிக்கும். சந்திரன் உதயமாகில், வியாபாரி. செவ்வாய் உதயமாகில், அழகியன். புதன் உதயமாகில் கல்வி யுடையவன். வியாழம் உதயமாகில், தனவான். வெள்ளி உதயமாகில், கள்ளன். ராகு உதயமாகில், அலங்கார முடையவன். கேது உதயமாகில், உறக்கமுடையவன்.

இந்நாள் அபிஷேகம் பண்ண, நமஸ்காரம் பண்ண, மனைகோல, நாத்துநட, விதை தெளிக்க, மருந்துண்ண நன்று. பெண் திரளில் மிடி. கண்டரஜ்ஜீ.

**சதய நட்சத்திரத்தின் பலன் முற்றும்.**

## 25. பூரட்டாதி நட்சத்திரத்தின் பலன்கள்

**மெய்யழ குடைய னாகும் வெகுளிசொற் பேசான் மெய்யன்**
**கையது கமல நோக்கும் கருத்துடன் கல்வி கற்குந்**
**தையலைக் கூடி வாழ்வன் சபைதனிற் பேசவல்லன்**
**பொய்யுரை யொன்றுஞ் சொல்லான் பூரட்டா தியில்வந் தானே**

ஸே - ஸோ - தா - தீ இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

இந்த நட்சத்திரம் கட்டிற்கால் போலிருக்கும். இந்நாளினுக்கு யோனி-புருஷ மிருகம், பட்சி-உள்ளான். விருட்சம்-தென்னை மரம், கணம்-மனுசன், தெய்வம்-தட்சிணா மூர்த்தி, விகர்ப்பதனம், பூதம்-ஆகாயம், சாதி-பிராமணன், கோத்திரம்-புலஸ்தியன், யோகினி-இந்திராணி.

இந்நாளினுக்கு *16* நாழிகைக்குமேல் *4* நாழிகை விஷம். இவனுக்கு புறவடி உயர்ந்திருக்கும். குண முடையவன், போஜனப்பிரியன், விளக்கமுடையவன், கோபித்தவுடனே ஆறுவன், ஆதாரமுடையவன், அரசரால் கொண்டாடப்படுபவன், நன்றி மறவான், உறக்க முடையவன்.

### முதற்கால் மேஷச் செவ்வாயின் பலன்

**குருகிய புருவ மெய்யன் குரலைசேர் குதலை வாயன்**
**மருவிய மனத்தன் பெண்மேள் மனமது சார நில்லான்**
**முழுகிய கொடுமை செய்யு முதுகினில் மருவு முள்ளான்**
**செறிதரு கூந்தல் பேணுஞ் சேயினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** மேஷச் செவ்வாய்-*7*, ரிஷப வெள்ளி-*16*, மிதுன புதன்-*9*, கடக சந்திரன்-*21*, சிங்கா

*தித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, மீன வியாழம்-10 ஆக வயது 100.*

**இரண்டாங்கால் ரிஷப வெள்ளியின் பலன்**

தெள்ளிய தியாகி நல்லன் சேயிழை யாரைப் பேணு
மொள்ளிய கண்ணில் வெள்ளா னுருவிபொரு ணிபரு னாகும்
பள்ளியும் பலவுங் கற்கும் பாக்கிய முடைய னாகும்
வெள்ளியங் கிசத்தில் வந்த விருப்புள காளை தானே.

இதற்குக் காலச்சக்கரம் : *மகரச்சனி-4, கும்பசனி-4, மீன வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, மிதுன புதன்-9 ஆக வயது 85.*

**மூன்றாங்கால் மிதுன புதன் பலன்**

மேதையா லங்க சாலன் வேந்தரால் விருப்ப முண்டாம்
மாதமா லுருவு மாகு மனம்பொறுக்கரிய வொண்ணான்
றாதுசேர் குழலினாளே றன்பொருள் சார நில்லான்
மீதுரு வலக்கை வேளான் மிதுனவங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பச்சனி-4, மகரச்சனி-4, தனுசு வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-6 ஆக வயது 82.*

**நாலாங்கால் கடக சந்திரன் பலன்**

தலையது தடிய னாகுந் தன்மனம் பெரிய னாகும்
மலைதரும் வல்ல பத்தன் வடிவுடன் சிறந்த மேனி
கலைபல நன்று கற்கும் கடிமதக் காளை யாகும்
மலையென வளர்ந்த தோளான் மதியினங் கிசத்தி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** கடகச் சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரச்சனி-4, கும்பச்சனி-4, மீன வியாழம்-10 ஆக வயது 86.

இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 3ல் வெதுப்பால், 5ல் சலத்தால், 7ல் சூரியால், 19ல் விருக்ஷத்தால், 22ல் ஸ்திரீகளால், ஆயுதத்தால், 33ல் கள்ளரால், 34ல் சூலை வாதத்தால், 42ல் மிருகத்தால், 46ல் வயிற்றுக்கடுப்பால், 50ல் வாதத்தால், 55ல் வயிற்றுக் கடுப்பால் கண்டம்.

இவை கடந்தால் 60 வயது சென்று மார்கழி மாதம் அமர பட்சம் பஞ்சமி வியாழக்கிழமை பூரட்டாதி அஸ்தமித்து 3 நாழிகையில் மரணம்.

இவனுக்கு, சூரியன் உதயமாகில், மிடியன், சந்திரன் உதயமாகில், ராசபுருஷன். செவ்வாய் உதயமாகில், கள்ளன் நோயாளி. புதன் உதயமாகில், பலரும் விரும்ப வாழ்வன். வியாழம் உதயமாகில், தனவான். வெள்ளி உதயமாகில், வேளாண்மை பலிதமுடையவன். சனி உதயமாகில், கள்ளன். ராகு உதயமாகில், கலகன். கேது உதயமாகில், மிடியன். இந்நாளிற் பசு கொள்ள நெற்போற்கட்ட நன்று. பெண் திரளில் தானிய முடையவள். மாதம் பிறக்கில் அகந்தாழும். வானத்தில் வில்லிடில் மழை பெய்யும்.

சுரந்தோன்றில் 2 நாளில் விடும். விடாதிருந்தால் வேத மந்திரஞ் சொல்லி நெய்யால் ஓமஞ் செய்து விருட்சத்தடியில் அல்லது நீர்க்கரையில் பாற்சாதம் பெலியிடவும்.

இந்நாளிற் பிறந்தவன் பால் குடித்து ஊர்வழி போகவும். இந்த நட்சத்திரம் உச்சமாகில் மீனத்தில் ஒண்ணரை நாழிகை செல்லும். நாபிரஜ்ஜீ.

**பூரட்டாதி நட்சத்திரத்தின் பலன் முற்றும்**

## 26. உத்திரட்டாதி நட்சத்திரத்தின் பலன்கள்

**கற்றவன் சிறந்த மேனி கடுகியே நடக்க வல்லன்**
**பொற்புனை யுடைய னாகும் புகழ்பெற வாழ வல்லன்**
**வெற்றியி லினிய னாகு மெய்யழ குடைய னாகு**
**முத்தம குணத்த னாகு முத்திரட் டாதி யானே.**

துஸ் - சஞ் - சா - தா இவற்றை முதல் எழுத்தாகக் கொண்டு உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர் சூட்டலாம்.

### மீன ராசியின் பலன்

**பொற்கொடி மடநதை மாதர் பொருந்திடுந் தேசமெங்குங்**
**கற்றறிந் தோர்க்கு நல்லன் கண்டவர்க்கினி யனாகு**
**நெற்பயிர் தனக்கு வல்ல னீருகந் தாட வல்லன்**
**வெற்றியுமுடைய னாகும் விலங்கிய மீனத்தானே.**

இந்த நட்சத்திரம் கட்டிற்கால் போலிருக்கும். இந்நாளினுக்கு யோனி-பசு, பட்சி-கோட்டான், விருட்சம்-வேம்பு, கணம்-மனுசன், நாள்-பெண், தெய்வம்-ஆதித்தன், பூதம்-ஆகாயம், சாதி-பிராமணன், கோத்திரம்-புலஸ்தியன், யோகினி-சாமு. இந்நாளினுக்கு 20 நாழிகைக்குமேல் 4 நாழிகை விஷம்.

இந்நாளிற் பிறந்தவன் நீதியுடையவன், புத்தியுடையவன், தன் பிறப்புக்கு நல்லவன். வஞ்சனை செய்ய வல்லவன், வலதுபுறத்தில் மறுவுண்டு. பிரிதிவுக்கு நல்லவன், பலமுடையவன், உறவுக்கு நல்லவன், நன்றி மறவான், மார்பு அகன்றிருக்கும், முன்கோபி, கோபித்த போதே ஆறுவான். அரசர்க்கு நல்லவன். தானியமுடையவன், நீராடவல்லன், பெரிய சொல்லான், செவி

அகண்டிருக்கும், ஸ்திரீ கண்ணன், மாதா பிதாவை இரட்சிப்பவன், ஒருவருக்குந்தோறான், குருவுக்கு நல்லன். பாக்கு வெற்றிலையிற் பிரியன்.

### முதற்கால் சிங்காதித்தன் பலன்

நீளிய செய்ய கால நிபுணனாய் நேசஞ் செய்வன்
மாளிகை மனையில் வாழ்வன் மன்னரான் மகிழ்ச்சி யுண்டாம்
வாளிசேர் கன்னி யர்க்கு மனமது சார நில்லான்
காளிசேர் வடிவு தோன்றுங் கதிரவன் காலி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, மிதுன புதன்-9, ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீன வியாழம்-10 ஆக வயத 100.*

### இரண்டாங்கால் கன்னி புதன் பலன்

மேதையா லங்க சாலன் வேந்தரால் விருப்ப முண்டாம்
மாதமா லுருவ மாகு மனதுடன் கல்வி கற்குஞ்
தாதுசேர் விழியார் தன்மேற் றன்பொருள் சார நில்லான்
மாதுரு வலக்கை வேலானங் மாலினாங் கிசத்தி னானே.

இதற்குக் காலச்சக்கரம்: *கும்சனி-4, மகரசனி-4, தனுசு வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-9 ஆக வயது 83.*

### மூன்றாங்கால் துலா வெள்ளியின் பலன்

மார்பகன் றுயர்ந்த மெய்யன் மதிமுக மறுவுண் டென்றுஞ்
சீர்தரு முத்தி பேணுஞ் செய்தருங் கொடுங்கண் ணாளன்
னாதர வுடைய னாகு மறிவு னன்றி கற்குஞ்
சார்வது மாதர் தம்பாற் றரும் புகர்க் காலி னானே.

**இதற்குக் காலச்சக்கரம்:** *துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரச்சனி-4, கும்ப சனி-4, மீன வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9 ஆக வயது 83.*

**நாலாங்கால் விருச்சிகச் செவ்வாயின் பலன்**

**வெட்டெனப் பேச வல்லன் வெகுளிமுன் னுடைய னாகுஞ்**
**சிட்டரைச் சேர்ந்து வாழுஞ் சிறுகுறி யாள னாகும்**
**பட்டய மணிந்த தோளான் படைக்கெலாந் தலைவ னாகு**
**மிட்டருக் கினிய னாகு மெரியினங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பச்சனி-4, மகரச் சனி-4, தனுசு வியாழம்-10 ஆக வயது 86.*

**இனி மகாதிசை :** *சனி-19, புதன்-17, கேது-7, சுக்கிரன்-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-18, குரு-16 ஆக வயது 120.*

*இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 3ல் வெதுப்பால், 7ல் வைசூரியால், 15ல் மிருகத்தால், 22ல் கள்ளரால், ஸ்திரீகளால், 25ல் மருந்தீட்டால், 30ல் ராஜபடையால், 35ல் நெருப்பால், 60ல் வயிற்றுக் கடுப்பால் கண்டம்.*

*இவை கடந்தால் 86 வயது சென்று ஆடி மாதம் சனிக்கிழமை அமரபட்சம் அஸ்தமித்து சோதி நாளுதித்து சூரியனஸ்தமித்து 9 நாழிகையில் மூச்சு தப்பி மரணம்.*

*இவனுக்கு, ஆதித்தன் உதயமாகில், உள்வெதுப்பு உடையவன். சந்திரன் உதயமாகில், ராஜகிருபை உடையவன். செவ்வாய் உதயமாகில், கோளன். புதன்*

உதயமாகில், வித்துவான். வியாழம் உதயமாகில், பண்டிதன். வெள்ளி உதயமாகில், சுகனெறியன். சனி உதயமாகில், குருடன், கள்ளன். ராகு உதயமாகில், குருடன் அல்லது முடவன். கேது உதயமாகில் விஷகாரியன்.

இந்நாளில் பூஞ்சோலை வைக்க, விவாகம் பண்ண, சீமந்தஞ் செய்ய, அன்னப்பிராசனம் பண்ண, கல்வி கற்க, மனைகோல, குடிபுக, பொன்பூண, கோடியுடுக்க, ஆடு கொள்ள, யாத்திரை செய்ய நன்று.

பெண் திரளில் பொருளுடையவன். மாதம் பிறக்கில் அகமேறும். சுரந் தோன்றில் 20 நாளில் விடும். விடாதிருந் தால் வேதமந்திரஞ் சொல்லி நெய்யாலே ஓமஞ் செய்து விருட்சத்தடியில் இரத்தமுஞ் சோறும் பெலியிடவும்.

இந்நாளிற் பிறந்தவன் குயிலிறைச்சி தின்று ஊர்வழிப் போகவும். இந்த நட்சத்திரம் உச்சமானால் 3நாழிகை செல்லும். சங்குரஜ்ஜீ.

உத்திரட்டாதி நட்சத்திரத்தின் பலன் முற்றும்.

## 27. இரேவதி நட்சத்திரத்தின் பலன்கள்

**குலுவுறுங் கண்ண னாகுங் குலவிய சந்த னாகும்**
**பயன்களை யறிய வல்லன் பாவமும் பழியும் பேணும்**
**நயமிக வுடைய னாகு நானிலத் தோர்க்கு நல்ல**
**னியலுடன் வாழ வல்ல னிரேவதி நாளி னானே.**

இந்த நட்சத்திரம் தோனி போலிருக்கும். இந் நாளினுக்கு யோனி-யானை, பட்சி-வல்லாறு, விருட்சம்-இலுப்பைமரம், நாள்-பெண், தெய்வம்-பிரமன், பூதம்-ஆகாசம், ஜாதி-வைணவன், கணம்-தெய்வம்.

பங்குனி மாதம் சூனியம் *30* நாழிகைக்கு மேல் *4*நாழிகை விஷம்.

இந்நாளிற் பிறந்தவன் இல்லையென்று சொல்லான். புத்தியுடையவன், பாக்கு வெற்றிலையிற் பிரியன், தெய்வ பக்தி உடையவன், புறத்தியார் சொற்கேளான், ஸ்திரீ கண்ணன், ஒழுக்கமுடையவன், தோளில்,கழுததில், மார்பில் மறுவுடையவன், பசித்திருக்கவொண்ணான்.

**முதற்கால் தனுசு வியாழத்தின் பலன்**

**சிறிதே யொன்றும் பொய்சொல்லான்**
**சிவந்த கண்ணன் சிறுகுழலா**
**னறிவ மிகவே பொறுங்குணத்தா**
**னடைந்தோர்க் கன்ப னழகியனும்**
**பொருள்சேர் மைந்தர் மனையாளைப்**
**பொருளென் றெண்ணான் புகழ்விளங்கும்**
**வெறிசேர் கூந்தன் மடமானே**
**வியாழக் காலிற் பிறந்தானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** மேஷச் செவ்வாய்-*7*, ரிஷப வெள்ளி-*16*, மிதுன புதன்-*9*, கடக சந்திரன்-*21*, சிங்காதித்தன்-*5*, கன்னி புதன்-*9*, துலாம் வெள்ளி-*16*, விருச்சிகச் செவ்வாய்-*7*, தனுசு வியாழம்-*10* ஆக வயது *100*.

**இரண்டாங்கால் மகரச் சனியின் பலன்**

**ஆசையு மறிந்து பேணு மரும்பொருட் கன்ப னாகுஞ்**
**சீறிய செய்ய வேண்டாம் சிலவது செய்வன் மிக்க**
**வாரியாய் பொய்கள் சொல்லான் வழக்கறிந் துரைக்க வல்லன்**
**காரியங் கிசத்தில் வந்த கருத்தைள காளை தானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *மகரசனி-4, கும்பச்சனி-4, மீன வியாழம்-10, விருச்சிகச் செவ்வாய்-7, துலாம் வெள்ளி-16, கன்னி புதன்-9, கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, மிதுன புதன்-9 ஆக வயது 85.*

### மூன்றாங்கால் கும்பச் சனியின் பலன்

**ஊனமின் மனத்த னாகு முற்றவர் பழியு மேறான்**
**மானம துடைய னாகும் வழக்கறிந் துரைக்க வல்லன்**
**மேனியு முருவு நல்லன் மிக்கதோ ரறிவு மில்லை**
**கானகந் திரிந்து வாழுங் காரியங் கிசத்தி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *ரிஷப வெள்ளி-16, மேஷச் செவ்வாய்-7, மீன வியாழம்-10, கும்பச்சனி-4, மகரச் சனி-4, தனுசு வியாழம்-10, மேஷச் செவ்வாய்-7, ரிஷப வெள்ளி-16, மிதுன புதன்-9 ஆக வயது 83.*

### நாலாங்கால் மீன வியாழத்தின் பலன்

**மாந்துளிர் போலு மேனி மனமொத்து கல்வி கற்கு**
**மேந்திய குலத்துக் கெல்லா மிசைந்ததோர் குருவு மாவான்**
**காய்ந்தபி னடக்க மாட்டான் கனங்குழ லார்க்கு நல்லன்**
**சேர்ந்தவர் கன்ப னாகுஞ் செய்யபொற் காலி னானே.**

**இதற்குக் காலச்சக்கரம்:** *கடக சந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னி புதன்-9, துலாம் வெள்ளி-16, விருச்சிகச் செவ்வாய்-7, தனுசு வியாழம்-10, மகரச்சனி-4, கும்பச் சனி-4 மீன வியாழம்-10 ஆக வயது 86.*

**இனி மகாதிசை :** *புதன்-17, கேது-7, வெள்ளி-20, சூரியன்-6, சந்திரன்-10, செவ்வாய்-7, ராகு-18, குரு-19, சனி-19 ஆக வயது 120.*

இவன் பிறந்த ஆண்டில் கண்டம். 5ல் வைசூரியால், 7ல் உயரத்திலிருந்து விழுவதால், மிருகத்தால், 12ல் விஷத்தால், 20ல் ஸ்திரீகளால், 25ல் மருந்தீட்டால், 42ல் கள்ளரால், 48ல் வெதுப்பால், 51ல் வயிற்றுக் கடுப்பால், 52ல் முழங்கால் வாதத்தால் கண்டம்.

இவை கடந்தால் 89 வயது சென்று பங்குனி மாதம் பூர்வ பட்சம் நவமி செவ்வாய்க்கிழமை உத்திராடம் உதித்து நீர்ப்பட்டால் மரணம்.

இவை கடந்தால் 89 வயது சென்று ஞாயிற்றுக் கிழமை துவாதசி ரேவதி அஸ்தமித்து 2 நாழிகைக்குள் பித்தங்கதித்து மரணம்.

இவனுக்கு, சூரியன் உதயமாகில், முன்கோபி. சந்திரன் உதயமாகில், சீமான். செவ்வாய் உதயமாகில், வீரன். புதன் உதயமாகில், கணவான், வித்துவான். வியாழம் உதயமாகில், தன் கருமமிருக்க பிறர் கருமஞ் செய்வான். வெள்ளி உதயமாகில், மிகவும் ஊன முடையவன். சனி உதயமாகில், குருடன் மிடியன். ராகு உதயமாகில், நச்சுவாயன். கேது உதயமாகில் கள்ளன்.

இந்நாளில் அன்னப்பிராசனம் பண்ண, மனைகோல, குடிபுக, விவாகஞ்செய்ய, வித்தியாரம்பம் பண்ண, பொன்பூண, கோடியுடுக்க நன்று.

பெண் திரளில் பிணியுடையவள். சுரந்தோன்றில் 10 நாளில் விடும். விடாதிருந்தால் வேதமந்திரஞ் சொல்லி நெய்யாலே ஓமஞ்செய்து விருட்சத்தடியில் அல்லது நீர்க்கரையில் செந்நெல் அரிசி பெலியிடவும்.

பால்குடித்து ஊர்வழிப் போகவும். இது உக்ச மானால் மிதுனத்தில் 5 நாழிகை செல்லும். பாரஜ்ஜீ.

**இரேவதி நட்சத்திரத்தின் பலன் முற்றும்.**

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

# நட்சத்திரப் பொருத்தம்

## தறிகாலறியும்படி

அசுவினி பரணி கிருத்திகை முதல் பாதம் கொண்டது **மேஷ இராசி**. கிருத்திகை மூன்று பாதங்கள், ரோகிணி இரண்டு பாதங்கள் முன்னரை பெற்றது **ரிஷப ராசி.** மிருகசீர்ஷம் பின்னரை அதாவது மூன்று மற்றும் நான்காம் பாதங்கள் திருவாதிரை, புனர்பூசம் மூன்று பாதங்கள் பெற்றது **மிதுனராசி**யாம். புனர்பூசம் நான்காம் பாதமும் பூசம் ஆயில்யம் கொண்டது கற்**கடகராசி**யாம். மகம், பூரம், உத்தரம் முதல் பாதம் பெற்றது **சிம்மராசி**யாம். உத்திரம் பின் மூன்று பாதங்கள் அஸ்தம் சித்திரை முன்னரை (ஒன்று மற்றும் இரண்டு) பாதங்கள் பெற்றது **கன்னிராசி**யாகும். சித்திரை பின்னரை மூன்று மற்றும் நான்காம் பாதங்கள் சுவாதி மற்றும் (விசாகம்) முக்காலும் அதாவது மூன்று பாதங்கள் கொண்டது **துலாம்ராசி** யாகும். விசாகம் நான்காம் பாதம் மற்றும் அனுஷம், கேட்டை கொண்டது **விருச்சிகராசி**யாம். மூலம் மற்றும் பூ;ராடம், உத்திராடம் ஒன்றாம் பாதமும் பெற்றது **தனுசுராசி**யாம். உத்திராடம் பின் முக்கால் அதாவது இரண்டு மூன்று நான்கு பாதங்கள், திருவோணம், அவிட்டம் ஒன்று இரண்டு பெற்றது **மகரராசி**யாம். அவிட்டம் பின்னரை மூன்று மற்றும் நான்கும், சதயம், பூரட்டாதி முன் முக்கால் அதாவது ஒன்று முதல் மூன்று வரை பெற்றது **கும்பராசி**யாம். பூரட்டாதி நான்காம் பாதம் அதாவது பின்கால், உத்திரட்டாதி, ரேவதியும் பெற்றது **மீனராசி**யாகும்.

**(ஆக 12 ராசி தறிகாலறியும்படிமுற்றும்)**

## திருமணப்பொருத்தம்

இந்தப் பொருத்தங்களில் மிக முக்கியமாக சொல்லப்படுவது.

1. கணப்பொருத்தம்

2. யோனிப் பொருத்தம்

3. ராசிப் பொருத்தம்

4. ரச்சுப் பொருத்தம்

5. நட்சத்திரப் பொருத்தம்

ஆகிய ஐந்து பொருத்தங்களும் மிகவும் இன்றியமையாத பொருத்தங்களாகும். இவைகளில் ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரே ரச்சுவாக இருந்தால், "ரச்சு தட்டுகிறது" என்று சொல்லப்படுகிறது. இப்படி ரச்சு தட்டுகிற தம்பதிகளுக்குத் திருமணம் செய்யக்கூடாது என்பது சோதிட சாஸ்திரம். ரச்சு தட்டுவதனால் ஏற்படக் கூடிய அசுவப் பலன்கள் தான் என்ன என்பது பற்றி ரச்சுப் பொருத்தம் என்ற தலைப்பில் கண்டறியலாம்.

இப்போது பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சொல்லக்கூடிய நான்கு வருணத்தார் களுக்கும் இன்றியமையாத சிற்சில திருமணப் பொருத்தங் களைப் பற்றி சொல்லப்படுகிறது.

**1. பிராமண குலத்தவர்களுக்கு:-**

ராசி அதிபதி பொருத்தம் அவசியம் இருந்தாக வேண்டும். இது குடும்ப சுக விருத்தியையும் அளிக்கக் கூடியதாகும்.

**2. க்ஷத்திரிய குலத்தவர்களுக்கு:-**

கணப்பொருத்தம் அவசியம் இருந்தாக வேண்டும். இது கணவன் மனைவிக்குள், அன்னியோன்யத்தையும் சோபனகரத்திற்கு மகிழ்ச்சியையும் தரக்கூடியதாகும்.

**3. வைசிய குலத்தவர்களுக்கு:-**

ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம் பலமாக அமைந்து இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இது பெண்களின் உடல் வனப்பை மிகைப்படுத்துவதாகும்.

**4. சூத்திரக் குலத்தவர்களுக்கு:-**

யோனிப் பொருத்தம் மிக, மிக அவசியம். உத்தமமாக அமைந்திருக்க வேண்டும் என்று சொல்லப் படுகிறது. இது இல்லாவிட்டால், சதிபதிக்குள் அன்னி யோன்யமும், வசியமும், இணக்கமும் இல்லாமல் போகும் என்று சொல்லப்படுகிறது.

திருமணப் பொருத்தம் பார்ப்பது ஒரு பக்கம் இருந்தாலும், சுருக்கு முறையில் பெண்ணுக்கும், பிள்ளைக்கும் பொருத்தம் இருக்கிறதா? என்று கண்டறிய கீழ்க்கண்ட பாடலின் பொருளைக் கடைபிடிக்க வேண்டும். அந்தப் பாடல்,

**கன்னியர் பிறந்த நாளை**
**கணவனார் வரைக்கு மெண்ணிப்**
**பன்னிரெண் டதனிற் றாக்கிப்**
**பாரிலொன் பானுக் கீய**
**மன்னுமுத் தமமொன் பானாம்**
**மத்திமம் ஆற தாகும்**
**இன்னதில் மூன்ற தாகில்**
**எடுப்பது பிச்சை தானே.**

***இதன் பொருளும் தத்துவமும்:-*** பெண் நட்சத்திரம் முதல் ஆண் நட்சத்திரம் வரையில் எண்ணி வர, வரும் அந்த எண்ணை 12ஆல் பெருக்கி, 9ஆல் வகுக்க மீதி வருவது.

*9 ஆனால் - உத்தமம் (மகாபாக்கியம்)*

*6 ஆனால் - மத்திமம் (மிதமான பாக்கியம்)*

*3 ஆனால் - அதமம் (தரித்திரம்)*

என்று சொல்லப்படுகிறது. மீதி பூஜ்யம் வருவதை 9 என்று பொருள் கொண்டு பலன் காணவேண்டும் என்று அறியப்படுகிறது.

**1. தினப் பொருத்தம்**

மிருக சீரிஷம், புனர்பூசம், கார்த்திகை, அசுவதி, சதயம், உத்திராடம், உத்திரம், சித்திரை, அனுஷம் இவை ஸ்திரீயும் (பெண்ணும்) புருஷனும்(ஆணும்) ஒரு நாளாகில் மத்திமம்.

ரோகிணி, திருவாதிரை, உத்திரட்டாதி, ரேவதி, மகம், பூசம், திருவோணம், அஸ்தம் இவை ஒரு நாளாகில் உத்தமம்.

பரணி, ஆயில்யம், பூரம், சுவாதி, விசாகம், கேட்டை, மூலம், பூராடம், பூரட்டாதி இவையும் ஒரு நாளாகில் ஆகாதென்பது அறிகிறது.

**2. கணப்பொருத்தம்**

கணங்கள் மூன்று வகைப்படும் அவை: 1. தேவகணம், 2. மனித கணம், 3. அசுர கணம், அல்லது

ரச்சு கணம், கணப்பொருத்தத்தைக் கொண்டு, கணத்திற்கு உரியவர் குணம் நலன் அறியமுடியும். எனவே கணப்பொருத்தம் அமையாவிட்டால் மாறுபட்ட கருத்து வேறுபாடு, செயல் முறையால் தம்பதிகள் இடையே பிரச்சினைகள் உருவாகும். அமைதியான இல்லற வாழ்விற்குக் கணப் பொருத்தம் இன்றியமையாத ஒன்றாகும்.

**முவகை கணங்களுக்கு உரிய நட்சத்திரங்கள்:-**

| ***தேவகணம்*** | ***மனித கணம்*** | ***அசுர கணம்*** |
|---|---|---|
| **அசுவனி** | **பரணி** | **கார்த்திகை** |
| **மிருகசீரிடம்** | **ரோகணி** | **ஆயில்யம்** |
| **புனர்பூசம்** | **திருவாதிரை** | **மகம்** |
| **பூசம்** | **பூரம்** | **சித்திரை** |
| **அஸ்தம்** | **உத்திரம்** | **விசாகம்** |
| **சுவாதி** | **பூராடம்** | **கேட்டை** |
| **அனுஷம்** | **உத்திராடம்** | **மூலம்** |
| **திருவோணம்** | **பூரட்டாதி** | **அவிட்டம்** |
| **ரேவதி** | **உத்திரட்டாதி** | **சதயம்** |

மேலே கூறிய வேறுபட்ட கணம் உடையோர் திருமணம் செய்துகொண்டு குடும்பத்தில் அமைதியின்றி குழப்பம் ஏற்படும். எனவே தேவ கணத்திற்கு உரியவர் தேவகணத்திற்கு உரியவரையும், மனித கணத்திற்கு உரியவர் மனித கணத்திற்குரியவரையும், அசுர கணத்திற்கு உரியவர் அசுர கணத்தவரையும் மணப்பதே சிறப்பு. அப்போது தான் இல்லற வாழ்வில் சுகம் காணமுடியும்.

### 3. யோனிப் பொருத்தம்

*யோனிக்கு உரிய மிருகங்களும், நட்சத்திரங்களும்*

| ஆண்/யோனி | பெண்/யோனி | யோனி/மிருகம் |
|---|---|---|
| அசுவனி | சதயம் | குதிரை |
| பரணி | ரேவதி | யானை |
| பூசம் | கார்த்திகை | ஆடு |
| ரோகிணி | மிருகசீரிஷம் | நாகம் |
| ஆயில்யம் | புனர்பூசம் | பூனை |
| மகம் | பூரம் | எலி |
| சுவாதி | அஸ்தம் | எருமை |
| விசாகம் | சித்திரை | புலி |
| கேட்டை | அனுஷம் | மான் |
| பூராடம் | திருவோணம் | குரங்கு |
| பூரட்டாதி | அவிட்டம் | சிங்கம் |
| உத்திரட்டாதி | உத்திரம் | பால் பசு |
| திருவாதிரை | மூலம் | நாய் |
| உத்திராடம் | | கீரி |

பகை யோனிகள்

| | | |
|---|---|---|
| குதிரைக்குப் பகை | - | எருமை |
| யானைக்குப் பகை | - | சிங்கம் |
| ஆட்டுக்குப் பகை | - | குரங்கு |
| நாகத்திற்குப் பகை | - | கிரி |
| நாய்க்குப் பகை | - | மான் |
| பூனைக்குப் பகை | - | எலி |
| பசுவுக்குப் பகை | - | புலி |

*யோனிப் பொருத்தமற்று திருமணம் செய்வது சிறப்பல்ல என்று அறிகிறது.*

4. ராசிப் பொருத்தம்:

*கணவன், மனைவிக்குள் ஒற்றுமை, சந்தோஷம், வம்ச விருத்தி ஏற்படும்.*

*பெண் ராசியிலிருந்து, ஆண் ராசி வரை எண்ணினால் 2, 3, 4, 6, 8ஆக வந்தால் பொருத்தம் கிடையாது. 1, 9, 10, 11, 12 வந்தால் உறவு நிரந்தரமானதாக இருக்கும். 7வது ராசியாக இருந்தால் உத்தமம். ஆனாலும் கும்பம், சிம்மம், கடகம், மகரம் ஆகாது.*

5. பட்சிப் பொருத்தம்:

| | | |
|---|---|---|
| அசுவதி | - | ராசாளி |
| பரணி | - | காகம் |
| கார்த்திகை | - | மயில் |
| ரோகிணி | - | ஆந்தை |

| | | |
|---|---|---|
| மிருகசீரிஷம் | - | கோழி |
| திருவாதிரை | - | அன்றில் |
| புனர்பூசம் | - | அன்னம் |
| பூசம் | - | நீர்காகம் |
| ஆயிலியம் | - | சிறாசாளி (கிச்சிலி) |
| மகம் | - | ஆண் கழுகு |
| பூரம் | - | பெண் கழுகு |
| உத்திரம் | - | மரங்கொத்திக் குருவி (கிளுவை) |
| அஸ்தம் | - | பருந்து |
| சித்திரை | - | கருடன் |
| சுவாதி | - | தேனீ |
| விசாகம் | - | செவ்வால் குருவி |
| அனுஷம் | - | சக்கரவாளப்புள்ளு (வானம்பாடி |
| கேட்டை | - | சாதகப்புள்ளு |
| மூலம் | - | செம்போத்து |
| பூராடம் | - | கிடுகு (கௌதாரி) |
| உத்திராடம் | - | வலியன் |
| திருவோணம் | - | மாடப்புறா-நாரை |
| அவிட்டம் | - | பொன்வண்டு |
| சதயம் | - | அண்டங்காக்கை |
| பூரட்டாதி | - | உள்ளான் கருவி |
| உத்திரட்டாதி | - | கோட்டான் |
| ரேவதி | - | வல்லூறு |

இப்படி பச்சியும் கண்டுகொள்ளவும் என்றறியப் பட்டுள்ளது.

## 6. கயிற்றுப் பொருத்தம்

ரச்சு மிக முக்கியமான பொருத்தம். இருபத்தேழு நட்சத்திரங்களும், ஐந்து வகை ரச்சுக்களில் அடங்குகின்றன. அவை சிரசு ரச்சு, கண்டரச்சு, வயிறுரச்சு, தொடைரச்சு, பாத ரசசு எனவாகும்.

1. சிரசு ரச்சுவில் மிருக சீரிடம்., சித்திரை, அவிட்டம் ஆகிய மூன்றும்.

2. கண்ட ரச்சுவில் ரோகிணி, திருவாதிரை, அஸ்தம், சுவாதி, திருவோணம், சதயம் ஆகிய ஆறு நட்சத்திரங்கள் அடங்கும்.

3. வயிறு ரச்சுவில் கிருத்திகை, புனர்பூசம், பூசம், உத்திரம், விசாகம், உத்திராடம், பூரட்டாதி ஆகிய ஆறு நட்சத்திரங்கள் அடங்கும்.

4. தொடை ரச்சுவில், பரணி, பூசம், பூரம், அனுஷம், பூராடம், உத்திரட்டாதி ஆகிய ஆறும் அடங்கும்.

5. பாத ரச்சுவில் அசுவிணி, ஆயில்யம், மகம், கேட்டை, மூலம், ரேவதி ஆகிய ஆறும் அடங்கும்.

பெண்ணின் நட்சத்திரமும் ஆணின் நட்சத்திரமும் ஒரே ரச்சுவானால் தோஷமாகும். பொருத்தமில்லை என்பது விதி.

அசுபதியை எரு புலையல் நாட்டி வலத்திலெற்ற ஏரங்கலாய் எண்ணிப்பார்ப்பதில் இருவரிட நட்சத்திரமுங் குறுக்கு வரைகளாலே ஓடுவதை களரிலே வந்தாலாகாது. இருவருக்கும் பாதக்கயறாகில் இருந்த பொருள் நாசம். இடைக்கயிறாகி வம்கவடி வயிற்றுக் கயிறாகில் புனரப்

பொற்றிளந்து போடும். கழுத்துக் கயிறாகில் புருஷன் மரணம். சிரசுக் கயறாகில் பெண் மரணம். ஆகையால் இருவர் நட்சத்திரமுங் குறுக்கு வரையிலே ஒடு வரையில் வரவாகாது வரைமாறி இடைமாறி வந்தால் நல்லது. நெடுவரையில் ஒரு வரையில் நின்றாலும் கூட்டலாம் நல்லது.

**வேதக் கயிற்றுப் பாகப் பொருத்தம்**

அசுபதி, மகம், மூலம் இந்த மூன்றும் ஒன்றுக் கொன்று பொருந்தாது.

**வேதக் கயிற்றும் பகைப் பொருத்தம் அறியும்படி:-**

அசுபதிக்கு-மூலம், மகம்-பகை

பரணிக்கு-கெற்கை, மிருகசீரிஷம்-பகை

அனுஷம்-கார்த்திகை-பகை

ரோகணிக்கு-விசாகம்-பகை

மிருகசீரிஷத்திற்கு-சுவாதி-பகை

திருவாதிரைக்கு-அவிட்டம்-பகை

புனர்பூசத்துக்கு-திருவோணம்-பகை

பூசத்துக்கு-உத்திராடம்-பகை

ஆயில்யத்திற்கு-பூரம்-பகை

பூரத்திற்கு-ரேவதி-பகை

உத்திரத்துக்கு-உத்திரட்டாதி-பகை

அஸ்தத்துக்கு-பூரட்டாதி-பகை

சித்திரைக்கு-சதயம்-பகை

**வேதக்கயிறு பொருத்தம் இப்படி அறியவும் முற்றிற்று**

**7. விருட்சிகப் பொருத்தம்:-**

*பால் மரம் விருட்ச பொருத்தம்:* திருவோணம், புனர்பூசம், பூசம், ரோகிணி, கேட்டை, உத்திரம், சதயம், ரேவதி, திருவாதிரை, அஷ்தம், அவிட்டம், மகம், கார்த்திகை, சித்திரை இந்த பதினாலும் பால் மரமாம். மற்ற பதிமூன்று நட்சத்திரமும் வைரமானமரம் என்றறியுவும்.

1. மாப்பிள்ளை என்ன நட்சத்திரம் அதற்கு என்ன விருச்சம், பெண் என்ன நட்சத்திரம் அதற்கு என்ன விருச்சம் என்றறிந்து பெண் பால் விருச்சம் என்றறிந்து பெண் பால் விருச்சமும், ஆண் வைர விருச்சமும் ஆகில் மைந்தருண்டு. (குழந்தை உணடு)

2. ஆண் பால் விருட்சமும், பெண் வைர விருட்சமுமாகில் மைந்தரும், பொருளும் இல்லை. ஆகாது என்றறியவும்.

3. இருவரும் பால் விருட்சமுமாகில் மைந்தரும், பொருளும், செல்வமும் உண்டு என்றறியவும்.

**8. சாதிப் பொருத்தம்:-**

மேஷம்-குரும்பன், ரிஷபம்-வெள்ளாளன்

மிதுனம்-கள்ளன், கற்கடம்-சக்கிலியன்

சிங்கம்-ராசன், கன்னி-நாவிதன்

துலாம்-செட்டி, விருச்சிகம்-வேடன்

தனுசு-தட்டான், மகரம்-வண்ணான்.

கும்பம்-குசவன், மீனம்-புலையன் (வலையன்)

இப்படி சாதியறிந்து, மாப்பிள்ளை உயர்ந்த சாதியும், பெண் தாழ்ந்த சாதியும் இருந்தால் உத்தமம் என்று அறியப்படுகிறது. ஆணும், பெண்ணும் சரி சாதியானாலும் உத்தமம் என்றறியப்படுகிறது. பெண் உயர்ந்த சாதியாகில், மாப்பிள்ளை தாழ்ந்த சாதியாகில் ஆகாது, சரியில்ல என்று சொல்லப்படுகிறது. முற்பாடு பிற்பாடு பார்த்து சொல்லவும்.

| | | |
|---|---|---|
| விரும சாதிக்கு | - | தினப்பொருத்தம் |
| சூரியனுக்கு | - | கணப்பொருத்தம் |
| வைசியனுக்கு | - | வசியப்பொருத்தம் |
| சூத்திரனுக்கு | - | கயற்றுப் பொருத்தம் |

முற்றும்.

## தசாப்புத்தி பலன்கள்

### ஒன்பது தசைகள்

தசைகள் பற்றி ஏற்கனவே சுருக்கமாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இங்கு அவற்றை சற்று விரிவாகக் காண்போம்.

தீர்க்காயுள் என்பது சில சோதிட நூல்களில் நூறு ஆண்டுகள் எனவும், வேறு சில சோதிட நூல்களில் நூற்று இருபது ஆண்டுகள் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஆனால் தசைகளின் காலங்களில் கவனிக்கும் போது தீர்க்காயுள் என்பது நூற்று இருபது ஆண்டுகள் தான் என்று முடிவு செய்யவேண்டியிருக்கிறது. ஏனென்றால் ஒன்பது தசைகளின் காலங்களையும் கூட்டி பார்க்கும் போது நூற்று இருபது ஆண்டுகளே வருகின்றன.

தீர்க்காயுள் பெற்ற ஒருவர் இந்த ஒன்பது தசை களையும் சந்தித்து அவை தரும் பலன்களை அனுபவிக்க வேண்டும் என்றால் அவர் நூற்று இருபது ஆண்டுகள் வாழ்ந்தாக வேண்டும்.

தசைகள் ஒன்பது. அவறறின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1. சூரிய தசை
2. சந்திர தசை
3. செவ்வாய் தசை
4. புதன் தசை
5. குரு தசை
6. சுக்கிர தசை
7. சனி தசை
8. ராகு தசை
9. கேது தசை

ஆனால் ஒருவருடைய வாழ்க்கையில் ஒன்றனபின் ஒன்றாக வந்தாலும் அவை மேலே கொடுக்கப்பட்டுள்ள வரிசைப்படி வருவதில்லை. அவை வேறு வரிசையின் வருகின்றன. அநத வரிசை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. சூரிய தசை
2. சந்திர தசை
3. செவ்வாய் தசை
4. ராகு தசை
5. குரு தசை
6. சனி தசை
7. புதன் தசை
8. கேது தசை
9. சுக்கிர தசை

ஒருவர் எந்த தசையில் பிறக்கிறாரோ அதுவே அவருடைய முதல் தசையாகும். அதைத் தொடர்ந்து மற்ற எட்டு தசைகளும் வருகின்றன. உதாரணமாக ஒருவர் செவ்வாய் தசையில் பிறக்கிறார் என்று வைததுக் கொள்வோம், அதுவே அவருடைய முதல் தசையாகும். அதை தொடர்ந்து ராகு தசை, குரு தசை, சனி தசை, புதன் தசை, கேது தசை, சுக்கிர தசை, சூரிய தசை, சந்திர தசை ஆகியவை அதே வரிசையில் வந்து அவருடைய வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தும்.

ஒருவருடைய பிறந்த நட்சத்திரம் எது என்பது தெரிந்தால் அவர் எந்த திசையில் பிறந்திருக்கிறார் என்பதைச் சொல்லி விடலாம். அது எப்படி என்பதைப் பார்ப்போம்.

தசைகள் ஒன்பது. நட்சத்திரங்கள் இருபத்தி ஏழு(27) ஒரு தசைக்கு மூன்று நட்சத்திரங்கள் வீதம் ஒன்பது தசைகளுக்கு 27 நட்சத்திரங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

மூன்று நட்சத்திரங்கள் என்றால் அடுத்தடுத்துள்ள மூன்று நட்சத்திரங்கள் அல்ல. 1, 10, 19 ஆகிய மூன்று நட்சத்திரங்கள். அதாவது ஒரு நட்சத்திரத்தை எடுத்துக் கொண்டால் அந்த நட்சத்திரம், அதற்கு பத்தாவது நட்சத்திரம், பத்தொன்பதாவது நட்சத்திரம் ஆகியவை மூன்றும் ஒரு தசைக்குரியவையாகக் குறிப்பிடப் படுகினறன.

ஒவ்வொரு தசைக்கும் எந்தெந்த நட்சத்திரங்கள் உரியவையாகப் பிரிக்கப்படுகின்றன என்ற விவரங்களை இதற்குப் பிறகு பார்க்கலாம்.

1. சூரிய தசை-கிருத்திகை, உத்திரம், உத்திராடம்

2. சந்திர தசை-ரோகிணி, ஹஷ்தம், திருவோணம்

3. செவ்வாய் தசை-மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம்

4. ராகு திசை-திருவாதிரை, சுவாதி, சதயம்

5. குரு தசை-புனர்பூசம், விசாகம், பூரட்டாதி

6. சனி தசை-பூசம், அனுஷம், உத்திரட்டாதி

7. புதன் தசை-ஆயில்யம், கேட்டை, ரேவதி

8. கேது தசை-அசுவனி, மகம், மூலம்

9. சுக்கிர தசை-பரணி, பூரம், பூராடம்

இந்த ஒன்பது தசைகளின் காலங்களையும் கூட்டிப் பார்த்தால் 120 ஆண்டுகள வரும். அதை வைத்துத்தான் தீர்க்காயுள் என்பது 120 ஆண்டுகள் என்று முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

## புத்திகள்

ஒவ்வொரு தசையும் ஒன்பது பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாகமும் புத்தி எனக் குறிப்பிடப்படுகிறது. ஒன்பது புத்திகளின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரிய புத்தி | 6. | சனி புத்தி |
| 2. | சந்திர புத்தி | 7. | புதன் புத்தி |
| 3. | செவ்வாய் புத்தி | 8. | கேது புத்தி |
| 4. | ராகு புத்தி | 9. | சுக்கிர புத்தி |
| 5. | குரு புத்தி | | |

எந்தத் தசை ஆரம்பமானாலும் அதன் புத்திதான் முதல் புத்தியாக இருக்கும். அதைத் தொடர்ந்து எட்டுப்

புத்திகளும் வரும். உதாரணமாக சந்திர தசை ஆரம்ப மாகிறது என்றால் அதன் முதல் புத்தி சந்திர புத்தியாக இருக்கும். அதைத் தொடர்ந்து செவ்வாய் புத்தி, ராகு புத்தி, குரு புத்தி, சனி புத்தி, புதன் புத்தி, கேது புத்தி, சுக்கிர புத்தி, சூரிய புத்தி ஆகியவை வரும்.

## புத்திகளின் காலம்

ஒரு தசைக்குரிய ஆண்டுகளைப் புத்திக்குரிய கிரகத்தின் தசை ஆண்டுகளால் பெருக்க வேண்டும். அவ்வாறு பெருக்கி வரும் எண்ணில் கடைசி எண்ணுக்கு முன்னால் ஒரு புள்ளி வைக்க வேண்டும்.

அந்தப் புள்ளிக்கு முன்னால் இருக்கும் எண்களை மாதங்களாகக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். புள்ளிக்குப் பின்னால் இருக்கும் எண்ணை மூன்றால் பெருக்கி அதை நாட்களாகக் கணக்கிட வேண்டும். உதாரணமாக ராகு தசையில் புதன் புத்தி நடைபெறும் காலம் எவ்வளவு என்பதை கீழே குறிப்பிட்டுள்ள சுலப வழியில் கணடுபிடிப்போம்.

ராகு தசையின் காலம் 18 ஆண்டுகள். புதன் புத்தி என்பதால் புதன் தசைக்குரிய காலம் எவ்வளவு என்று பார்க்க வேண்டும். அது 17 ஆண்டுகள். 18ஐ 17ஆல் பெருக்க வேண்டும். $18 \times 17 = 306$. கடைசி எண்ணுக்கு முன்னால் புள்ளி வைக்க வேண்டும். அப்படி வைத்தால் 30.6 என்று வருகிறது. புள்ளிக்கு முன்னால் இருக்கும் 30 என்பது மாதங்கள் ஆகும். அதாவது 2 ஆண்டுகள் 6மாதங்கள்.

புள்ளிக்குப் பின்னால் இருக்கும் 6ஐ மூன்றால் பெருக்க வேண்டும் $6 \times 3 = 18$. அதாவது அது நாட்கள்

ஆகும். எனவே ராகு தசையில் புதன் புத்தி நடைபெறும் காலம் 2 ஆண்டுகள். 6மாதங்கள், 18 நாட்கள். இவ்வாறு எல்லா தசைகளின் புத்திக்குரிய காலங்களையும் எளிதாக கணக்கிட்டுக் கொள்ளலாம்.

## போதகன், வேதகன், பாசகன், காரகன்

ஒவ்வொருவருக்கும் தசைகளும் அவற்றின் புத்திகளும் நடைபெறும் காலங்களில் 'போதகன் முழுப் பலனையும் கொடுக்கச் ' சொல்பவனாகவும், வேதகன் 'பலனைக் கொடுக்காதே' என்று சொல்பவனாகவும், பாசகன் கொடுக்க வேணடிய பலனுடன் அதிகமான பலனைச் சேர்த்துக்கொடு என்று சொல்பவனாகவும், காரகன் அவரவர்கள் செய்யும் நன்மை, தீமைகளுக்கேற்ப பலனைக்கொடு என்று சொல்பவனாகவும் இருப்பார்கள்.

ஒவ்வொரு தசைக்கும் எந்தெந்த கிரகங்கள் போதகனாகவும், வேதகனாகவும், பாசகனாகவும், காரகனாவும் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம். அந்த விவரம் கீழே கொடுக்கப் பட்டிருக்கிறது.

### சூரிய தசை

| | |
|---|---|
| போதகன்-செவ்வாய் | பாசகன்-சனி |
| வேதகன்-சுக்கிரன் | காரகன்-குரு |

### சந்திர தசை

| | |
|---|---|
| போதகன்-செவ்வாய் | பாசகன்-சுக்கிரன் |
| வேதகன்-சூரியன் | காரகன்-சனி |

### செவ்வாய் தசை

| | |
|---|---|
| போதகன்-சந்திரன் | பாசகன்-சூரியன் |
| வேதகன்-புதன் | காரகன்-சனி |

### புதன் தசை

| | |
|---|---|
| போதகன்-குரு | பாசகன்-சந்திரன் |
| வேதகன்-செவ்வாய் | காரகன்-சுக்கிரன் |

### குரு தசை

| | |
|---|---|
| போதகன்-செவ்வாய் | பாசகன்-சனி |
| வேதகன்-சனி | காரகன்-சந்திரன் |

### சுக்கிர தசை

| | |
|---|---|
| போதகன்-குரு | பாசகன்-சனி |
| வேதகன்-சனி | காரகன்-சந்திரன் |

### சனி தசை

| | |
|---|---|
| போதகன்-சந்திரன் | பாசகன்-சுக்கிரன் |
| வேதகன்-செவ்வாய் | காரகன்-குரு |

### சூரிய தசை தரும் பலன்

சூரிய தசையின் முதல் புத்தி சூரிய புத்தியாகும். அதையடுத்து மற்ற எட்டு புத்திகளும் ஒவ்வொன்றாக வருகின்றன. சூரிய தசையின் ஒன்பது புத்திகளும் என்னென்ன பலன்கள் நடைபெறும் என்பதைத் தனித் தனியே பார்க்கலாம். இது பொதுவான பலனாகும்.

## சூரிய புத்தி (108 நாட்கள்)

பொதுவாக ஒருவருக்கு சூரிய தசைகளில் சூரிய புத்தி நடைபெறும் காலத்தில் அவருக்கும் அவருடைய பெற்றோருக்கும் பல வகையான கஷ்டங்களும், துன்பங் களும் ஏற்படும். தலைவலி, காது சம்பந்தமான நோய்கள் போன்றவற்றால் பாதிப்பு உண்டாகும். ஆனால் அவருடைய ஜாதகத்தில சூரியன் தன் சொந்த வீடு, கேந்திரம், திரிகோணம் போன்றவற்றில் இருந்தால் பூமி, வாகனம் போன்றவை சேரும்.

## சந்திர புத்தி (180 நாட்கள்)

அரசாங்க நன்மை கிட்டும். புது வாகனத்தை வாங்க முடியும். உறவினர்களில் சிலரைப் பார்த்துக்கொள்ள நேரிட்டாலும் குடும்பத்திலுள்ள பெண்களுக்குத் திருமணம் நடைபெறும். இடது கண் ஏதாவதொரு நோயால் பாதிக்கப்படும். ஜாதகரின் ஜாதகத்தில் இலக்கனத்திற்கு எட்டாம் வீட்டில் சந்திரன் அமர்ந்திருந் தால் சண்டை, சச்சரவுகளும், மன நோய்களும் உண்டாகும். ஒன்பதாம் இடத்திலோ அல்லது பத்தாம் இடத்திலோ சந்திரன் அமர்ந்தால் வாகன இலாபம், தானிய இலாபம் கிட்டும். குடும்பத்தில் திருமணம் நடைபெறும்.

## செவ்வாய்ப் புத்தி (126 நாட்கள்)

வழக்கு விவகாரங்களால் செலவு ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய்கள் உண்டாகும். பெற்றோருக்குச் சில வகையான துன்பங்கள் உண்டாகும். செல்வம் விரைய மாகும். ஜாதகத்தில் செவ்வாய் லக்னாதிபதியுடன் சேர்ந்திருந்தால் அதிக அளவில் நன்மையான பலன்கள் நடைபெறும்

## ராகு புத்தி (324 நாட்கள்)

நச்சுப்பொருள்களால் பாதிப்பு ஏற்படும். புத்திர, புத்திரிகளுக்குக் கண்டம் உண்டாகும். சொந்த நாட்டில் வாழமுடியாமல் வெளிநாடுகளுக்குச் செல்ல நேரிடும். ஜாதகத்தில் ராகுவுடன் சுபக்கிரகங்கள் சேர்ந்திருந்தாலும் அல்லது பார்த்தாலும் அரசாங்க நன்மைகள் பெரிய அளவில் கிட்டும். ஆடையாபரணச் சேர்க்கை ஏற்படும். வருமானம் பெருகும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

## குரு புத்தி (288 நாட்கள்)

அறிவு விருத்தியாகும். வருமானம் பெருகும். செல்வம் சேரும். பலரும் பாராட்டக்கூடிய நற்காரியங்கள் மன நிறைவுடன் செய்ய முடியும். அரசாங்க உயர் அதிகாரிகளின் ஆதரவு கிட்டும். உறவினர்கள் உதவியாக இருப்பார்கள். புத்திர பாக்கியம் கிட்டும். எதிரிகளை எளிதாக வீழ்த்த முடியும். ஜாதகத்தில் குரு 5, அல்லது 11ஆம் வீட்டில் சுபக்கிரகங்களுடன் அமர்ந்தால் மேலும் சிறப்பான பலன்கள் நடைபெறும்.

## சனி புத்தி (342 நாட்கள்)

புத்திர, புத்திரிகளால் வீண் செலவுகளும் மனத் துன்பமும் உண்டாகும். அரசாங்கத்தால் தொல்லை ஏற்படும். மனதில் எப்போதும் ஏதாவதொரு கவலை குடிகொண்டிருக்கும். பகைவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். ஜாதகத்தில் சனி நான்காம் வீட்டு அதிபதியுடன் சேர்ந்திருந்தால் ஆடையாபரணச் சேர்க்கை ஏற்படும். தானிய இலாபம். அரசாங்க நன்மை, எதிர்பாராத இடத்திலிருந்து பணம் போன்றவை கிட்டும்.

### புதன் புத்தி (306 நாட்கள்)

உறவினர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடும். உடல் நலம் அடிக்கடி பாதிக்கப்படும். பலவகையான பொருட்கள் சேதமாகும். வயிறு சம்பந்தப்பட்ட நோய் அதிகத் தொல்லை கொடுக்கும். தந்தைக்குக் கண்டம் ஏற்படும். ஜாதகத்தில் புதன் பாபக்கிரகங்களுடன் சேர்ந்து திரிகோணங்களில் இருந்தால் தீய பலனே உண்டாகும். சனி பதினோராம் இடத்தில் இருந்தால் செல்வம் பெருகும். மனைவி, மக்கள் நலமாக வாழ்வார்கள்.

### கேது புத்தி (126 நாட்கள்)

பொருள் சம்பாதிக்க வெளிநாடுகளுக்குச் செல்ல நேரிடும். நினைவாற்றல் குறைவும், கொடிய விஷங்களால் துன்பம் உண்டாகும். ஜாதகத்தில் கேது மூன்று, பத்து அல்லது பதினோராம் வீட்டில் அமர்ந்தால் தந்தை ஆரோக்கியமாக இருப்பார். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

### சுக்கிர புத்தி (360 நாட்கள்)

செல்வம் பெருகும், வீடு, நிலம், பொன்னாபரணம், புது வாகனம் போன்றவை சேரும். செல்வாக்கு பெருகும். நினைக்கும் காரியங்களை உடனுக்குடன் செய்து முடிக்க முடியும். கண் சம்பந்தபட்ட நோய்களால் பாதிப்பும் உண்டாகும். சுக்கிரன் 6-8-12இல் இருந்தால் தீய பலன்கள் நடைபெறும்.

## சந்திர தசை தரும் பலன்

### சந்திரபுத்தி (300 நாட்கள்)

மனதில் தைரியமும் துணிச்சலும் அதிகமாகும். எண்ணிய காரியங்கள் அனைத்தையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும். அழகான குழந்தைகள் பிறக்கும். சநதிரன் செவ்வாயுடனும் ஏழாம் வீட்டு அதிபதியுடனும் சேர்ந்திருந்தால் பகைவர்களுடன் மூர்க்கத்தனமாகச் சண்டை போட வேண்டியிருக்கும்.

### செவ்வாய்ப் புத்தி (210 நாட்கள்)

வீட்டிலுள்ள பொருள் களவு போகும். செல்வம் விரையமாகும். உடல்நலம் பாதிக்கப்படும். நெருப்பால் ஆபத்து உண்டாகும். எப்போதும் சண்டையும் சச்சரவுமாக இருக்கும். செவ்வாயுடன் 5ஆம் வீட்டு அதிபதியும் 9ஆம் வீட்டு அதிபதியும் சேர்ந்தால் வருமானம் வேகமாகப் பெருகும்.

### ராகு புத்தி ( 540 நாட்கள்)

கையிலுள்ள பணமும் பொன்னாபரணங்களும் கைவிட்டுப் போகும். எதிரிகளின் கை ஓங்கும். உடல் ஆராக்கியம் பாதிக்கப்படும். நண்பர்களால் தொல்லை உண்டாகும். 1-4-7-10 அல்லது 11ஆவது இடத்தில் ராகு அமர்ந்தால் தீமையான பலன்கள் மூன்று மாதங்களும் அதன் பிறகு நன்மையான பலன்களும் நடைபெறும்.

### குரு புத்தி (480 நாட்கள்)

பல வகையான வெற்றிகளை எளிதாகப்பெற முடியும். வருமானம் பெருகும் செல்வம் வேகமாகப்

பெருகும். அரசாங்க அதிகாரிகளால் சில ஆதாயங்கள் கிட்டும். குரு 6 அல்லது 12ஆம் வீட்டில் அமர்ந்தால் மனைவி, மக்களின் உடல் நலம் பாதிக்கப்படும். பொருள் விரையமாகும்.

### சனி புத்தி (570 நாட்கள்)

வீட்டில் வளர்க்கும் பிராணிகளை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கும். மனதில் விரக்தி உண்டாகும். பணம் விரையமாகும். மனைவியின் உடல் நலம் பாதிக்கப் படும். 11ஆம் வீட்டில் சனி அமர்ந்தாலும் அல்லது வலிமை பொருந்திய கிரகங்களுடன் சேர்ந்தாலும் தன லாபம் ஏற்படும்.

### புதன் புத்தி (510 நாட்கள்)

தீடீர் யோகம் ஏற்படும். மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். எண்ணிய காரியங்களை உடனுக்குடன் செய்து முடிக்க முடியும். கையில் பண நாடமாட்டம் சிறப்பாக இருக்கும். அறிவாற்றல் பெருகும். புதனுடன் பாபக்கிரகங்கள் சேர்ந்தால் தீமையான பலன் நடைபெறும்.

### கேது புத்தி (210 நாட்கள்)

உடலில் கட்டி அல்லது வீக்கம் ஏற்படும். முக்கிய உறவினர் ஒருவர் இறந்து போவார். இடது கண் ஏதாவது நோயால் பாதிக்கப்படும். எந்த காரியத்தைச் செய்யத் தொடங்கினாலும் அதை செய்து முடிக்க முடியுமா என்ற சந்தேகம் ஏற்படும். கேது 4 அல்லது 12ஆம் வீட்டில் சுபக் கிரகங்களுடன் சேர்ந்திருந்தால் சுகமான வாழ்க்கை அமையும். வாகன இலாபம் கிட்டும்.

### சுக்கிர புத்தி (600 நாட்கள்)

எந்தக் காரியத்தைச் செய்யத் தொடங்கினாலும் ஏதாவது தடை தோன்றும். நண்பர்கள் பகைவர்களாக மாறுவார்கள். வரவை விடச் செலவு அதிகமாக இருக்கும். மருத்துவச் செலவு அதிகமாக ஏற்படும். எதிரிகளால் பல வகையான துன்பங்கள் ஏற்படும். சுக்கிரன் 2ஆம் வீட்டில் அமர்ந்தால் திடீரென்று ஏராளமாகப் பணம் கிட்டும். பொன்னும், பொருளும் புது வாகனமும் சேரும்.

### சூரிய புத்தி (180 நாட்கள்)

பித்தம் சம்மந்தப்பட்ட வியாதிகள், காய்ச்சல், போன்றவற்றால் பாதிப்பு உண்டாகும். சூரியன் லக்கி னாதிபதியுடன் சேர்ந்தாலும், 2 அல்லது 11ஆம் வீட்டில் இருந்தாலும் நன்மையான பலன் நடைபெறும். ஆனால் தந்தைக்குத் தோஷம் உண்டாகும். சூரியன் கேந்திர கோணங்களில் இருந்தால் அரசாங்க நன்மை, புத்திர லாபம் போன்றவை கிட்டும்.

## செவ்வாய் தசை தரும் பலன்

### செவ்வாய் புத்தி (147 நாட்கள்)

அரசாங்கத் தொல்லை உண்டாகும். குட்டி போட்ட நாய் கடிக்கும். மனதில் இனம்புரியாத அச்சம் நிறைந்திருக்கும். கலகங்களால் உடலில் காயம் ஏற்படும். செவ்வாயுடன் சுபக்கிரகங்கள் சேர்ந்திருந்தால் வாகன இலாபம் கிட்டும். தாராளமாக வருமானம் வரும்.

### ராகு புத்தி ( 378 நாட்கள்)

கொடிய விஷங்களால் துன்பம் உண்டாகும். பெற்றோருக்கும் கண்டம் ஏற்படும். சொந்த ஊரில்

போதிய வருமானம் கிட்டாததால் வேறு ஊருக்குச் சென்று வாழ நேரிடும். ராகுவுடன் சுபக்கிரகங்கள் சேர்ந்து 3, 10 அல்லது 11ஆம் இடத்தில் அமர்ந்தால் நன்மையான பலன்கள் நடைபெறும்.

## குரு புத்தி (336 நாட்கள்)

குடும்பத்தில் நிம்மதி இராது. பகைவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். அரசாங்க விரோதம் உண்டாகும். ஆனால் குரு புத்தியின் இறுதிப் பகுதியில் எதிர்பாராத வகையில் செல்வம் சேரும். குரு சுப வீட்டில் அமர்ந்தால் தீய பலன் நடைபெறாமல் நன்மையான பலனே நடைபெறும்.

## சனி புத்தி (399 நாட்கள்)

உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். சில விவகாரங் களால் சண்டை சச்சரவுகள் ஏற்படும். நண்பர்கள் அல்லது உறவினர்களுக்கு ஓரளவு பொருள் விரையம் உண்டாகும். சனி உச்சம் பெற்று அமர்ந்தால் வருமானம் பெருகும். செல்வாக்கும், புகழும் ஓங்கும்.

## புதன் புத்தி (357 நாட்கள்)

அழகான பெண்ணுடன் உல்லாசமாக இருக்கும் வாய்ப்பு கிட்டும். ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பாம்பு கடிக்கும். நீண்ட நாட்களாகத் தொல்லை கொடுத்து வந்த நோய் நீங்கும். புதன் 6-8-12ல் இருந்தால் மனைவி மக்களுக்குத் துன்பம் உண்டாகும்.

## கேது புத்தி (147 நாட்கள்)

பெண்களால் கலகங்களும் பொருள் விரையமும் ஏற்படும். கொடிய நாகங்ளால் அச்சம் உண்டாகும். பழி

பாவங்களை ஏற்க நேரிடும். பகைவர்களால் தொல்லை உண்டாகும். கேது உச்சம் பெற்று அமர்ந்தால் தன தானிய இலாபம் கிட்டும். அரசாங்க நன்மை உண்டாகும்.

### சுக்கிர புத்தி (420 நாட்கள்)

கடவுள் பக்தி அதிகமாகும். நல்லோருடைய தொடர்பு ஏற்படும். சிரங்கு, புண் போன்றவற்றால் தொல்லை உண்டாகும். அழகான பெண்களுடன் உல்லாசமாக இருக்கும் வாய்ப்பு கிட்டும். வீட்டில் ஆடு, மாடுகளை வளர்க்கும் சூழ்நிலை உருவாகும். சுக்கிரன் 6-8அல்லது 12இல் நீச்சம்பெற்று அமர்ந்தால் தெற்கு திசையில் பிரயாணம் செய்ய நேரிடும்.

### சூரிய புத்தி (126 நாட்கள்)

கழுத்து, மார்பு, வயிறு சம்பந்தப்பட்ட வியாதி களால் பாதிப்பு உண்டாகும். நெருப்பால் ஆபத்து உண்டு. மனைவியின் உடல்நலம் பாதிக்கப்டும். நல்லவர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடும். சூரியன் 6-8 அல்லது 12ஆம் வீட்டில் பாபக்கிரகங்களுடன் சேர்ந்து இருந்தால் உறவினர் பகை வரும். போதிய வருமானம் இன்றி வெளி நாடுகளில் சென்று வாழ நேரிடும்.

### சந்திர புத்தி (210 நாட்கள்)

புத்திர, புத்திரிகளுக்குத் துன்பம் உண்டாகும். உடலில் வீக்கம், கட்டி போன்றவை ஏற்படும். மனைவியின் உடல் நலம் பாதிக்கப்படும். அரசாங்க விரோதம் உண்டாகும். சந்திரன் 4ஆம் வீட்டு அதிபதியுடன் சேர்ந்து இருந்தால் செல்வம் பெருகும். வீடு, நிலம், பொன்னாபரணம், புதுவாகனம் போன்றவை சேரும். கௌரவப் பதவிகள் தேடி வரும்.

## ராகு தசை தரும் பலன்

### ராகு புத்தி (972 நாட்கள்)

பெற்றோருக்கு மனச் சஞ்சாரமும் கண்டமும் உண்டாகும். மனைவிக்குத் துன்பம் ஏற்படும். தன் ஊரை விட்டு வேறு ஊருக்கோ அல்லது வேறு நாட்டிற்கோ செல்ல நேரிடும். ராகு உச்சம் பெற்று அமர்ந்தால் தீமையான பலன்கள் நடைபெறாமல் நன்மையான பலன்கள் நடைபெறும்.

### குரு புத்தி (864 நாட்கள்)

மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய சம்பவங்கள் நடைபெறும். வருமானம் பெருகும். செல்வம் சேரும். எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் அதை வெற்றி கரமாகச் செய்து முடிக்க முடியும், அரசாங்க நன்மை உண்டாகும். குடும்பத்தில் திருமணம் நடைபெறும். குரு ஆறு, எட்டு, அல்லது பன்னிரண்டாம் வீட்டில் அமர்ந்தால் பொருள் விரையமாகும். வியாதிகளால் தொல்லை உண்டாகும்.

### சனி புத்தி (1026 நாட்கள்)

விவகாரங்கள் முற்றிச் சண்டை போட வேண்டி வரும். எதிரிகளின் கை ஓங்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் நிறையும். சனி உச்சம் பெற்றோ அல்லது இலாப ஸ்தானத்திலோ அமர்ந்தால் இராஜ யோகத்திற்குச் சமமான யோகம் கிட்டும். ஆடை யாபரணச் சேர்க்கை ஏற்படும்.

### புதன் புத்தி (918 நாட்கள்)

எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் அதை வெற்றிகரமாகச் செய்து முடிக்கக்கூடிய ஆற்றல் பெருகும். எதிரிகளை எளிதில் சமாளிக்க முடியும். செல்வம் பெருகும். புதன் இரண்டு அல்லது பதினொன்றாம் வீட்டில் அமர்ந்தால் அதிகமான யோகம் உண்டாகும். பல வழிகளிலும் இலாபம் கிட்டும்.

### கேது புத்தி (378 நாட்கள்)

உடலில் கட்டி அல்லது வீக்கம் ஏற்படும். மனைவி, மக்களுக்குத் துன்பம் உண்டாகும். நச்சுப் பிராணிகளால் ஆபத்து உண்டாகும். மனைவியின் உடல்நலம் பாதிக்கப் படும். கேது நான்காம் வீட்டு அதிபதியுடன் சேர்ந்தால், வீடு, நிலம், பொன்னாபரணம், புது வாகனம் போன்றவை சேரும்.

### சுக்கிரப் புத்தி (1080 நாட்கள்)

பொன்னாபரணங்கள் சேரும். செல்வாக்கு பெருகும். அழகான பெண்களின் தொடர்பு கிட்டும். அரசாங்க நன்மை ஏற்படும். சுக்கிரனுடன் சுபக்கிரகங்கள் சேர்ந்திருந்தால் நற்பலன்கள் நடைபெறும். பாபக் கிரகங்கள் சேர்ந்தால் தீமையான பலன்கள் நடைபெறும்.

### சூரியப் புத்தி (324 நாட்கள்)

அரசாங்கத்தின் மூலமாக ஆதாயம் கிட்டும். உறவினர்களை பகைத்து கொள்ள நேரிடும். மனைவி, மக்களின் உடல்நலம் பாதிக்கப்படும். போதிய வருமான மில்லாததால் தூர தேசங்களுக்குச் செல்ல நேரிடும். சூரியன் உச்சம் பெற்று அமர்ந்தால் குடும்பத்தில் சுப காரியம் நடைபெறும்.

### சந்திர புத்தி (540 நாட்கள்)

உறவினர்களுக்கு துன்பம் உண்டாகும். பொருள் விரையமாகும். செல்வம் அழிந்து போகும். மனைவி, மக்களால் வீண் செலவுகள் ஏற்படும். பூர்விகச் சொத்துக் களை இழக்க நேரிடும். சந்திரன் லக்னத்திற்கு மூன்று அல்லது பத்தாம் இடத்தில் அமர்ந்திருந்தால் நன்மையான பலன்கள் நடைபெறும். வருமானத்தை எளிதாகப் பெருக்கிக் கொள்ள முடியும். ஆடையாபரணச் சேர்க்கை ஏற்படும்.

### செவ்வாய்ப் புத்தி (378 நாட்கள்)

மனதில் கவலைகளும் குழப்பங்களும் ஏற்படும். நெருப்பால் ஆபத்து உண்டாகும். அரசாங்க விரோதம் ஏற்படும். பகைவர்கள் அடிக்கடி தொல்லை கொடுப் பார்கள். பொருள்கள் களவு போகும். செவ்வாய் உச்சம் பெற்று அமர்ந்தாலும் அல்லது சுபக்கிரகங்களுடன் சேர்ந்தாலும் வீடு, நிலம் போன்ற அசையா சொத்துக்கள் சேரும். அரசாங்க நன்மை உண்டாகும். எதிர்பாராத யோகத்தால் வாழ்வின் தரம் உயரும்.

## குரு தசை தரும் பலன்

### குரு புத்தி (768 நாட்கள்)

கையில் பணநடமாட்டம் சிறப்பாக இருக்கும். தன, தானிய இலாபம் ஏற்படும். ஆடையாபரணச் சேர்க்கை உண்டாகும். பெண்களால் மகிழ்ச்சியும் ஆதாயமும் கிட்டும். குரு ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடத்தில் அமர்ந்தால் தன தானிய நாசம், தாயாதி விரோதம் போன்றவை ஏற்படும்.

### சனிப் புத்தி (912 நாட்கள்)

தன, தானிய சேர்க்கை உண்டாகும். முடக்குவாத நோயால் பாதிப்பு ஏற்படும். வீடு, நிலம் போன்ற அசையாச் சொத்துக்களை வாங்கக் கூடிய சூழ்நிலை உருவாகும். மனைவிக்கு சில வகை துன்பங்கள் உண்டாகும். சில விவகாரங்களால் பொருள் விரயமாகும். நல்லவர்களைப் பகைத்துக்கொள்ள நேரிடும்.

### புதன் புத்தி (816 நாட்கள்)

மகிழ்ச்சியைத் தரக்கூடிய சம்பவங்கள் நடைபெறும். இசைத்துறையில் ஆர்வம் உண்டாகும். கடவுள் பக்தி அதிகமாகும். மனைவி, மக்கள் குதூகலமாக வாழ்வார்கள். புதன் பாபக்கிரகங்களுடன் சேர்ந்திருந்தால் உடல்நலக் குறைவு உண்டாகும். மனைவி, மக்களால் சில சிக்கல் உருவாகும்.

### கேது புத்தி (336 நாட்கள்)

நண்பர்களையும் உறவினர்களையும் பகைத்துக் கொள்ள நேரிடும். பெற்றோருடன் கருத்து வேறுபாடு ஏற்படும். வெளிநாட்டில் சென்று வாழக்கூடிய சூழ்நிலை உருவாகும். கேதுவுடன் சுபக்கிரகங்கள் சேர்ந்திருந்தால் ஓரளவு நன்மையான பலன்கள் நடைபெறும், செல்வம் சேரும்.

### சுக்கிர புத்தி (960 நாட்கள்)

தன, தானிய விருத்தி ஏற்படும். வாகன யோகம் உண்டாகும். நினைக்கும் காரியங்களை உடனுக்குடன் செய்து முடிக்க முடியும். கௌரவமும் செல்வாக்கும் பெருகும். நெருப்பால் ஆபத்து ஏற்படும். சுக்கிரன் ஆறு, எட்டு அல்லது பன்னிரண்டாம் வீட்டில் அமர்ந்தால் உறவினரின் பகை உண்டாகும்.

## சூரிய புத்தி (288 நாட்கள்)

வருமானம் சிறப்பாக இருக்கும். ஆடையாபரணச் சேர்க்கை ஏற்படும். எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும். கௌரவமும், செல்வாக்கும் பெருகும். நெருப்பால் ஆபத்து ஏற்படும். பாவக் காரியங்களைச் செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகும்.

## சந்திர புத்தி (480 நாட்கள்)

வருமானம் பெருகி வீடு, நிலம் போன்ற அசையாச் சொத்துக்களை வாங்க முடியும். ஆடையாபரணச் சேர்க்கை ஏற்படும். மற்றவர்கள் பாராட்டக்கூடிய நற்செயல்களைச் செய்யமுடியும். மனதில் உற்சாகமும், தைரியமும் அதிகமாகும். சந்திரன் ஆறு, எட்டு அல்லது பன்னிரண்டாம் இடத்தில் அமர்ந்தால் பொருள் விரையமாகும். அரசாங்கத்தால் தொல்லை உண்டாகும். கௌரவக் குறைவு ஏற்படும்.

## செவ்வாய்ப் புத்தி (336 நாட்கள்)

எந்தக் காரியத்தை தொடங்கினாலும் தடைபட்டு நிற்கும். பெற்றோருக்கு கண்டம் உண்டாகும். நோய்களால் அடிக்கடி பாதிப்பு ஏற்படும். குடும்பத்தை பிரிந்து வாழ நேரிடும். செவ்வாய் ஆட்சி, உச்சம் பெற்று அமர்ந்தால் ஓரளவு வருமானம் வந்தாலும் எல்லாம் செலவாகிவிடும்.

## ராகு புத்தி (864 நாட்கள்)

எதிரிகள் அடிக்கடி ஏதாவது விவகாரம் செய்து கொண்டே இருப்பார்கள். கையில் சேரும் பணம் எதுவும் தங்காது. எல்லாம் உடனுக்குடன் செலவாகிவிடும்.

மனைவி, மக்களுக்கு உடல் குறைவு ஏற்படும். ராகு சுபக் கிரகங்களுடன் சேர்ந்திருந்தால் சில ஆதாயங்கள் கிட்டும். நல்ல நண்பர்களின் தொடர்பு கிட்டும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். செல்வாக்கு அதிகமாகும்.

## சனி தசை தரும் பலன்

### சனிப் புத்தி (1083 நாட்கள்)

நண்பர்களின் ஆதரவு குறையும். நோய்களால் பாதிப்பு உண்டாகும். புத்திரர்களுக்குச் சிலவகைத் தொல்லைகள் ஏற்படும். வரவைவிடச் செலவு அதிகமாக இருக்கும். சனி, நான்கு, ஏழு அல்லது பத்தாம் வீட்டில் இருந்தால் புகழும் செல்வாக்கும் அதிகமாகும். அரசாங்க நன்மை உண்டாகும்.

### புதன் புத்தி (969 நாட்கள்)

உயர் கல்வி கிட்டும். தன, தானியங்கள் சேரும். செல்வம் பெருகும். உறவினர்களின் ஆதரவு கிட்டும். குடும்பத்தில் பெண்களுக்குத் திருமணம் நடைபெறும். புத்திர பாக்கியம் கிடடும். வாழ்க்கையில் வசதிகள் பெருகும். மனதில் எப்போதும் உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும்.

### கேது புத்தி (399 நாட்கள்)

வலது காலில் வாதநோய் ஏற்படும். மேக சம்பந்த மான நோய்களால் பாதிப்பு உண்டாகும். புத்திரனால் துன்பம் உண்டாகும். நச்சுப் பிராணிகளால் ஆபத்து ஏற்படும். பெண்களால் சில வகையான சிக்கல்களும் பொருள் விரையமும் உண்டாகும். சண்டை சச்சரவுகள் ஏற்படும்.

## சுக்கிர புத்தி (1140 நாட்கள்)

உத்தமர்களுடைய தொடர்பும் அவர்களால் மகிழ்ச்சியும் உண்டாகும். எந்த காரியத்தையும் வெற்றிகர மாகச் செய்து முடிக்க முடியும். அழகான பெண்களின் தொடர்பு ஏற்படும். பல வழிகளிலும் ஆதாயம் கிட்டும். உறவினர்களின் அன்பும், ஆதரவும் கிட்டும். விந்தையான பகைவர்கள் ஏற்படுவார்கள்.

## சூரிய புத்தி (342 நாட்கள்)

மேக சம்மந்தமான நோய்களால் பாதிப்பு ஏற்பட்டு இரத்தப் போக்கு உண்டாகும். உஷ்ண சம்பந்தமான நோய்கள், கண் சம்மந்தப்பட்ட வியாதிகள் போன்ற வற்றால் பாதிப்பு ஏற்படும். சூரியனுடண் சுபக் கிரகங்கள் சேர்ந்து இருந்தால் தீமையான பலன்கள் நடைபெறாமல் நன்மையான பலன்கள் நடைபெறும்.

## சந்திர புத்தி (570 நாட்கள்)

அடிக்கடி பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும். குடும்பத்தில் எப்போதும் சண்டையும் சச்சரவுமாக இருக்கும். பணமும், பொன்னாபரணங்களும் விரைய மாகும். 6, 8 அல்லது பன்னிரண்டாம் இடத்தில் சந்திரன் வலிமைபெற்று அமர்ந்தால் தன தானிய லாபம் கிட்டும்.

## செவ்வாய் புத்தி (399 நாட்கள்)

பழி பாவங்கள் ஏற்படும். எதிரிகளின் எண்ணிக்கை அதிகமாகும். போதிய வருமானமில்லாத காரணத்தால் வெளிநாட்டில் சென்று வாழவேண்டிய அவசியம் உண்டாகும். வீட்டில் உள்ள பொருள்கள் களவு போகும். செவ்வாய் லக்னாதிபதியுடன் சேர்ந்து 3-6 அல்லது 11ஆம் வீட்டில் அமர்ந்தால் வருமானம் பெருகும்.

### ராகு புத்தி (1026 நாட்கள்)

பாத்திரங்கள் விரையமாகும். பாம்பு கடிக்கும். பல வகையான நோய்களால் பாதிப்பு உண்டாகும். நண்பர்களையும் உறவினர்களையும் பகைத்துக்கொள்ள நேரிடும். அலைச்சல் அதிகமாக இருக்கும். ராகு 5, 6, 10 அல்லது 11ஆம் இடத்தில அமர்ந்திருந்தால் கடன்கள் தீரும். பொன்னாபரணங்கள் புதிய பொருள்கள் போன்றவை சேரும். நண்பர்களின் உதவி கிட்டும்.

### குரு புத்தி (912நாட்கள்)

மனதில் மகிழ்ச்சியைப் பெருக்கும் சம்பவங்கள் நடைபெறும். பணியாட்கள் மூலம் சில வேலைகளை எளிதாகச் செய்து முடிக்க முடியும். ஆடையாபரணச் சேர்க்கை ஏற்படும். மனைவி, மக்களும் உறவினர்களும் நலமாக வாழ்வார்கள். ஜெனன லக்னத்திற்கு இரண்டாம் வீட்டு அதிபதி அல்லது 7ஆம வீட்டு அதிபதியுடன் குரு சேர்ந்தால் கடுமையான தோஷம் உண்டாகும்.

## புதன் தசை தரும் பலன்

### புதன் புத்தி (867 நாட்கள்)

நண்பர்கள், உறவினர்களின் அன்பும் ஆதரவும் கிட்டும். வருமானம் பெருகிச் செல்வம் சேரும். எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும். ஞான மார்க்கங்களை மனம் நாடும். பல வகையான வித்தைகளைக் கற்றுக்கொண்டு அவற்றின் மூலம் நிறைய இலாபம் சம்பாதிக்க முடியும்.

### கேது புத்தி (357 நாட்கள்)

சொந்த ஊரில் சரியாக வருமானம் செய்ய முடியாததால் வேறு ஊர் அல்லது வெளிநாடுகளுக்குச் செல்ல நேரிடும். நீங்காத நோய்களால் துன்பப்பட நேரிடும். கேதுவுடன சுபக்கிரகங்கள் சேர்ந்து இருந்தால் ஓரளவு நன்மையான பலன்கள் நடைபெறும்.

### சுக்கிர புத்தி ( 1020 நாட்கள்)

மனைவியால் மகிழ்ச்சியும், தன இலாபமும் ஏற்படும். உறவினர்கள் பாசமாகவும் நடந்து கொள் வார்கள். புத்திர பாக்கியம் கிட்டும். ஆடையாபரணங்கள் சேர்க்கை ஏற்படும். குடும்பத்திலுள்ள பெண்களுக்கு திருமணம் நடைபெறும். வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பும் வாய்ப்புக் கிட்டும்.

### சூரிய புத்தி (306 நாட்கள்)

மனதில் பல வகையான சந்தேகங்கள் தலை தூக்கும். நெருப்பால் ஆபத்து உண்டாகும். மனைவியின் உடல் நலம் பாதிக்கப்படும். சூரியன் லக்னாதிபதியால் பார்க்கப் பட்டால் தன இலாபம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வருமானம் சிறப்பாக இருக்கும்.

### சந்திர புத்தி (510 நாட்கள்)

காலில் பின் பக்கத்தில் வீக்கம் ஏற்படும். அடிக்கடி சோர்வு உண்டாகும். பெண்கள் மூலமாகச் சண்டைச் சச்சரவுகள் ஏற்படும். அடிக்கடி பொருளாதர நெருக்கடி களை சந்திக்க நேரிடும். சந்திரன், புதனாலும், சுக்கிர னாலும் பார்க்கப்பட்டால் திருமணம் தள்ளிப்போகும். அரசாங்க விரோதம் ஏற்படும்.

## செவ்வாய் புத்தி (357 நாட்கள்)

நண்பர்களையும் உறவினர்களையும் பகைத்துக் கொள்ள நேரிடும. பித்த வியாதிகளால் பாதிப்பு உண்டாகும். பகைவர்கள் தொடர்ந்து தொல்லை கொடுப்பார்கள். செவ்வாய் லக்னாதிபதியாக இருந்தால் மனைவியால் மகிழ்ச்சியும் சில வகை ஆதாயங்களும் கிட்டும்.

## ராகு புத்தி (918 நாட்கள்)

நீசர்களால் தொல்லை உண்டாகும். குடும்பத்தை விட்டுப் பிரிந்து வாழ நேரிடும். நச்சுப் பிராணிகளால் ஆபத்து உண்டாகும். மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் குறையும். கண்டம் உண்டாகும். அடிக்கடி கெட்ட கனவுகளைக் காண நேரிடும். தலை சம்பந்தப் பட்ட நோய்களால் தொல்லை கொடுக்கும். பித்த சம்பந்தமான வியாதிகளால் பாதிப்பு உண்டாகும்.

## குரு புத்தி (816 நாட்கள்)

மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய சம்பவங்கள் நடைபெறும். புத்திர பாக்கியம் கிட்டும். உறவினர்களின் அன்பும், ஆதரவும் கிட்டும். தேவையான பொருள்கள் சிரமமில்லாமல் வந்து சேரும். குரு உச்சம் ஆட்சி பெற்று அமர்ந்தால் குடும்பத்தில் சுப காரியம் நடைபெறும். சுவையான உணவு வகைகளைச் சாப்பிட நேரிடும். கடினமான காரியங்களை எளிதாகச் சாதிக்க முடியும்.

## சனி புத்தி (969 நாட்கள்)

வலது காலில் வலி தோன்றும். பகைவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். மேற்கு திசையிலிருந்து

கஷ்டங்கள் வரும். பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் துன்பம் உண்டாகும். சனி ஆட்சி உச்சம் பெற்று மூன்று, ஆறு அல்லது 10ஆம் இடத்தில் அமர்ந்தால் தீமையான பலன்கள் நடைபெறும். கையில் பண நடமாட்டம் சிறப்பாக இருக்கும்.

## கேது தசை தரும் பலன்

### கேது புத்தி (147 நாட்கள்)

மனைவியாலும், மக்களாலும், உறவினர்களாலும் பலவகையான தொல்லைகள் ஏற்படும். அதன் காரண மாக மனதில் விரக்தி உண்டாகும். கேது 9ஆம் வீட்டு அதிபதியுடன் சேர்ந்தால் விவசாயம் மூலமாக நிறைய இலாபம் கிட்டும். பொன்னும் பொருளும் சேரும்.

### சுக்கிர புத்தி (420 நாட்கள்)

மனைவியின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். புத்திர பாக்கியம் கிட்டும். புது வாகனம் வாங்க முடியும். நினைக்கும் காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும். சுக்கிரன் நீசம் பெற்று அமர்ந்திருந்தால் அரசாங்க விரோதம் ஏற்படும் தன தானியம் நாசமாகும்.

### சூரிய புத்தி ( 126 நாட்கள்)

பொன், பொருள் யாவற்றையும் இழந்து வெளி நாடுகளில் சென்று வாழ நேரிடும். ஓரளவு கையில் பணம் சேர்த்தும் சொந்த நாட்டிற்குத் திரும்பி வசதியாக வாழலாம். சனி 3, 6 அல்லது 10ஆம் இடத்தில் அமர்ந்தால் நன்மையான பலன்கள் நடைபெறும்.

## சந்திர புத்தி (210 நாட்கள்)

பெண்கள் மூலமாக விவகாரங்களும் பொருள் விரையமும் ஏற்படும். புத்திர, புத்திரிகள் வியாதிகளால் பாதிக்கப்படுவார்கள். வாகன விருத்தி ஏற்படும். பொன், பொருள்கள் சேரும். பல கஷ்டங்கள் ஏற்பட்டாலும் உடனுக்குடன் நிவர்த்தியாகும்.

## செவ்வாய் புத்தி ( 147 நாட்கள்)

பல வகையான நஷ்டங்களும் பொருள் விரையமும் உண்டாகும். பெண்கள் மூலமாகச் சில விவகாரங்களும், எதிரிகளால் தொல்லைகளும் உண்டாகும். நெருப்பால் ஆபத்து ஏற்படும். செவ்வாய் உச்சம் பெற்று அமந்தால் விவசாயம் மூலமாக நிறைய இலாபம் கிடடும். வசதியான வாழ்க்கை அமையும்.

## ராகு புத்தி (378 நாட்கள்)

தன் குடும்பத்திலுள்ள பெண்களுக்குப் பல வகையான துன்பங்கள் ஏற்படும். தந்தைக்கு அரிட்டம் உண்டாகும். பொருள் விரையமாகும். சொத்துக்கள் அழிந்து போகும். ராகு சுபக்கிரகங்களால் பார்க்கப் பட்டால் நீசர்களுடைய தொடர்பால் இலாபம் கிட்டும். பல வகையான நன்மைகளும் ஏற்படும்.

## குரு புத்தி (336 நாட்கள்)

அரசாங்க ஆதரவு கிட்டும். மனைவியால் சுகமும், ஆதாயங்களும் கிட்டும். வருமானம் பெருகும். வீடு, நிலம், பொன், புது வாகனம் போன்றவை சேரும். பல வெற்றி களை எளிதாகத் தேடிக்கொள்ள முடியும். குரு பாபக் கிரகங்களால் பார்க்கப்பட்டால் கண் சம்பந்தப்பட்ட நோய்களால் பாதிப்பு உண்டாகும். நெருப்பால் ஆபத்து உண்டாகும்.

### சனிப் புத்தி (399 நாட்கள்)

கையிலுள்ள பொருளும் அசையா சொத்துக்களும் விரையமாகும். சொறி சிரங்கு, தேமல் போன்றவற்றால் தொல்லை உண்டாகும். மனதில் பல வகையான சந்தோஷங்கள் உண்டாகும். குடும்பத்திலுள்ள பெண் களுக்குச் சில வகைத் தொல்லைகள் ஏற்படும். சனி மூலத் திரிகோணங்களில் அமர்ந்தால் வருமானம் மெதுவாகப் பெருகும்.

### புதன் புத்தி (357 நாட்கள்)

போதிய வருமானம் இல்லாததால் தன் சொந்த ஊரை விட்டு வேறு ஊருக்குச் செல்ல நேரிடும். நண்பர் களாலும், உறவினர்களாலும் ஆபத்து உண்டாகும். புத்திர, புத்திரிகளால் வீண் செலவு ஏற்படும். எந்த காரியத்தையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியாது. புதன் உச்சம் ஆட்சி பெற்று அமர்ந்தால் நன்மையான பலன்கள் நடைபெறும். வாகன யோகம் ஏற்படும்.

## சுக்கிர தசை தரும் பலன்

### சுக்கிர புத்தி (1200 நாட்கள்)

ஏராளமாகச் செல்வம் சேரும். நவரத்தின ஆபரணச் சேர்க்கை ஏற்படும். வாழ்க்கையில் நாளுக்கு நாள் வசதிகள் பெருகும். மேலான பொருள்கள் சேரும். சுக்கிரன் நீசம் பெற்று அமர்ந்தால் நன்மையான பலன்களை விடத் தீமையான பலன்கள் அதிகம் நடைபெறும்.

### சூரிய புத்தி (360 நாட்கள்)

கையில் உள்ள பொருள் விரையமாகும். செல்வம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே போகும். கடுமை யான வியாதிகளால் பாதிப்பு உண்டாகும் வழக்கு

விவகாரங்களில் பாதகமான போக்கு காணப்படும். சூரியனுடன் சுபக்கிரகங்கள் சேர்ந்தால் நன்மையான பலன்கள் நடைபெறும்.

**சந்திர புத்தி ( 600 நாட்கள்)**

எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும். மனைவி மூலமாகப் பகை வந்து சேரும். குடும்பத்திலுள்ள பெண்களின் சொல்லுக்குக் கட்டுப் பட்டு நடக்க வேண்டும். சந்திரன் நீசம் பெற்று அமர்ந்தால் வருமானம் பாதிக்கப்படும். கடன்கள் தொல்லை கொடுக்கும்.

**செவ்வாய்ப் புத்தி (420 நாட்கள்)**

வீடு, நிலம் போன்ற அசையா சொத்துக்களையும் வாங்கமுடியும். சில காரியங்கள் பெண்களால் தடைப் பட்டு நிற்கும். கடவுள் பக்தி அதிகமாகும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். கண் சம்பந்தப்பட்ட வியாதி களால் பாதிப்பு உண்டாகும். ஆடையாபரணச் சேர்க்கை ஏற்படும்.

**ராகு புத்தி (1080 நாட்கள்)**

ஞான மார்க்கங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும். மருந்து மாத்திரைகள் விஷமாகி அவற்றால் பாதிப்பு உண்டாகும். ராகு 5, 9 அல்லது 11ஆம் வீட்டில் அமர்ந்தால் மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய சம்பவங்கள் நடைபெறும். எதிர்பாராத இலாபங்கள் கிட்டும்.

**குரு புத்தி (960 நாட்கள்)**

தன, தானிய இலாபம் கிட்டும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். அரசாங்க நன்மை கிட்டும். வருமானமும் பெருகும். செலவும் அதிகமாகும். குரு ஆறு,

எட்டு, அல்லது 12ஆம் வீட்டில் அமர்ந்தால் பொருள்கள் களவு போகும். நெருப்பால் ஆபத்து உண்டாகும்.

**சனி புத்தி (1140 நாட்கள்)**

கால், கைகளில் நோய் ஏற்பட்டுக் குணமாகும். உணவைக் கண்டால் வெறுப்பாக இருக்கும். பொருளாதார நெருக்கடி ஏற்படும். மனதில் கவலைகள் அதிகமாகும். சுக்கிரன் வீட்டில் சனியும், சனி வீட்டில் சுக்கிரனும் அமர்ந்தால் அரசாங்கத்தின் மூலமாக ஆதாயம் கிட்டும்.

**புதன் புத்தி (1020 நாட்கள்)**

நல்ல மனைவி அமைவாள். புத்திர பாக்கியம் கிட்டும் வருமானம் பெருகும். வீடு, நிலம், பொன்னாபரணங்கள், புது வாகனம் போன்றவை சேரும். இசைத் துறையில் ஆர்வம் உண்டாகும். சிவப்பு நிற மனிதனால் பல வகையான ஆதாயங்கள் கிட்டும். புதன் 6, 8 அல்லது 12ஆம் வீட்டில் அமர்ந்தால் மனதில் கவலைகள் அதிகரிக்கும். முற்பாதியில் சௌக்கியமும் பிற்பாதியில் நஷ்டங்களும் உண்டாகும்.

**கேது புத்தி (420 நாட்கள்)**

மிருகங்களால் ஆபத்து உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் அதிகமாகும். குடும்பத்தில் நிம்மதி இராது. வருமானத்தைவிடச் செலவு அதிகமாக இருக்கும். கேது 1-4-5-7-9-10 ஆகிய இடங்களில் அமர்ந்தால் அரசாங்க நன்மை கிட்டும். எதிரிகளை எளிதாக வெற்றிகொள்ள முடியும். தன, தானிய இலாபம் கிட்டும்.

■ ■ ■ ■ ■ ■

## பிழை திருத்தம்

| *பக்கம்* | *வரி* | *அச்சுப்பிழை* | *திருத்தம்* |
|---|---|---|---|
| 3 | 3 | காலச்சக்கரத்தில் உள்ள புதன் வயது பிழையாக உள்ளது | காலச்சக்கரத்தில் உள்ள எல்லா புதன் வயது-9 எனவும் |
| 3 | 19 | ரிஷப வெள்ளிக்கு அடுத்து | மீன குரு-10 விருச்சிகச் செவ்வாய்-7 |
| 3 | 21 | வயது-83 | வயது-100 |
| 4 | 5 | மகர சனி | மகர சனி-4 |
| 6 | 12 | சேர்க்கப்படவில்லை | துலா வெள்ளி-16 |
| 6 | 13 | சேர்க்கப்படவில்லை | விருச்சிகச் செவ்வாய்-7 |
| 6 | 22 | சூரியன்-9 | சூரியன்-6 |
| 6 | 23 | சேர்க்கப்படவில்லை | செவ்வாய்-7 |
| 10 | 5 | மீன | கும்பசனி-4 |
| 10 | 6 | வியாழன்-10 | மீன வியாழன்-10 |
| 13 | 9 | ரிஷப வெள்ளி-1 | ரிஷப வெள்ளி-16 |
| 13 | 18 | சேர்க்கவில்லை | கும்பசனி-4, மீன குரு-10 |
| 14 | 5 | செவ்வாய்-2 | செவ்வாய்-7 |
| 14 | 7 | ஆக வயது-86 | ஆக வயது-120 |
| 16 | 26 | ஆக வயது-103 | ஆக வயது-83 |
| 17 | 8 | சேர்க்கவில்லை | மகர சனி-4 |
| 17 | 20 | புதன்-7 | புதன்-17 |
| 17 | 21 | சந்திரன்-7 | சந்திரன்-10 |
| 17 | 21 | ஆக வயது-100 | ஆக வயது-120 |
| 20 | 7 | விடுபட்டுள்ளது | மீனகுரு-10, கும்பசனி-4, மகரசனி-4, |

| பக்கம் | வரி | அச்சுப்பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 20 | 8 | விடுபட்டுள்ளது | கன்னி புதன்-9<br>சிம்ம சூரி-5, |
| 20 | 9 | விடுபட்டுள்ளது | கடக சந்திரன்-21 |
| 20 | 10 | ஆக வயது-83 | ஆக வயது - 85 |
| 21 | 5 | இராகு-10 | இராகு-18 |
| 21 | 5 | விடுபட்டுள்ளது | சனி-19 |
| 21 | 6 | சூரியன்-9 | சூரியன்-6 |
| 24 | 15 | கடக சந்திரன்-4 | கடக சந்திரன்-21 |
| 24 | 18 | கும்பமுனி-9 | கும்பசனி-4 |
| 27 | 9 | மீன வியாழம்-13 | மீன வியாழன்-10 |
| 27 | 17 | விடுபட்டுள்ளது | கடக சந்திரன்-21,<br>சிங்க ஆதித்தன்-5 |
| 27 | 18 | விடுபட்டுள்ளது | கன்னி புதன்-9 |
| 28 | 10 | கேது-10 | கேது-7 |
| 28 | 12 | விடுபட்டுள்ளது | ராகு-18 |
| 28 | 12 | ஆக வயது-86 | ஆக வயது-120 |
| 30 | 10 | மேஷ செவ்வாய்-8 | மேஷ செவ்வாய்-7 |
| 31 | 4 | மேஷ செவ்வாய்-4 | கும்ப சனி-4 |
| 31 | 5 | ரிஷப வெள்ளி-16 | துலா வெள்ளி-16 |
| 31 | 6 | விடுபட்டுள்ளது | கடக சந்திரன்-21 |
| 34 | 13 | விடுபட்டுள்ளது | மிதுன புதன்-9 |
| 35 | 6 | மேஷ செவ்வாய்-5 | மேஷ செவ்வாய்-7 |
| 37 | 16 | தனுசு வியாழன்-11 | தனுசு வியாழன்-10 |
| 41 | 9 | விடுபட்டுள்ளது | மகர சனி-4 |

| பக்கம் | வரி | அச்சுப்பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| 41 | 20 | துலாம் வெள்ளி-1 | துலாம் வெள்ளி-16 |
| 44 | 14 | கடக சந்திரன்-3 | கடக சந்திரன்-21 |
| 44 | 14 | சிங்காதித்தன்-4 | சிங்காதித்தன்-5 |
| 45 | 11 | விடுபட்டுள்ளது | ராகு-18 |
| 47 | 15 | விடுபட்டுள்ளது | மிதுன புதன்-9,<br>கடக சந்திரன்-21 |
| 47 | 15 | விடுபட்டுள்ளது | சிங்காதித்தன்-5 |
| 50 | 28 | விடுபட்டுள்ளது | கன்னி புதன்-9 |
| 54 | 18 | விடுபட்டுள்ளது | கும்ப சனி-4 |
| 55 | 2 | சூரியன்-4 | சூரியன்-6 |
| 57 | 24 | ராகு-8 | ராகு-18 |
| 60 | 1 | வெள்ளி-16 | ரிஷப வெள்ளி-16 |
| 60 | 3 | ரிஷப வெள்ளி-16 | துலாம் வெள்ளி-16 |
| 60 | 4 | விடுபட்டுள்ளது | கன்னி புதன்-9 |
| 61 | 2 | ராகு-8 | ராகு-18 |
| 64 | 12 | விடுபட்டுள்ளது | கும்ப சனி-4 |
| 67 | 13 | ஆக வயது-120 | ஆக வயது-86 |
| 72 | 25 | ஆக வயது-103 | ஆக வயது-100 |
| 76 | 18 | ஆக வயது-8 | ஆக வயது-83 |
| 81 | 7 | ஆக வயது-130 | ஆக வயது-120 |
| 90 | 24 | குரு-19 | குரு-16 |
| 92 | | விடுபட்டுள்ளது | மிருக சீர்ஷம் முன் |

## செய்யுட்களின் வரிசை எண் மற்றும் பக்க எண்


| செய்யுள் | பாடல் எண். | பக்க எண். |
|---|---|---|
| செய்வினை தெரிந்து | 1 | 1 |
| வடவரை யாய | 2 | 1 |
| குருகிய புருவ | 3 | 2 |
| தள்ளிய தியாகி | 4 | 3 |
| மேதைய னழகன் | 5 | 3 |
| தலையது தடிய | 6 | 3 |
| தானங்கள் விரும்பி | 7 | 5 |
| நாளுமே செல்வ | 8 | 5 |
| மந்திர மறைகள் | 9 | 6 |
| பட்டய மணிந்த | 10 | 6 |
| வார்த்தைக ளுடைய | 11 | 8 |
| சிறிதே யொன்றும் | 12 | 8 |
| ஆறிய மறைகள் | 13 | 9 |
| ஊனம துடைய | 14 | 9 |
| மாந்தளிர் போலு | 15 | 9 |
| மைவிழி மாத ரோடு | 16 | 11 |
| பலக்குநல் பசுமை | 17 | 11 |
| வெட்டெனப் பேசவல்லன் | 18 | 12 |
| மார்பகன் னுயர்ந்த | 19 | 13 |
| மேதையா லலங்க | 20 | 13 |
| தலையது தடிய | 21 | 13 |
| திருந்திய நடைய | 22 | 15 |
| நீளிய செய்யுஞ் | 23 | 16 |
| மேதையா லங்க | 24 | 16 |
| தெள்ளிய தியாகி | 25 | 17 |
| குருகிய சருவ | 26 | 17 |
| புறமிசை யுடைய | 27 | 18 |
| பண்டித பலவும் | 28 | 19 |
| மாந்தளிர் போலு | 29 | 19 |
| ஊனம துடைய | 30 | 20 |

| செய்யுள் | பாடல் எண். | பக்க எண். |
|---|---|---|
| ஆரையு மறிந்து | 31 | 20 |
| சிறிதே யுண்ணும் | 32 | 20 |
| நெய்யொடு பாலுங் | 33 | 22 |
| குறுகியவுருவ மெய்யன | 34 | 23 |
| தெள்ளிய தியாகி நல்லன் | 35 | 23 |
| மேதையா லங்க | 36 | 24 |
| தலையது தடிய | 37 | 24 |
| தேசமே புகழ | 38 | 25 |
| சொல்லுநற் சொல்லுஞ் | 39 | 26 |
| நீளிய செய்ய | 40 | 27 |
| மந்திர மறைகள் | 41 | 27 |
| மார்பகன் றுயர்ந்த | 42 | 27 |
| வெட்டெனப் பேச | 43 | 28 |
| கடுகியே நடக்க | 44 | 29 |
| சிறிதொன்றும் | 45 | 30 |
| ஆரையு மறிந்து | 46 | 30 |
| ஊனம துடையன | 47 | 30 |
| மாந்துளிர் போலு | 48 | 31 |
| தந்தைதாய் மிகவும் | 49 | 32 |
| நிலைபெறத் திரிந்து | 50 | 32 |
| வெட்டெனப் | 51 | 33 |
| மார்பகன் | 52 | 34 |
| மந்திர மறைகள் | 53 | 34 |
| தலையது தடிய | 54 | 34 |
| வருந்தியே தேட | 55 | 36 |
| நீளிய செய்ய | 56 | 37 |
| மேதைய லங்க | 57 | 37 |
| தெள்ளிய தியாகி | 58 | 37 |
| குறுகிய குறளன | 59 | 38 |
| அழகிய நடைய | 60 | 38 |
| சாலவே நல்ல | 61 | 39 |
| மாந்தளிர் போல | 62 | 39 |

| செய்யுள் | பாடல் எண். | பக்க எண். |
|---|---|---|
| ஊனம துடைய | 63 | 40 |
| ஆரையுந் தடுத்துப் | 64 | 41 |
| சிறிதே யொன்றும் | 65 | 41 |
| மெத்தன நடைய | 66 | 43 |
| குருகிய வுருவு | 67 | 43 |
| தெள்ளிய | 68 | 44 |
| மேதையா லக்க | 69 | 44 |
| தலையது தடிய | 70 | 45 |
| கடுகியே நடக்க | 71 | 46 |
| நீளிய செய்ய | 72 | 47 |
| மந்திர மறைகள் | 73 | 47 |
| மார்பகன் றுயர்ந்து | 74 | 48 |
| சொல்லவும் வல்ல | 75 | 49 |
| கற்றறிந் தோர்க்கு | 76 | 49 |
| பொருள்சேர் | 77 | 50 |
| ஆரையு மறிந்து | 78 | 50 |
| ஊனம துடைய | 79 | 51 |
| மாந்தளிர் போல | 80 | 51 |
| ஈன்றதாய் தந்தை | 81 | 52 |
| வெட்டெனப் பேச | 82 | 53 |
| மார்பகன் றுயர்ந்த | 83 | 54 |
| மந்திர மறைகள் | 84 | 54 |
| தலையது தடிய | 85 | 54 |
| கார்பரி களினும் | 86 | 55 |
| தலையது தடிய | 87 | 56 |
| மேதையா லங்க | 88 | 56 |
| தெள்ளிய செய்ய | 89 | 57 |
| குறுகிய புருவ மெய்ய | 90 | 57 |
| வலியபோ ரதுவி | 91 | 58 |
| மாந்தளிர் போல | 92 | 59 |
| ஊனமதுடை | 93 | 59 |
| ஆரையு மறிந்து | 94 | 60 |

| செய்யுள் | பாடல் எண். | பக்க எண். |
|---|---|---|
| சிறிதே யொன்றும் | 95 | 60 |
| அகலிய சொல்ல | 96 | 62 |
| சிந்தையில் | 97 | 62 |
| குருகிய புருவ | 98 | 63 |
| தெள்ளிய தியாகி | 99 | 63 |
| மேதைய லங்க | 100 | 63 |
| தலையது தடிய | 101 | 64 |
| கையது கடின | 102 | 65 |
| நீளிய செய்ய | 103 | 66 |
| மந்திர மறைகள் | 104 | 66 |
| மார்பகன் றுயர்ந்த | 105 | 66 |
| வெட்டெனப் பேச | 106 | 67 |
| நித்தனைத் | 107 | 68 |
| நலையின்றித் | 108 | 68 |
| சிறிதே யொன்றும் | 109 | 69 |
| ஆரையு மறிந்து | 110 | 70 |
| ஊனமில் மனத்த | 111 | 70 |
| மாந்தளிர் போலு | 112 | 70 |
| ஓதிய பொருளும் | 113 | 71 |
| வெட்டெனப் பேச | 114 | 72 |
| மார்பகன் றுயர்ந்த | 115 | 73 |
| மந்திர மறைகள் | 116 | 73 |
| நீளிய செய்ய | 117 | 73 |
| முன்னுரை யுடைய | 118 | 75 |
| தலையது தடிய | 119 | 76 |
| மேதையா லங்க | 120 | 76 |
| தெள்ளிய தியாகிய | 121 | 76 |
| குருகிய புருவ | 122 | 77 |
| வித்தையில் வலிமை | 123 | 78 |
| சீர்மையு முடைய | 124 | 78 |
| மாந்தளிர் போலு | 125 | 79 |
| ஊனமில் மனத்த | 126 | 80 |

| செய்யுள் | பாடல் எண். | பக்க எண். |
|---|---|---|
| ஆசையு மறிந்து | 127 | 80 |
| சிறிதே யொன்றும் | 128 | 80 |
| மெய்யழ குடைய | 129 | 82 |
| குருகிய புருவ | 130 | 82 |
| தெள்ளிய தியாகி | 131 | 83 |
| மேதையா லங்க | 132 | 83 |
| தலையது சூடிய | 133 | 83 |
| கற்றவுன் சிறந்த | 134 | 85 |
| பொற்கொடி மடந்தை | 135 | 85 |
| நீளிய செய்ய | 136 | 86 |
| மேதையா லங்க | 137 | 86 |
| மார்பகன் றுயர்ந்த | 138 | 86 |
| வெட்டெனப் பேச | 139 | 87 |
| குலுவுறுங் கண்ண | 140 | 88 |
| சிறிதே யொன்றும் | 141 | 89 |
| ஆசையு மறிந்து | 142 | 89 |
| ஊனபின் மனத்த | 143 | 90 |
| மாந்துளிர் போலு | 144 | 90 |

# ராசி மண்டலச் சக்கரம்

<table>
<tr>
<td>பூரட்டாதி - 4<br>உத்திரட்டாதி / ரேவதி<br>மீனம்<br>12<br>[உபய ராசி/ இரட்டை / பெண்]<br>சிரோதயம் - பிருஷ்டோதயம்<br>குரு வீடு</td>
<td>அஸ்வினி / பரணி /<br>கிருத்திகை - 1<br>மேஷம்<br>1<br>[சர ராசி/ ஒற்றை / ஆண்]<br>திரிகோணம்/ கேந்திரம்/<br>[சிரோதயம்]<br>செவ்வாய் வீடு</td>
<td>கிருத்திகை-2, 3, 4<br>ரோகிணி / மிருகசீரிஷம்-1, 2<br>ரிஷபம்<br>2<br>[ஸ்திர ராசி/ இரட்டை / பெண்]<br>பிருஷ்டோதயம்<br>சுக்கிரன் வீடு</td>
<td>மிருகசீரிஷம்-3,4/<br>திருவாதிரை/<br>புனர்பூசம் - 1, 2,3<br>மிதுனம்<br>3<br>[உபய ராசி/ ஒற்றை / ஆண்]<br>சிரோதயம்<br>புதன் வீடு</td>
</tr>
<tr>
<td>அவிட்டம் - 3,4/ சதயம் /<br>பூரட்டாதி - 1, 2, 3<br>கும்பம்<br>11<br>[ஸ்திரராசி/ ஒற்றை/ ஆண்]<br>சிரோதயம்<br>சனி வீடு</td>
<td colspan="2" rowspan="2">ஓஜை ராசிகள் / ஆண் ராசிகள்<br>1. மேஷம், 2. மிதுனம், 3. சிம்மம், 4. துலாம்,<br>5. தனுசு, 6. கும்பம்<br><br>ராசி மண்டலம்<br>(12 ராசிகள்-27 நட்சத்திரங்கள்<br>யுக்மராசிகள் / பெண் ராசிகள்<br><br>1. ரிஷபம், 2. கடகம், 3. கன்னி,<br>4. விருச்சிகம், 5. மகரம், 6. மீனம்</td>
<td>புனர் பூசம்-4/ பூசம் /<br>ஆயில்யம்<br>கடகம்<br>4<br>[சரராசி/ இரட்டை / பெண்]<br>கேந்திரம் / பிருஷ்டோதயம்<br>சந்திரன் வீடு</td>
</tr>
<tr>
<td>உத்திராடம்-2, 3,4/<br>திருவோணம்/அவிட்டம் - 1, 2<br>மகரம்<br>10<br>[சரராசி/ இரட்டை/பெண்]<br>கேந்திரம் - பிருஷ்டோதயம்<br>சனி வீடு</td>
<td>மகம் / பூரம் /<br>உத்திரம் - 1<br>சிம்மம்<br>5<br>[ஸ்திர ராசி/ஒற்றை /ஆண்]<br>திரிகோணம் / சிரோதயம்<br>[illegible]ன் வீடு</td>
</tr>
<tr>
<td>மூலம் / பூராடம் /<br>உத்திராடம் - 1<br>தனுசு<br>9<br>[உபய ராசி / ஒற்றை /ஆண்]<br>திரிகோணம் - பிருஷ்டோதயம்<br>குரு வீடு</td>
<td>விசாகம் -4/ அனுசம் /<br>கேட்டை<br>விருச்சிகம்<br>8<br>[ஸ்திரராசி/இரட்டை/பெண்]<br>பிருஷ்டோதயம்<br>செவ்வாய் வீடு</td>
<td>சித்திரை- 3,4/ சுவாதி /<br>விசாகம் - 1, 2,3<br>துலாம்<br>7<br>[சரராசி / ஒற்றை / ஆண்]<br>கேந்திரம்-சிரோதயம்<br>சுக்கிரன் வீடு</td>
<td>உத்திர[illegible]4/ ஹஸ்தம் /<br>[illegible]ரை-1, 2<br>[illegible]னி<br>[illegible]<br>[உபய ரா[illegible]ட்டை / பெண்]<br>[illegible]யம்<br>[illegible]டு</td>
</tr>
</table>



0586